உ

சிவமயம்.

ஊற்றத்தூர் என்கின்ற

# இரத்தினபுரிப்புராணம்.

தீர்த்தகிரித்தேசிகரால்

செய்யப்பட்ட மூலமும்

திரிசிரபுரம் மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்

மாணாக்கருளொருவராகிய வல்லம்

தி. கந்தசாமிஉபாத்தியாயரால்

செய்யப்பட்ட பொழிப்புரையும்

பெரம்பலூர்தாலூகாதேவஸ்தானம்கமட்டியார்களில்

தலைமைபெற்ற வெங்களம் நாட்டுப்பெரிய

முத்துவிஜயமாச்சிரெட்டியார்

அவர்களும்

உறையூர் நாச்சிக்குறிச்சி மகா-ா-ா-ஸ்ரீ

தா. நாராயணபிள்ளையவர்களும்

வேண்டிக்கோடலினால்,

திருவாதி

A. பஞ்சாபகேசய்யரவர்களது

"கீர்வாண வாணீ விலாஸ அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

1891.

# அறிக்கை.

—(0)—

இந்தஸ்தலம் தேவாரப்பதிகம் பெற்றினோயி னும் திருநாவுக்கரசுசுவாமிகள் வாய்மலர்ந்தருளிய க்ஷேத்திரக் கோவையிலுள் அமைந்திருக்கின்றது. அதனைப் பின்வருஞ் செய்யுளான் உணர்க.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நறையூரிற் சித்தீச்சரநள்ளாறு நாரையூர் நாகேச்சர
நல்லூர் நல்ல
துறையூர்சோற்றுத்துறை குலமங்கை தோணிபுரந்துருத்தி
சோமீச்சரம்
உறையூர் கடலொற்றியூ ரூற்றத்தூ ரோமாம்புலியூ
ரோரேடகத்துங்
கறையூர் கருப்பறியல் கன்றாப்பூருங் கயிலாயநாதனையே
காணலாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.



சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இரத்தினபுரிப் புராணம்

மூலமும் உரையும்

## காப்பு.

### கலிவிருத்தம்.

தழைசெவிப் புகர்முகத் தந்திமும் மதம்
பொழிபிறை யெயிற்றுடன் புழைக்கரத்தினன்
மழைதவழ் தண்டலைவளர் சம்பாபுரத்
தழகிய பிள்ளையாரடியைப் போற்றுவாம்.

[illegible](இ-ள்.) தழைக்கின்றதும் பொறிகளை
படர்ந்த [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] முடிக்கின்ற [illegible]

ன்ற மூன்றும் பிறையையொத்த தந்தங்களுடனே துவாரம் பொருந்திய துதிக்கையு முடையவரும மேகங்கள் தவழ்கின்ற சோலைகள் வளர்ந்த சமாபுரத்தில் வீற்றிருக்கும அழகிய பிள்ளையாரென்னும பெயரை யுடையவருமாகிய விநாயககடவுளினது திருவடிகளை வணங்குவாம. என்றவாறு யாம என்னுந் தோன்றாஎழுவாய வணங்குவாம் பயனிலை திருவடியைச செயபபடுபொருள. (௧)

இதுவுமது.

கலிநிலைத்துறை.

புத்தியானது கல்வியுஞ் செல்வமும் பொருந்த
முத்திசோவுறுமபடி சிவ ஞானமு மோங்க
அத்திமாமுகத் தழகியபிள்ளையார் பாதத்தைப
பத்தியாகியே சிரந்தனிற் பணிந்து போற்றுதுமே.

(இ-ள்.) புத்தியும் வித்தையும் செல்வமும் பொருந்தவும மோட்சத்தையடையும்படி சிவஞானமோங்கவும யானைமுகத்தையுடைய அழகியபிள்ளையார் பாதங்களைப பத்திகொண்டு சிரத்திற் பணிந்து போற்றுவாம. எ-று. (௨)

திறைகொண்டவிநாயகர்.

அறுசீரக்கழிநெடிலடிஆசிரியவிருத்தம.

நந்தார் வயல்சூழ் நநதை நதி நந்தாபுரத்துப புரா
ணத்தைத், நந்தாவண்மை நடெதனகலையா னந்தாலுற
விற் கூறுதறகுத, தந்தாவளஞ்சோ மணிச்சிரத்து
த் தழற்கணுகந் தனைப்பூண்ட, தந்தா வளந்தானெ
ண நீளுந்தன்னைத் திறைகொள் விநாயகனே.

(இ-ள்.) சங்குகள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த நந்தைநதி விளங்கிய நந்தாபுரத்தின் புராணத்தைக்.

டாதவண்மையாகிய தமிழினால் எம்முடைய நா
ற்பொருந்தச் சொல்லுதற்கு வெண்மைமிகுந்தத
தங்கள்சேர்ந்த கருமையானதலையையும் அக்கினிம
யமாகியகண்களையும் பருத்த சரீரத்தையும் படைத்
தயானையேதானென்று சொல்லும்படி நீண்டவனாகி
யகஜமுகாசுரனை வெற்றிகொண்ட விநாயகக்கட
வுளைவணங்குவாம். எ-று. (ரு)

பாயிரம்.
சுந்தவிரத்தினேசுவரர்.
மேற்படி வேறு.

பொன்கொண்ட சிலையானைப் புலியதளின் கலையா
னைப் பொருப்பின்வந்த, மின்கொண்ட விடத்தா
னை யிரத்தினபுரி யிடத்தானை விமலனைக், கொ
ன்கொண்ட படையானைக் கோலமழ விடையானைக
குலவுநாக, மன்கொண்ட பணியானைத் துய்யமா
மணியானை வணங்குவோமே.

(இ-ள்) மகமேருவை வில்லாக உடையவரும் பு
லித்தோலை வஸ்திரமாகத் தரித்தவரும் பருவதராஜ
ன் புத்திரியாகிய உமாதேவியாரை இடப்பாகத்தி
லுடையவரும் இரத்தினபுரியை இடமாகக் கொண்
டவரும் மலரகிதனுயுள்ளவரும் பகைவர்களுக்கு அ
ச்சத்தை விளைவிக்கின்ற சூலப்படையை யுடையவ
ரும் அழகும் இளமையும் வாய்ந்த இடபவாகனத்
தையுடையவரும் தாருகாவன இருடிகளால் ஏவிய
சர்ப்பத்தை நிலைபெற்ற ஆபரணமாகக் கொண்டவ
ரும் ஆகிய துய்யமாமணியாரென்னும் பெயரை
யுடைய சுத்த விரத்தினேசுவரரை வணங்குவாம்.
எ-று. (சு)

# இரத்தினபுரிப் புராணம்.

சமாபதி யம்மை.

மேற்படிவேறு.

வேதன்மகிழ வரங்கொடுக்கும் விமலர் துய்யமாப்
ணியென், னாதரிடத்திற் குடிகொண்ட நங்கைமுரு
கன் றனையீன்ற, மாதியாமி யகிலாண்ட வல்லியா
குஞ் சமாபதியார், பாதகமலம் பணிந்தேத்திப் பா
தகமலப் பற்றறுப்பாம்.

(இ-ள்) பிரமதேவன்மகிழத்தக்க வரங்களைக்கொடுக்கும் விமலனாகிய துய்யமாமணியென்னும் எனனாதரிடத்திற் குடிகொண்டவரும் முருகக்கடவுளைப் பெற்ற தாயரும் இயாமியென்கின்ற அகிலாண்டவல்லியாரும் சமாபதியென்னும் பெயரை யுடையவருமாகிய என்னுடையவினது திருவடித் தாமரைகளை வணங்கித் துதிசெய்து கெடுதியை விளைவிக்கின்ற மும்மலப் பற்றுக்களையும் ஒழிப்பாம். எ-று. (உ)

விநாயகர்.

விடங்கொண்டமரர் குலைவாழ வெள்ளிவரையி லு
மையுடனே, யிடங்கொண்டவரை வலங்கொண்டே
யினியகனியைத் தனிவாங்கும, படங்கொண்டிலங்
கும் பணியகட்டுப் பகட்டுமுகத்துக் காரனைய, கட
ங்கொண்டிருந்த கணபதிதன் கமல பதத்தை வண
ங்குவாம்.

(இ-ள்) தேவர்கள் குலம் உயிர்வாழ்ந்திருக்க ஆலகாலவிடத்தை யுண்டு கைலாயகிரியை இடமாகக் கொண்டு உமாதேவியாரோடு எழுந்தருளிய பரமசிவனைப் பிரதக்ஷணம்பண்ணி மதுரமாகிய ஒப்பற்ற கனியை வாங்கிய படத்திறைம் பிரகாசிக்கப்பட்ட அரவக்கச்சை கட்டிய வயிறும் யானை முகமும் மேக

த்தை யொத்துப் பொழிகின்ற மதசலமும் உடைய விநாயகக் கடவுளினது செந்தாமரை மலர்போன்ற பாதங்களை வணங்குவாம். எ.று. (௩)

முருகக்கடவுள்.
கலிநிலைத்துறை.

பீதகந்தனை யுடுத்தவ னுதவிய பிரமன்
வேதகந்தனைத் தரித்தவன் மேனியி லுறையு
மாதகந்தனை மகிழ்வுசெய குமரனை நமது
பாதகந்தனைத தவிர்த்திடுங் கந்தனைப் பணிவாம்.

(இ-ள்) பொற் பீதாம்பரத்தைத தரித்த மகாவிஷ்ணுவினாற பெற்ற பிரமதேவனுடைய வேதச் சிரமென்னுங் கபாலத்தை யேந்திய சிவபெருமான் திருமேனியையே தனக்கு இடமாகக் கொண்ட மாதாகிய உமாமகேஸ்வரியினுடைய இருதயத்தை மகிழ்வுசெய்கின்ற குமாரனாயுள்ளவரும் நம்முடைய பாதகங்களையெல்லாம தவிர்த்து ஆண்டருளும் கந்தனென்னும் பெயரை யுடையவருமாகிய முருகக்கடவுளை வணங்குவாம. எ-று. (௪)

வீரபத்திரர்.

ஆரபத்திரம் வில்வபத்திரமுட னணிந்தோன்
றாரபத்திர மாகிய வுமைமுனிந்தருளக்
கோரபத்திரங் கொண்டு தக்கன் றலைகொய்யும்
வீரபத்திரனடியிணை விரும்பியே பணிவாம்.

(இ-ள்) ஆத்திப்பத்திரத்தை வில்வபத்திரத்துடன் அணிந்த பரமசிவனுடைய மனைவியாகிய அழகிய உமையம்மை கோபங்கொண்ட மாத்திரத்தில் பார்ப்பவருக்கு அச்சத்தை விளைவிக்கின்ற வாளாயுதத்தைக் கொண்டு சிறுவிதியாகிய தக்கன்றலையை

அறுத்த வீரபத்திரக் கடவுளினது பாதங்களை வி(
ம்பிப் பணிவாம். எ-று. (ரு

திருஞான சம்பந்த சுவாமிகள்.
அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

கண்ணாயிரவர் பணிந்தேத்துங் கடம்பவனத் திற(
மன்றுநர், எண்ணாயிரவர் கழுவேற வேடுத்திய
வென்றிரேறு, பண்ணாயிரமாயி னிசைத்தமிழ்மழை
பயின்ற ஞானசம்பந்தர், தண்ணாரிரண்டு பதம
ணியத் தருமோராயம் பதத்தினையே.

(இ-ள்) ஆயிரங் கண்களையுடைய இந்திரனால
ன் பணிந்து அர்ச்சிக்கப்பட்ட கடம்பவனமென
னும் மதுரையில் சமணராயுள்ள எண்ணாயி
ரவர் கழுவிலேறவும் பிரதாபத்துடனே இசையாக வி
சைக்கப்பட்ட தமிழ்ப் பதிகங்களை (பேராகமாகத்
பூண்டுமலையான) என்று புகழ அதிகாரமுடைய
தேவாரமெழுதிய ஏடு வைகையாற்றில் எதிரேற
வும் அநுக்கிரகஞ்செய்த திருஞான சம்பந்த சுவா
மிகளினது பிறவிவிடாயை நீக்கும் குளிர்ந்தமலா
ய்ந்த இரண்டு திருவடிகள் பணிந்தால சாயுச்சிய ப
தவியையே தந்தருளும். எ-று. (௯)

திருநாவுக்கரையர்.

கலையாப் புலித்தோற் றரித்தவன்பாற் காசு மிழலை
தனில்வாங்கி, நிலையா யடியா ரீட்டேற நிறைத்த த
மிழை யறைந்தோதிச், சிலையாரலையின் மிதந்தேற
ச் செனனக் கடலேறிக் கயிலை, மலையார் திருநாவு
க்கரசை மகிழ்வாலென்றும் வணங்குதுமே.

(இ-ள்) புலித்தோலை ஆடையாகத் தரித்த பரம
சிவனிடத்துத் திருவீழிமிழலையில் படிக்காசு பெ

ற்று நிலைபெற்ற சிவனடியார்கள் ஈடேறவும் நிறை ந்த தமிழ்ச் சொல்லினால் (சொற்றுணை வேதியன்) என்னும் முதற்குறிப்புள்ள பதிகமோதிப் பொருந் திய அலைகளையுடைய சமுத்திரத்தில் கற்றூணை த்து மிதந்தேறவும் செனனக் கடலைக் கடந்து கயிலை மலையென்னும் நிலையையடைந்த அப்பர் சுவாமிகளை மகிழ்வுடன் எப்பொழுதுமவணங்குவாம். எ-று (எ)

திருநாவலூரர்.

கிரணம்பொருந்து முடிசூடுங் கேள்விசேர் சுந்தரப் பெருமான், கரணம் பரந்தகு மறிவரிதாங் கமலால யத்தி லரவணியா, பரணாந் சிறந்த முடியோனைப் ப ரவைமனைக்கு நசெலவென்றே, சரணஞ்சிவக்கத் த மிழுரைத்தோன் சரணஞ் சரணந் தானமக்கே.

(இ-ள்) பிரகாசம் பொருந்திய கிரீடத்தைத் தரி த்த சிவபெருமானால் நற்கேள்விகளை யடைந்த சுந் தரப் பெருமானென்னும் நாமத்தை யுடையவரும் கமலாலயமென்னும் திருவாரூரில் அந்தகரணங்க ளுக்கு மறிவரிதாகிய சர்ப்பாபரணஞ் சிறந்து விள ங்குஞ் சடையை யுடையோனை புற்றிடங்கொண் டானைப் பரவை நாச்சியார் வீட்டுக்குப் பாதஞ்சிவ க்கத் தூதுபோமென்று தமிழ்ப்பதிகம் சொன்னவ ரும் ஆகிய நம்பியாரூரருடைய திருவடிகள் எந்நா ளும் நமக்குப் புகலிடமாம். எ-று. (அ)

திருவாதவூரர்.
கொச்சகக் கலிப்பா.

ஒருவாத சிவஞானத் துண்மையினாற் றமிழ்மறைத் து, மருவாத புறச்சமயப் புத்தருடன் மாறுகிப், பெ ருவாது வென்றவரைப் பிறங்குவெண்ணீ றணிவித் த திருவாத வூரிரு திருத்தாளைப் பரவுதுமே.

(இ-ள்) நீங்காத சிவஞானத்து உண்மையினாலே தமிழை யுரைததுப் பொருந்தாத புறச்சமயிகளான புத்தருடன் பகையாகிப் பெரியவாதினால் வென்று அப்புத்தர்களைப் பிரகாசிக்கின்ற வெள்ளிய திருநீற ணியும்படிசெய்வித்த திருவாதவூரனென்னும் மாணி க்கவாசக சுவாமிகளது அழகிய இரண்டு பாதங்களை யுந் துதித்து வணங்குவாம். எ-று. (கூ)

தண்டியடிகள்.

குருகாலுந் திருச்சேய்ஞலூர் தன்னின் மணற்கு
விததுக,கருநாளகண்டனெனக் கண்டாவின் பாலாட்
டி, யொருநாலுஞ் சிவபதத்தை யொழியாமற் பெற
றதாதை, யிருகாலுந் தடிந்தானை முக்காலு மிறை
ஞ்சுதுமே.

(இ-ள்) பறவைகள நிறைந்து ஒலிக்கின்ற சோ லைசூழ்ந்த திருசசேயஞலூரில பசுக்களாகிய நம் மை யாள்கின்றபதி கருத்த காளகண்டத்தை யுடை ய பரமசிவனேயென்று துணிந்து மணலைச் சிவலி ஙகமாகக் குவிததுததாம் மேய்தத பசுவின் பாலை அச்சிவலிங்கப பெருமானுககு அபிடேகிதது ஒரு காலுஞ் சிவபததகதை நீங்காமற றுமபெற எச்சதத் தனென்னும் தந்தையின் இரண்டு காலைத் துணித் தவராகிய தண்டீச நாயனாரைத் திரிகாலமுந்துதித் து வணங்குவாம். எ-று. (௰)

காளி.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

கோகனகமயிலடியும் வாணியெனுங் குயிலடியுங் கு
றித்துப் போற்றி, யாகமஞ்சே ரிரத்தினபுரிப் புரா
ணத்தைத் தமிழ்மொழியா லடைவிற்கூற, யோகினி
டாகினி யடியார்க்கிட்ட காமிய முதவு முதல்வியா
கும், வாருபுனை வடக்கு வாய்ச்செல்வியெனுங்
ளிபதம் வணங்குவோமே.

(இ-ள்.) தாமரை மலரில் வீற்றிருக்கின்ற மயிலையொத்த திருமகள் பாதத்தையும் கோகிலம்போன்ற இசையையுடைய கலைமகள் திருவடியையும் நினைந்துத் துதிபண்ணிப் பின்னர் ஆகமானுட்டானஞ் சேர்ந்த இரத்தினபுரிப் புராணத்தைத் தமிழ்மொழியினாலே பொருந்தச் சொல்லுதற்கு யோகினி இடாகினி என்னும் நாமத்தைப் பெற்று அடியார்களுக்கு இஷ்டகாமியங்களைத் தந்தருளும் முதல்வியாகிய வெற்றிமாலையை அணிந்த வடக்குவாய்ச் செல்வியென்னும் காளிதேவியினது திருவடிகளை வணங்குவாம். எ-று. (௧௧)

அடியார்கள். கலிவிருத்தம்.

விரைசெயுந் திருவில்வ வனஞ்சமா
புரமிரத்தினபுரி பஞ்சமங்கலம்
பொருவினந்தாபுர மெனுமுறையின்
மருவுதொண்டர் மலர்ப்பதமேத்துவாம்.

(இ-ள்) வாசனையைவீசுகின்ற அழகிய வில்வவனமென்றும் சமாபுரமென்றும் இரத்தினபுரியென்றும் பஞ்சமங்கலமென்றும் ஒப்பில்லாத நந்தாபுரமென்றுந் துதித்து நல்லொழுக்கத்துடன் உறைமா நகரில் இருக்கின்ற சிவனடியார்களுடைய மலர்போன்ற திருவடிகளைத் தோத்திரஞ் செய்வாம். எ-று. (௧௨)

ஆசிரியர்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீரங்கமாகிய வைகுந்தவாசனு மயனுந் தேடிக்காணாச், சீரங்கமா முடியோன்றனை யெளிதிற் காட்டியும் பேய்த்தேரைத் தாவுஞ், சாரங்கமெனப் பலஞ்சாரா துயிர்க டழைக்க வருடருங் குடந்தைச், சாரங்க தேசிகேந்திரசாமி தன்மலர்த்தா டலைமேற்கொள்வாம்.

(இ-ள்) செல்வமே சபையாக அதனுள் எழுந்தருளியிருக்கின்ற வைகுந்தவாசனாகிய திருமாலும் பிரமதேவனுந் தேடிக்காணாத சிறப்பும் அழகும் வாய்ந்த கங்கையைப் பெருமை தங்கிய முடியினிடத்துடைய பரமசிவனை எளிதிற் காட்டிக் கானலை நீரென்று கருதித் தாவிச்செல்கின்ற மானைப்போலப் பிறப்பிலே சோர்தவண்ணம் ஆன்மகோடிகளுக்கு அனுக்கிரகஞ்செய்யுங்குடந்தையென்னும் கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் சாரங்கதேசிகேந்திர சுவாமியென்னுஞ் சற்குருவினுடைய மலர்போன்ற பாதங்களைச் சிரமேற்கொள்வாம். எ-று.

நூல் செய்தற்குங் காரணம்.

ஆர்த்தலை நீர்சுருட்டாழி சூழ்புவிக்குட் டென்கயிலை யாமிதென்னக், கூர்த்த மெய்ஞ்ஞானி யருணருமிரதினபுரிப்புராணத்தைக் கூறவேண்டுஞ், சீர்த்திபெறத் தமிழுரையா லென்றூறை நாட்டவர்தாஞ் செப்பலாலே, தீர்த்தகிரித் தேசிகனென் றையாற்றில வாழ்வனுரை செய்ததாமால்.

(இ-ள்) சத்தித்து அலைநீரைச் சுருட்டுகின்றசமுத்திரஞ் சூழ்ந்த உலகத்தினுள் இதுதென்கயிலாயமென்று அறிவினையுடைய மெய்ஞ்ஞானியர்களால் அறிகின்ற இரத்தினபுரிப்புராணத்தை மிக்கபுகழைப்பெறத்தமிழ்மொழியினாற் சொல்ல வேண்டுமென்று துய்யமாமணியார் அடியவர்களாகிய ஊறைவளநாட்டார் அனைவரும் வேண்டிக்கோடலினால் திருவையாற்றில் எழுந்தருளிய தீர்த்தகிரித்தேசிகரால் அருளிச்செய்ததாகும். எ-று. (௧௪)

அவையடக்கம்
கொச்சகக்கலிப்பா.

அழுக்குடைய பாண்டத்தி லமுதமுறைந்திடலத
னை, யொழுக்கமுடனோர்சிக்கதத்துறவேற்றிப் போ
ற்றுதல்போல், வழுக்கிடினுஞ் சுத்தவிரதநினமணி
யிதனு ளிருக்கையினால், இழுக்குரையா ரொன்கவி
தைக இவ்வுலகிற் பெரியோரே.

(இ-ள்) அழுக்குமயமாகிய மண்பாண்டத்தில்பா
ல் இருந்தால அப்பாண்டத்தை ஆசாரத்துடன் ஓர்
உறியிற் பொருந்த வேற்றிய பாதுகாத்துக் கொளவ
துபோல என்றுற்சொல்லப்பட்ட பனுவலானது
குற்றமுடையதாயிருப்பினும் அக்கவியினுள் சுத்த
விரத்தின மணியானது இருப்பதனால் இவ்வுலகத்
திலுள்ள பெரியோர்கள் என் கவிகளுக் குற்ற மு
ரையார்கள். எ-று. (கரு)

மொழி பெயர்ந்த விதம்.
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

தலம்வேத னகங்காரம பூசை வரம பெறுவிழாத்
தானடாததல், நலம பெருபபேய் தீர்ந்தரு னப
லன் றேவகிரி நந்தையாறு, 'பலப்பேறுந்தீர்த்த
மணிநீறு பஞ்சாட்சர மிவைகள் பதினொன்றாக,
நிலப்பேறு மனிதரெல்லா மீடேறும் படியிதனை நி
ரப்பினேமே.

(இ-ள்) தலவிசேடச்சருக்கம் பிரமதேவ னகங்
காரச் சருக்கம் சிவபூசைச்சருக்கம் வரம்பெறுசருக்
கம் திருவிழாச்சருக்கம் பிசாசுவிமோசனச்சருக்கம்
தானபலச்சருக்கம் தேவகிரிச்சருக்கம் நந்தாநதிச்ச
ருக்கம் தீர்த்தச்சருக்கம் விபூதியுருத்திராக்ஷச்சருக்
கம் ஆகப்பதினொருசருக்கமாக இவ்வுலகிலுள்ள மா

னிடர்களெல்லாம் ஈடேறும்படி இந்த நூலினைச் சொன்னோம். எ-று. (கசு)

## நூற்பயன்.

இந்தவகையா மினிய விரதத்தினபுரிப் புராணத்தை யினிது கேட்டோர், சிந்தை தனிலுறக் கற்றோர் கூறுமவர்க் குபகாரஞ் செய்தபேர்கள், புந்திதனி னினைந்தபடி கருமங்கண் முடிந்து செல்வம் பொருந்தி வாழ்ந்தே, யந்தமலர்க்கயிலைதனை யடைந்து முந்தி சேர்வருண்மை யாகுந்தானே.

(இ-ள்) இவ்வாறாகிய இனிதான இரத்தினபுரிப புராணத்தைச்சிரத்தையாகக்கேட்டபேர்களும் அகத்திற் பொருந்தக் கற்றபேர்களும் இப்புராணத்தைப் படிப்பவர்க்கு உபகாரஞ்செய்தபேர்களும் தங்கள் மனதில் நினைத்த காரியங்களெல்லாம் முடிவுபெற்று இவ்வுலகில் மிக்க செல்வத்துடன் வாழ்ந்து பின்னர் இடமகன்ற கைலயங்கிரியைச் சேர்ந்து நித்தியாநந்தமாகிய மோட்சத்தைப் பெறுவார்கள் இதுசத்தியமாகும். எ-று. (கஎ)

## அரங்கேற்றிய காலமுமிடமும்.

### மெற்படி வேறு.

உரைத்திடுஞ் சகாந்த மோராயிரத் தைஞ்ஞூற்றே ழிலோது, நிரைச்செயவருடந் தைப்பூசத்தினி னிறைந்த விரத்தின, புரிப்புராணந்தான் றுய்யமாமணிப் புனிதர்முன்னே, விருப்புட னரங்கேற்றிப் பின் மெய்ம்மையாய் விளங்கிற்றன்றே.

(இ-ள்) இந்த இரத்தினபுரிப் புராணமானது அறிவுடையோரால் எடுத்துரைக்கப்பட்ட சாலிவாகன சகாத்தம் ஆயிரத்தைஞ்ஞூற் றேழின்மேற் செ

ல்லாநின்ற ஜயவருடம் தைமாதம் பூசநாளில் அழகு நிறைந்த துய்யமாமணீசுவரர் சந்நிதிமுன்பாக விருப்புடன் அரங்கேற்றிப் பின்னர் சத்தியமாக உலகத்தில் விளங்கியது. எ-று. (௧௮)

பாயிரமுற்றிற்று.

காப்புள்படச் செய்யுள்—21.

---

சிவமயம்

முதலாவது

# தலவிசேடச்சருக்கம்.

கலிநிலைத்துறை.

திருவரந்தரு முனிவரா லொருகுதியே சிறக்கும், ஒருவசிக்கின்றபோ ரியாவர்க்கு நலவுணர் வோங்குந், தருவிளங்கியே நல்லறந் சிறந்திடுந் தரைமேல, அருள சிறந்தவர்க ளுறையுளா நைமிசாரணியம்.

(இ-ள்) ஆன்மகோடிகளுக்குச் சிறந்த வரங்களைக் கொடுத்தருளும் முனிவர் கூட்டத்தினாற் சிறந்துள்ளதும் தன்னுள் வசிப்போர் இயாவர்க்கும் ஒரேதன்மையாக நலவுணர்வை வளர்விப்பதும் மந்தாரம் பாரிசாதம் வில்வம் பாடலம் முதலாகிய விருட்சங்களாற் பொலிவடைந்து நல்லறத்தினாற் சிறந்துள்ளதும் இவ்வுலகில் அருளினாற் சிறந்தவர்கட்கு உறைவிடமாயுள்ளதுமாகும், நைமிசாரணியம். எ-று (௧)

அந்த வாச்சிரா மந்தனி லத்திரி வசிட்டன், முந்து
கோசிகன் பாரசான் பரத்துவ முனிவன், சிந்தைதா
ன் மகிழகத்தியன் புலத்தியன் சிறந்த, புந்தியாலு
யர்காசிபன் சௌனகன் பொருந்தி.

(இ-ள்) இருடிகள் ஆளுகை செல்லுமிடமாகிய அந்த நைமிசாரணியத்தில் அத்திரி வசிட்டர் வேத காயத்திரிக்கு முதல முனிவனாகிய விசுவாமித்திர பராசரர் பரதுவாசர் சிவானந்த மகிழ்ச்சியடைந்த அகத்தியர் புலத்தியர் அறிவாலுயர்ந்த காசிப சௌனகர் என்னும அபிதானம் வாய்ந்த முனிவர்கள் பொருந்தி. எ-று. (௨)

இன்னு மற்றுள விருடிகளனைவரு மிருந்து, மன்னு
சூதமாமுனிவனுக் காசனம் வழங்கிய பினனு ஞான
மறை பகுத்துடனெடுத்துறும் புராணந், தனையோ
தெனக் கேட்டுள மகிழ்வர் சந்ததமும.

(இ-ள்) மேற்சொன்ன முனிவர்களன்றி மற்று முள்ள இருடிகளனைவரு மிருந்து நிலைபெற்ற சூத மகாமுனிவருக்கு ஆசனங்கொடுத்து அதிலெழுந் தருளப்பண்ணி ஞானமறைகளுமசொல்லுகின்ற பதினெண்புராணங்களைத் தேவரீர் திருவாய்மலர்ந் தருள வேண்டுமென்று கேட்க அவர்சொல்ல அப் பொருளை உணர்ந்து தினமும மகிழ்வடைவார்கள். எ-று. (௩)

ஒருதினத்தினிற் சௌனகன் சூதனை யுவந்து
பரவிநலலறப் படிவமே யாகமப பயிரோ
விரவு ஞானமாம பாதவம பழுத்த மெய்க்கனியே
உரவுமோர்பொருள் செப்பிடவேண்டு மென்றுரை
த்தே.

(இ-ள்.) இவ்வாறு அமர்கின்ற நாட்களுள் ஓர்நா

ள் சௌனகர் எழுந்து சூதமாமுனிவர் சந்நிதியினி ன்று விரும்பித் துதிசெய்து நல்ல தருமசொரூபி யாயுள்ளவரோ ஆகமமாகிய பயனுண்டாகும் பைங் கூழாயுள்ளவரோ அறிவுடையோருள்ளத்திற் கலந்த ஞானமாகிய விருட்சம் பழுத்த உண்மைக்கனியாயு ள்ளவரோ அடியேற்கு அறிவை வளர்க்கின்ற ஒரு ண்மைப பொருளை விளம்பிடவேண்டுமென்றுசொ ல்லி. எ-று. (ச)

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

அப்பொருளேதெனவினவிற சிலாதரர்க்கு விழிய ளையவருட்குமார, மெய்பபொருளாகிய நந்திகேசர் சனற்குமாரற்கு விளம்பினுரொன், றெப்பொருட்கு மேலான சமாபுரநந்தாபுரத் தினியற்புராணத், தப் பொருளை விரிந்துரையா துரைத்தீரிபபொழுது வி ரித்துரைத்தல் வேண்டும.

(இ-ள்.) அப்பொருள் இயாதென வினவில் சி லாதரற்கு விழியளைய அருட்குமார மெய்ப்பொரு ளாகிய நந்திகேசர் சனற்குமாரற்கு எவ்வகைப்பட் டபொருள்கட்கு மேலான சமாபுரமென்னு நந்தாபு ரத்தின் அழகிய புராணத்தை விளம்பினுரொன்று அ ப்புராணத்தின் உட்பொருளை விரித்துச்சொல்லாம ற் சுருங்கச்சொன்னீர் அதனை இப்பொழுது விரித் துச் சொல்லவேண்டும். எ.று. (ரு)

ஆனசமாபுர நந்தாபுர மதனினடைவு மதன்றீர்த்தந் தானு, மானசமேபொருந்து துய்யமாமணி யீசுரா தனில வரவுதானு, மோன சமாதிகளிருக்கு மு னிவர்கண மவனுறையு முதன்மைதானு, ஞானச மாகுண முனியே விளம்புகெனச் சூதமுனி நவில லுற்றுன்.

(இ-ள்.) அவ்வண்ணமான சமாபுரமென்னும் நந்தாபுரத்து மகத்துவத்தையும் அந்நந்தைநதியின்மகிமையையும் ஆன்மகோடிகள் உள்ளந்தோறு முறைகின்ற துய்யமாமணீசுரர் அதில்வந்தவரலாற்றையும்மௌனசமாதியிலிருக்கின்ற முனிவர் கூட்டங்கள் அவ்விடத்தில் வசிக்கின்ற தன்மையையும் ஞானசமாகுணம் பொருந்திய முனிசிரேஷ்டனே சொல்லக்கடவதாகவென்று சவுனகர் கேட்கச் சூதமகாமுனிவரானவர் சொல்லத்தொடங்கினூர். எ-று. (சு)

முன்னமே நந்தீசர் சனற்குமாற் குறைத்தபடி மொழிவன் கேண்மோ, சந்நிதானத்துடனே சிவன் விரும்பி யுறையு மந்தச் சமாபுரந்தான், மன்னவே சிறந்த பஞ்சமங்கலமென்னும் பெயரான் மருவலாலே, கன்னமே விரும்பு பஞ்சாக்கரவடிவா மதனிலைமை கழறுகேனே.

(இ-ள்.) முன்னாளில் நந்திகேசுரர் சனற்குமாரற்குச் சொல்லியபடியே சந்நிதானத்துடன் பரமசிவன் விரும்பி யுறைகின்ற சமாபுரமானது நிலைபெற்ற பஞ்சமங்கலமென்ற சிறந்த பெயரைப்பெற்றதனூற் செவியினிடத்து விரும்பிக் கேட்கப்பட்ட பஞ்சாட்சர சொரூபமாகும் ஆதலால் அதன் மகிமையைச் சொல்லுகிறேன் நீ விருப்புடன் கேட்பாயாக. எ-று. (எ)

வரையுடனே நதிதீர்த்தம் வனம்புரமென்றைந்துவகை மருவலாலே, யுரைசெயவாயின பஞ்சமங்கலமென்றெவ்விடத்தே யுலகத்தென்னில், விரைசெறி காவேரிநதிக் குத்தரமாய் விளங்குமி யோசனைதூரத்திற், குரைசெறியும் பைரவி யாரணியத்துக் கோர் வாயுகோணமாகும்.

(இ-ள்.) மலை ஆறு தீர்த்தம் வனம் புரம் என்னும் இவ்வைந்தும் பொருந்தி யிருத்தலாற் பஞ்சமங்கலம் என்னும் பெயர் வாய்ந்தது அப்பஞ்சமங்கலம் உலகத்தில் எவ்விடத்தில் உள்ளதெனில் வாசனை நெருங்கிய காவேரி நதிக்கு வடபாகத்தில் ஓர் யோசனை தூரத்திற் பிரகாசிக்கும். அன்றியும் பைரவி ஆரணியத்திற்குவாயுகோணமாகும் .எ-று. (அ)

அவ்விடத்தில் வில்வவன மந்தவனத்திடைத் தேவ
கிரியாம் வெற்புச், செவ்விடத்தே தருதேவதீர்
த்த மதன்மருங்கிற் சிறந்தநந்தை, யெவ்விடமு நி
கரில்லாச் சமாபுரமா மிரத்தினபுரமிமையோர்வாழ,
வெவ்விடத்தை யுண்டபிரான் பதிவெள்ளிக்கிரி
போல விரும்பி மேவும்.

(இ-ள்.) அந்தவிடத்தில் வில்வவனமென் றொன்றுண்டு அந்தவனத்திடைத் தேவகிரியென்றோர்மலையுண்டு அம்மலையின் பக்கத்தில் தேவகாதீர்த்தமென்றோர் தீர்த்தமுண்டு அத்தீர்த்தத்தின் பக்கத்திற் சிறப்புள்ள நந்தாநதியென்றோர் நதியுண்டு அந்த நதி சூழ்ந்த இடத்தில் எவ்விடமு நிகரில்லாதசமாபுரமென்கின்ற இரத்தினபுரமானது தேவர்களெல்லாம் வாழும்படி ஆலகால விடத்தையுண்ட பரமசிவன் கயிலாச பருவதம்போல விரும்பி யிருக்கின்ற பதியாகும். எ-று. (கூ)

அத்தலத்தின் மணல்சிலையோடைவயெல்லாஞ் சிவ
லிங்காகாரமாகு, மெத்திய பைங்கொடி செடிகண்
மிருக பறவைகண் முதலா விளங்குகின்ற, சித்தபு
ருடர்களோடு கின்னரர் கிம்புருடரெனச் சிறந்தவா
கும், உத்தம பூசுரரெல்லா முனிவர்களா மொழிந்
தோரு மும்பராகும்.

(இ-ள்.) அந்தத் தலத்திலிருக்கின்ற மணல் கல்
ஓடுகளெல்லாம் சிவலிங்க சொரூபமாகும் மிகுந்த
பசுங்கொடிகள் செடிகள் மிருகங்கள் பறவைகளெ
லலாம் சித்தபுருடர்களும் கின்னரரும் கிம்புருடர்க
ளுமென்று சொல்வனவாகும் உத்தமகுணத்தை யு
டைய வேதியர்களெல்லாம் முனிவர்களாவார்கள்
மற்றமனிதரெல்லாம்தேவர்களாவார்கள். எ-று. (ய

எவரையு நிந்திக்க வொண்ணு திருந்தவர் நாலாம்ப
தமே யெய்துவார்கள், தவமுயல்வோர் தங்களுக்
கு மந்தலம்போற் பூலோகந்தனில் வேறில்லைச், சி
வனை ரத்நேசுரனை யெந்நேரமாகினுந் தெரிசி
த்தோர்கள், பவமகற்றி நினைந்தவெல்லாம் பெறு
வார்கள் பாதகங்கள் பயின்றோரேனும்.

(இ-ள்.) அந்தத் தலத்தில் வசிக்கப்பட்டவர்க
ளை நிந்தனைசெய்யாமலிருப்பவர்கள் சாயுச்சிய பதத்
தை யடைவார்கள் தவஞ்செய்யப்பட்டவர்க்கும் அ
வ்விடம்போல் உலகத்தில் வேறிடமில்லை மகா பா
தகங்களைச் செய்தவராகிலும் சிவபெருமானாகியஇ
ரத்தினேசுவரனை எந்தநேரத்திலாகிலுந் தரிசித்தா
ல் இகத்தில் எண்ணிய கருமங்கள் முடிவு பெற்று
ப் பின்னர் செனனத் தொடர்பையும் அறுப்பார்க
ள். எ-து. (கக)

அணுவளவு பொன்வெள்ளி தானமிடில்து மேருவ
ளவேயாகி, யுணர்வினுடன் கோடிதனந் தானமிட்
ட பலன்பெறுவ ரொருவர்க்கேனு, நணுகியன்ன
மிடிலோ ரன்னத்துக் காயிரவருட நலமேயாகிப், பு
ணர்வினுடன் கயிலைதனின் மகிழ்ந்திருந்து பின்னர்
முத்தி பொருந்துவாரோ.

(இ-ள்.) யாவராயினும் அந்தத் தலத்தில் அணுப்பிரமாணம் பொன்னாகிலும் வெள்ளியாகிலும் தானம்பண்ணினால் அது மேருவளவாகி அறிவுடனே கோடிதனம் தானம்பண்ணின பலனைப் பெறுவார்கள் அத்தலத்தை யடைந்து ஒருவருக்கு அன்னமிடுவார்களானால் ஒவ்வொரு அன்னத்திற்கு ஆயிரவருடம் நன்மையை யடைந்து சாரூபத்துடன் கைலையங்கிரியிலிருந்து பின்னர் மோட்சத்தை யடைவார்கள். எ-று. (கஉ)

கன்னிகாதானமொன்று செயினுமொருகோடி பிதிர்க்கணங்களோடு, மன்னியே கைலைதனில் வாழ்ந்திடுவ ரிடபமொன்று மகிழ்ந்துவிட்டால், மின்னு முரோமத்துக் காயிரவருட விதப்படியே நூறுகோடி, துன்னுமுயர் பிதிர்க்களுடனிறைவர்பதி தனிலிருப்பர் சுகத்தில வாழ்ந்தே.

(இ-ள்.) அந்தத் தலத்தில் ஒரு கன்னிகாதானஞ் செய்தால் ஒருகோடி பிதிர்க்கணங்களுடன் நிலையாகக் கைலாயத்தில் வாழ்ந்திருப்பார்கள் சூலமுத்திரையிட்ட காளையொன்று விட்டால் பிரகாசிக்கின்ற அந்த இடபத்தின் ஒரு உரோமத்திற்கு ஆயிரவருடவிதம் நெருங்கி உயர்வுற்ற நூறுகோடி பிதிர்க்கணங்களுடன் இறைவர் பதியாகிய கயிலாசத்தில் சுகமாக வாழ்ந்திருப்பார்கள். எ-று. (கங)

திதிமதியின் முதற்றீர்த்த நந்நதி தனிலாடித் தேவதேவன், மதயணியுந் துய்யமாமணியாரைச் சேவித்து வசித்தோர்க் கெல்லாங், கொதியுறு நோயிலை நெருப்புச் சலத்தாலும் பயமுடனல் குரவுமில்லை, இதமகன் சாவதுந் தந்தை கண்டதில்லை யமவாதை யில்லைத்தானே.

(இ-ள்) அந்தத் தலத்திலுள்ள முதற்றீர்த்தமாகிய தேவநாதீர்த்தத்திலும் நந்தாநதியிலும் புண்ணியதிதிகளிலும் மாதப்பிரவேச காலங்களிலும் ஸ்நானஞ்செய்து தேவதேவனுஞ் சந்திரசூடனுமாகிய துய்யமாமணியாரைத் தரிசனம் பண்ணினவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கின்ற வியாதியும் அக்கினியாலும் தண்ணீராலும் உண்டாகும் பயமும் தரித்திரமும் புத்திரன்னு நரகத்தினின்று விடுவித்து இதத்தை விளைவிக்கின்ற மகன் இறப்பதைத் தந்தைகாண்பதும் இயமவாதையுமில்லை. எ-று. (கச)

மருவியமுற் சென்மத்திற் றவமுடையோர்க் கத்தலத்தில் வாசங்கூடும், பரவுமந்தத் தலவாசிகளைக் கண்டபேர்களுக்கும் பாவந்தீரும், அரனருளா னந்திசர் சனற்குமாரற் குரைத்ததிவ்வா றுருமீது, தருமமுடன் சத்தியஞ் சத்தியமென்றே சூதமுனி சாற்றினனே.

(இ-ள்) பொருந்திய முற்சன்மத்தில் அனேககோடி தவம் பண்ணினபேர்களுக்கே அந்தத்தலத்தில் வாசம்பண்ணுதல் கைகூடும் அன்றியும் தேவர் முனிவர்களாற் பரவுகின்ற அந்தத்தலவாசம் பண்ணினபேர்களைக் கண்டவர்களுக்குப் பாவங்களெல்லா நசிக்கும் பரமசிவத்தின் அருளினல் நந்திகேசர் சனற்குமாரற்கு இவ்வண்ணஞ் சொன்னதாகும் இது தருமத்துடன் சத்தியஞ் சத்தியமென்று சூதபுராணிகர் சொல்லினர். எ-று. (கரு)

இன்னுமந்தத் தலமகிமை வருடமொராயிரக் காலமிசைத்திட்டாலும், பன்னரிதா மெனக்கூறச் சௌனகனு முளமகிழ்ந்து பரிவிஞேடும், அந்நகரந்தனிற் றுய்யமாமணியார் வரலாறு மறைதியென்றே, நன்னயமதாக் கேட்பச் சூதமுனி யிவ்வாறு நவிலலுற்றான்.

(இ-ள்) இன்னமுமந்தத் தலத்தின் மகிமையை ஆயிரவருடஞ் சொன்னாலுஞ் சொல்லிமுடியாதென்று சூதமாமுனிவர் சொல்ல அதைக்கேட்ட சௌனகர் உளமகிழ்ச்சி கூர்ந்து அன்புடன் எழுந்துநின்று தேவரீர் தலவிசேடத்தை மொழிந்தருளியபடியே துய்யமாமணியார் வரலாற்றையும் சொல்ல வேணுமென்று வினயத்துடன் கேட்கச் சூதமுனிவர் துய்யமாமணியார் வரலாற்றைப பின்வருமவண்ணஞ் சொல்லததொடங்கினார். எ-று. (கசு)

தலவிசேடச் சருக்கம் முற்றிற்று

ஆக செய்யுள் 37.

---

உ

சிவமயம்.

இரத்தினபுரிப் புராணம

இரண்டாவது

# பிரமதேவனகங்காரச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீதரனார் திருவுந்தி பூத்தலர்ந்த செழுங்கமலத் திறற் பொகுட்டு, மீதெழுந்து நால்வேத முணர்ந்தோது மைந்துசிர விதியாம வேதன், ஏதமறப் படைக்கு முறை யெவ்வுலகுஞ் சிருட்டித்தே யிமையோ ரோத்த, நீதிபுனை சத்தியலோகத்திருந்தே வாழ்வு பெற்று நிகழுநாளில்.

(இ-ள்) மகாவிஷ்ணுவின் உந்தியாகிய செழுங்க

மலப் பொகுட்டிற் பிறந்து நான்கு வேதங்களையும் உணர்ந்து யாவருக்கும் தெரிவிக்கும் ஐந்து சிரங்களைபெற்ற விதி என்னும் பிரமதேவன் குற்றமில்லாமற் படைக்கு முறைமைப்படி எல்லா உலகங்களையும் சிருட்டித்துத் தேவர்கள் அடிபணிய கீர்த்தி நிறைந்த சத்திய உலகத்தில் இருந்து வாழுநாளில். எ-று. (க)

முந்தியெழுஞ் சாத்துவித ராசத தாமதமென்னு
முக்குணத்திற், புந்திதரு சாத்துவித ஞானநெறி
யறிவுதனைப பொருந்துவிக்குஞ், சிந்தைதனி விரா
சதந்தா னகங்காரம வெகுளியினைச் சேர்ப்பிவிக்
கும், இந்தவகை யல்லாமற் றாமதந்தான் சோம்பு
றக்க மெய்துவிக்கும்.

(இ-ள்) முதன்மையாய்த் தோன்றுகின்ற சாத்துவித குணமென்றும் இராசத குணமென்றும் தாமதகுணமென்றும் முக்குணங்களுண்டு அக்குணங்களில சாத்துவிதமானது ஞானத்திற்கு ஏதுவாகிய அறிவினை யுண்டாக்கும் இராசதமானது மனதில் அகங்காரத்தையும் கோபத்தையும் உண்டாக்கும் தாமதமானது மேற்குறித்தவகை யல்லாமற் சோமபலையும் உறக்கத்தையும் உண்டுபண்ணும். எ-று.

இவ்வகையா முக்குணத்தி விராசதமாங் குணமிகு
தி யெழுகவேதன், செய்வகையாஞ் செயலெல்லா
ஞ் சிவன்செயலா மென்பதனைத் தேர்ந்திடாமற்,
பவ்வமணிப் பார்மிசையிற் சராசரங்கண் முழுது
நாம் படைத்தோமன்றி, முவ்வுலகு மெவ்வுலகும்
பிறர் படைப்பன் றெனவுளத்தின் மோகமுற்றே.

(இ-ள்) இத்தன்மையாகிய முக்குணங்களில் இராசதகுண மேலீட்டாற் பிரமதேவன் தான்செய்யுஞ் செயலெல்லாம சிவபெருமான்செயலென்பதனை அறியாமல சமுத்திரஞ் சூழ்ந்த அழகிய உலகத்தி லிருக்கின்ற சராசரங்கள் முழுவதும நமதுபடைப்பே அல்லாமல மூவுலகமும மற் றெவ்வுலகமும் பிறராற் படைக்கக் கூடியது அன்றென உள்ளத்தி ல மயக்கங்கொண்டு. எ-று. (௩)

நாம படைத்த படைப்பா லிவ்வுலகமெல்லாம பு
ரந்தளிப்பா னாரணன்றான், பாம்பணியும் பணியர
ரோ துடைப்பனெல்லா நாமெழுத்தின் படியேய
லவோ, ஆம்படியினெ வியாமே முழுமுதலவெனனை
வருநம மேவலர் செயவோர், மேம்படுமுத் தொழிலு
நமதெனறே யகங்கார மிகவுங் கொண்டான்,

(இ-ள்) பிரமதேவனானவன் நமது எழுத்தின்படியல்லவா நம்மால் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களை திருமாலானவன் காத்து இரட்சிப்பதும சர்வ பாபரண மணிந்த உருத்திரனானவன் சங்காரஞ்செய்வதுஞ் ஆதலால் இவ்வுலகத்திற்கு முழுமுதலாயுள்ளவன் நாமே மற்றத்தேவர்கள நம்முடைய ஏவல் செய்யப்பட்டவர்கள் மேன்மையாகிய முத்தொழிலும நமதே என்று மிகவும் அகங்காரத்தைக்கொண்டான். எ-று. (௪)

கொண்ட வகங்காரமுடை னைந்துசிரப் பிரமாவுங் கு
ணம் வேறாகி, அண்டமெல்லாம் வெருவும்வகை யி
ருத்தல் சிவன் றிருவுளஞ் சற்றறிந்தோடு, மீண்டு
செயும் பிரமாவுந் தன்பதவி விட்டிழிந்து மிகவுந்தா
ழப், பண்டு படைத்திடுஞ் செயலுந் தெரியாம லுன்
மத்தப் படிவமானன்.

(இ-ள்) இப்படி அகங்காரங்கொண்ட பிரமதேவ னும் தன் குணம் வேறுபட்டுத் தேவர்கள் அஞ்சும் வண்ணம இருப்பதைப் பரமசிவன் திருவுளத்திற் சற்றே அறிந்தமாத்திரத்தில் அகங்காரங்கொண்ட பிரமதேவன் தன்பதவியை விட்டிழிந்து மிகவுந் தாழ்வடைந்து முன்னாற் படைத்த தொழில் எல் லாந் தெரியாமல் மயக்கமே சொரூபமானான் எ-று.

மருள்கொண்ட பாலகனுக் கவுடதத்தை யளித்த
தனை மாற்றி நன்மை, அருள்கொண்ட குணம் வர
வே செய்துதவுந் தந்தையைப்போ லருளெண்ணி
த், திருகொன்று குணத்தயற்குத் திருத்தகற்பிச் சி
ருட்டிக்கு முறைசெய்வோமென், றிருள்கொண்ட
கஞ்சுகத்து வைரவனை நினைந்தலு முன்னிறைஞ்
சிநின்றான்.

(இ-ள்) மயக்கமாகிய நோய்கொண்ட பிள்ளைக்கு மருந்து அளித்து வியாதியை அகற்றி நன்மை மிகுந்த அருட்குணம் வர அருள் செய்கின்ற தந்தையைப்போல பரமசிவன் அஞ்ஞானமுடைய பிரமதேவனுக்கு உன்மத்த குணத்தைமாற்றி உலகத்தைப்படைக்கும் முறைமையைச் செய்விப்போமென்று இருளைப்போற் கருத்த சட்டையையணிந்த வயிரவமூர்த்தியை நினைத்தமாத்திரத்தில் வயிரவமூர்த்தியானவர் வந்து எதிர்நின்று பரமசிவனை வணங்கினார். எ-று. (௬)

நின்றவயிரவன்றன்னை யன்பினொடு முகநோக்கி நி
மிலன்கூறும், இன்றயனைப் பற்றுமிராசத குண
மா மந்தயோக மேகிவேக, மன்றிநெறி ஞானகுண
மருவும்வகை யவன்றலைக ளைந்துதன்னில், ஒன்று
தனைக் கிள்ளியிங்கு மீடியென வணங்கிமகிழ்வுடன்

(இ-ள்) வணங்கித் தன்னெதிர்நின்ற வயிரவன் முகத்தைப் பரமசிவன் அன்புடன் நோக்கிப் பிரமதேவனைப் பற்றிய இராசதகுண மதமோகங்கள் போகவும் வேகமல்லாத நியாயமாகிய மெஞ்ஞானம் அடையவும் அவன்றலைகள் ஐந்தில் ஒன்றைக் கிள்ளி யெறிந்து இப்பொழுதே இவிடத்தில் வருவாயென்றுசொல்ல அதைக்கேட்ட வயிரவன் தேவரீர் கட்டளை சிரமேற் கொண்டேனென்று வணங்கி மகிழ்வுடன் சென்றான். எ-று. (எ)

வேறு.

வசையில்பிறைசெறுநகைமுகமழகெழ வ
லிய திரிசிகையனலது சுடர்விட, அசைவுகொ
ளவரு தமருகசத்தமினிலகிலபுவனமும் வெடி
படவுரமிசை, இசைவுகொளவணி யரவிடை
யினமணி யிரவிசெகுவிட வெயிலதுவிரிதர,
விரையபரிபுரமொலிசெய வயிரவன் விடலை
கடவினன் விசைகொடு ஞமலியே.

(இ-ள்) வயிரவனானவன் குற்றமற்ற மூன்றாம் பிறையைபொருந்த தந்தங்களையுடைய முகத்தில் அழகொழுகவும் வலிமையான முத்தலைச்சூலத்தின் பிரகாசமோங்கவும் அசைவுகொண்ட தமருக ஒலியினால் அகில புவனங்கள் வெடிபடவும் மார்பில் இசைவாக அணியப்பட்ட நாக இரத்தினங்கள் சூரியன் ஒளிமழுங்கப் பிரகாசிக்கவும் பாதத்தில் தரித்த சிலம்புகள் சத்திக்கவும் பலமான சுவானவாகனத்தில் ஏறி நடந்தான். எ-று. (அ)

நீலநிறைதரு பேருருவொளிவிட நீடுசெறி
திருவாணமதிலகுற, கோலமழுகெழுமார்பிடை

தொனியருள் கோட்டகிலகிட நீடியசுடர்விடு, சூலமொருகர மீதினிலெழநிறை தோட்டினித ழியின் மாலையின் வெறிநறை, காலவயனுறை நீள்பதியதனிடை காலவயிரவ னேகினனனு கியே.

(இ-ள்) பெரிய வுருவமானது நிறைந்த நீலத் தைப்போல் ஒளிவிடவும் நீண்ட திருவாண சொரூ பத்தின்அழகுபிரகாசிக்கவும்மார்பினிடத்தில்தாங்கி ய சத்திக்கின்ற வீணைபிரகாசிக்கவும் ஒருகையிற் சூ லாயுதம் ஒளிரவும் நிறைந்த இதழ்களையுடைய கொ ன்றைமாலையின் வாசனையும் தேனும் ஒழுகவும் கா லவயிரவன் நடந்து பிரமதேவன் வசிக்கின்ற சத்தி ய உலகத்தைக் கிட்டினன். எ-று. (கூ)

சிங்கநாதமும் வெங்கடுவூறிய திண்கிரீபமு நுங்கரவார்தரு, தங்கணுநாமுந் திருநீறணி கஞ் சுகாதர வங்கமுமானவன், வங்கமால்வரையி ன் கணநாதர்கள் வந்துசூழ்தர வுந்துசுவாமி சை, பங்கமேன்மருவுங் குளிர்தோடலர் பங் கயாசன னெங்கெனநாடியே.

(இ-ள்) சிங்கநாதமும் ஆலகாலவிஷத்தை உமி ழ்கின்ற அரவைக்கடகமாகத் தரித்த கையும் விபூ தியைத் தரித்துச் சட்டையைப் போர்த்த சரீரமும் உடைய வயிரவன் வெள்ளியங்கிரியில் வசிக்கின்ற கணநாதர்கள் மருங்கு சூழ்ந்துவர சுவானவாகனத் தில் ஏறிக்கொண்டு சேற்றில் முளைத்துக் குளிர்ச்சி பொருந்தி இதழ்களால் விரிந்த தாமரைமலரை ஆச னமாகக்கொண்ட பிரமதேவன் எங்கேயெனத் தே டி. எ-று. (௰)

வையமுழுவது மெய்யெனவேதிரி வள்ளல்
வடுகன் மெய்யொள்ளிய மூவிலைத், துய்யவகி
லமர் கையினன் வீறொடு துள்ளுநெருமலியன்
வெள்ளிய நீறணி, மெய்யிலணிதரு பையரா
வோன்வளை வெள்ளை செறிகுழை யள்ளவன்
வேதனை, ஐயதலைகளின் மையமதானதை ய
ள்ளி யுகிர்கொடு கிள்ளினனுமரோ.

(இ-ள்) உலகமுழுவதும் கணப்பொழுதில் சுற்றித்திரிகின்ற வள்ளலாகிய வடுகனென்னும் பெயரையுடையவரும் பிரகாசிக்கின்ற மூவிலைகளையுடைய பரிசுத்தமாகிய சூலாயுதம் அமர்ந்த கையினையுடையவரும் உன்மத்தத்துடன் தாண்டிச் செல்கின்ற சுவானவாகனத்தையுடையவரும் வெண்மையாகிய விபூதியைநிறையத்தரித்தசரீரத்தில்அணிகின்றவடமாக வாய்ந்த அரவினையுடையவரும் வெண்மைமிகுந்த சங்கக்குழையைக் காதில் அணிந்தவரும் ஆகிய வயிரவர் பிரமதேவனைக் கண்டு அவனுடைய ஐந்து தலைகளில் நடுத்தலையைப்பற்றிக் கை நகத்தினாற் கிள்ளினார். எ-று. (கக)

வேறு.

அஞ்சுதலைதனினடுவாந் தலையைக்கிள்ளவஞ்
சுதலைமிகவுமடைந்தழுங்கியேதான், நெஞ்சுத
னிலறவுதற வீழ்ந்தான் வேதனிமலனருளால்
வந்த நுமலியூர்வான், விஞ்சுதலை யுடன்வேதன்
றலையுங்கொண்டு வெள்ளிமலையெனுங்கைலைய
டைந்தா னப்பாற், கஞ்சமல ரயன்செய்கை ய
தனையெல்லாங் கட்டுரைப்பனெனச் சூதன் க
மறலுற்றான்.

(இ-ள்) பிரமதேவன் அஞ்சுதலைகளில் நடுவாகிய தலையை வயிரவன் கிள்ளின அளவில் மிகவும் ப

யந்து நடுநடுங்கி நெஞ்சிற் கவலைகொண்டு பூமியில் விழுந்தான் அப்பொழுது பரமசிவனருளால் வந்த சுவானவாகனனுன வயிரவன் பிரமதேவன்றலையைச் சூலத்தில் கோர்த்துக்கொண்டு வெள்ளியங்கிரியாகிய கைலாசத்தை அடைந்தான் அப்பால் கமலாசனனுகிய பிரமதேவன் செய்கைகளை எல்லாம் உறுதியாகச் சொல்லுகிறேன் என்று சூதமுனி சொல்லலுற்றார். எ-று. (கஉ)

நாலுதலை யுடன்வீழ்ந்து குருதிபொங்க நாலுதலைநோக்கிமிகநடுநடுங்கித், நாலுதலை யொன்றறுபட்டதுவேயென்று நானுரைக்கு மொழிகுழறித் தயங்கி விம்மிக், காலுதலையொழியாம னிரண்டு கண்களுநீரோ பெருக வெங்கையாலே, மேலுதலை வாங்கநமக் கெய்திவந்த வினையேதென் றுளத்தெண்ணி விசாரமுற்றான்.

(இ-ள்) அப்பொழுது பிரமதேவன் நாலுதலையுடன் பூமியில் விழுந்து இரத்தம்பெருக நாலுதலைகளையும் பார்த்து மிகவும் நடுங்கிப் பயந்து ஒருநாவும் ஒருதலையும் அறுபட்டுப்போயினவே என்று சொல்லும் சொற்களும் குழறித் தடுமாறி மதிமயங்கி அழுது எட்டுக் கண்களினின்றும் தண்ணீர் தாரைதாரையாய் ஒழுகிப்பெருக கை நகத்தினுல் நம்முடைய மேலான தலை கொய்பட நமக்கு வந்த வினையாதென்று மனதிலெண்ணி விசாரமுற்றான். எ-று. (கந)

சிவனருளால் வந்ததா மிதுவேயென்று திய ,
ங்கி யிராசதகுணத்தின்செய்கையாலே, தவமு

முது மிழந்ததன்றித் தலையிலொன்று தன்னை
யுமின் றிழந்திடவுந் தந்ததென்று, கவலை யு
டனினைந்து நினைந்துறுதியோர்ந்து கலங்கியசி
த்தந்தெளிந்து சிரங்களைந்தும், குவலயத்தில்
விழவெறிந்தாற் றடுப்பாரியாவர் கொடுத்தவ
னே மாற்றியக்காற் கொள்கையாதோ.

(இ-ள்) பரமசிவனருளால் நமக்கு இவ்வண்ண
ம் விளைந்ததென்று இராசதகுண மேலீட்டால் தவ
மெல்லாம்போனதுமன்றி எனது தலையும்போனதெ
ன்று விசாரத்துடன் நினைந்து நினைந்து கலங்கிய சி
த்தந்தெளிந்து நமக்கு ஐந்து சிரங்களைக்கொடுத்த
பரமபதியாகிய கடவுளே அச்சிரங்களில் ஓர் சிரத்
தைத் தடிவாரானால் அதைத் தடுப்பவர் யாண்டுமில்
லையென்றெண்ணினன். எ-று. (கஅ)

நமதுசிர மறுப்பதனை யுணரமாட்டா நமக்கு
மோராதிக் மேதுநாடின், அமைவதில்லைச்சிவ
ன்பெருமைக் கவனேயல்லா லியாருமில்லை மு
ழுமுதல்வ ராகுமபேர்தான், இமையவரோ மு
தற்றேவரானோர்க்கெல்லா மீசனேதலைவ னெ
ன்பதெண்ணியெண்ணி, உமையவடன் கண
வனையே துதிந்தானுஞ்செய்துற்றபிழைபொ
றுக்குமென வுணர்ந்தானன்றே.

(இ-ள்) நமது தலையை அறுப்பதை உணரமா
ட்டாத நமக்கு அதிகாரமேது நினைக்குமிடத்தில் ந
ம்மாலாவது ஒன்றுமில்லை சிவபெருமானுடைய பெ
ருமைக்கு அச்சிவபெருமானே ஒப்பல்லாமல் முழு
முதல்வரெனத் திரிகின்ற மற்றத்தேவர்கள் ஒப்பி
ல்லை ஆதலால் தேவர்களுக்கெல்லாம் தலைவன் சி
வபெருமானே என்றெண்ணி உலக மாதாவின்

கணவனாகிய ஸ்ரீ கண்டமூர்த்தியைத் துதித்து வணங்கினால் நாம்செய்த பிழைகளை யெல்லாம் பொறுப்பார் என்று உணர்ந்தான் பிரமதேவன். எ-று. (௧௫)

சிந்தையுறு தியானத்திற் படிகமெய்யுஞ் செஞ்சடையுங் கண்மூன்று மபயக்கையுங், கந்தமிகும் புலியதளினுடையும் பூதகணஞ்சேர் வைப்பதமு முயர்குணமுஞ்சால, முந்துகருணையு மிமையவரையின் வல்லி முழுமுதல்வ னெனும்வடிவு முழுதுங்கண்டே, அந்தமிலாப் பரமசிவன்றன்னையுன்னி யம்புயத்தோ னிருப்பவர னருளினாலே.

(இ-ள்) பிரமதேவனானவன் பளிங்கை ஒத்த திருமேனியையும் சிவந்த சடையையும் முக்கண்களையும் அபயக்கையையும் வாசமிகுந்த புலித்தோற்கலையையும் பூதகணங்கள் சேவிக்கின்ற திருவடியையும் சின்மயகுணத்தையும் மிகவும் முதிர்ந்தொழுகுகின்ற கருணையையும் பருவதராசன் புத்திரியாகிய பார்வதிதேவியார் கணவனென்பதையும் ஆதியந்தமில்லாதவ னென்பதையும் அகத்தில் உன்னிப் பொருந்திய தியானத்தில் இருக்க அப்பொழுது பரமசிவன் அருளினால். எ-று. (௧௬)

மிக்கவசரீரி வாக்கியமேயாகவேதாவே யுனது குணவிராசதத்தால், தக்கசிரமொன்றறுந்த துதாமென்னுந் தருக்கினாலதுநீங்கித் தராதலத்திற், றுக்கமின்றியே பிரமந்தானேயாகத் தொல்லுலகி னூற்றெட்டுச் சிவலிங்கத்தில், அக்காரவப்பணியானைப் பூசைசெய்ய வமையுமவற்றுளொ ரிருநான்கதிகந்தானே.

(இ-ள்) ஓ பிரமதேவனே உனது இராசதருண மேலீட்டால் உனது ஐந்து தலைகளில் ஒன்று அறுபட்டது எல்லாந்தாமே ஆகப்பிரபஞ்சாதி விசாரம் மனத்தின்கண் இல்லாமல் பழமையாகிய இவ்வுலகத்தினுள் இருக்கின்ற அதிகமாகிய நூற்றெட்டுத் தானங்களில் அங்கமணியுடன் சர்ப்பத்தையும் ஆபரணமாகத்தரித்த பரமசிவனைப் பூசைசெய்யப் பொருந்தும் அந்நூற்றெட்டுச் சிவலிங்கத்தினுள்ளும் எட்டுச் சிவலிங்கம் அதிகமென்றும்- எ-று. (௧௭)

கங்கை காவிரி நந்தை கிரதமாலை கௌதமை
கிருட்டினவேணி துங்கபத்திரி, மங்கலகேதார
மித்தத் தலங்களெட்டின் மகேச்சுரனைப் பூசை
செய்யின் மருவுமன்றிப், பொங்குபுவியினிற்
சம்புத் தீவுதன்னிற் பொருந்திய பாரதவருட
பாதகண்டந், தங்குதலந்தனிற் கிரியுநதியுந்
தேவதானமுமுண் டவற்றின்மிகத் தவஞ்சே
ர்பூமி.

(இ-ள்) கங்கை காவிரி நந்தை கிரதமாலை கௌதமை கிருட்டினவேணி துங்கபத்திரி சுபகரமருவிய கேதாரம் என்னும் இந்த எட்டுத் தலங்களில் பரமசிவனைப் பூசைபண்ணினால் உனக்குப் பிரமத்துவம் பொருந்தும் இவையன்றி இன்னுமொருதலம் உண்டு இந்த உலகத்தில்சம்புத்தீவிலிருக்கின்ற பரதகண்டத்தில் ஒரு பருவதமும் ஒரு நதியுமுடைய தெய்வத்தானம் ஒன்றுண்டு அந்த இடம் மிக்க தவஞ் சார்ந்த பூமியாகும். எ-று. (௧௮)

எண்ணில் பலமுனிவ ராச்சிரமந்தன்னி லீச
ர்வடிவாகு முயர் வில்வக்கானம், நண்ணுநதிக்

காவிரிக்குத்தரத்தி னந்தாநதித் தீர்த்தந் தேவ
கிரி தேவகாமெய்த், தெண்ணிய தீர்த்தமுமு
டைத்தா யுரோமமேனிசேர்ந்த முனியுடன்மு
னிவ ரநேகர் சூழ்ந்து, புண்ணியமாந் தவம்ப
லிப்ப வனேகங்கோடி பொருந்துகற்ப காலம
திற் புக்கிவாழ்வர்.

(இ-ள்) அந்தப்பூமியில் கணக்கில்லாத முனீஸ்வரர்கள் ஆச்சிரமம் உண்டு அவர்களெல்லாம் அதில் சிவசொரூபமாய் இருப்பார் அது உயர்வுபெற்ற வில்வவனமாகும் அவ்வனம் எவ்விடத்து உள்ள தெனில் காவிரிநதிக்கு வடபாரிசம் உள்ளது அதில் நந்தாநதி யென்றொரு தீர்த்தமும் தேவகிரியென்றொரு பருவதமும் தேவகாதீர்த்த மென்றோர் தீர்த்தமும் உண்டு. அந்தவிடத்தில் உரோமசமுனியுடனே அனேக முனிவர்கள் சூழ்ந்து புண்ணியமாகிய தவங்கள் பலிக்கும்படி அனேகங்கோடி கற்பகாலமளவும் அதிற் பொருந்திவாழ்வார்கள்.எ-று. (கக)

அந்தலந்துக் கெந்தலமு மொவ்வாதாகு
மவ்விடத்தில் வில்வவிருக்கத்தின் பாங்கர், மெ
த்துசிவலிங்க மொன்று பதிட்டைசெய்து மே
வுசிவாகமங்களோ ரிருபத்தெட்டிற், சுத்தமு
று சூக்குமமா மாகமத்திற் சொன்னவகை பூ
சைசெய்யிற் சிவனுந்தோன்றி, உத்தமமாம்
வரங்கொடுக்கும் பரமனிவ்வா றுனையென்று
ரொன வசரீரியுங் கூறிற்றே.

(இ-ள்) அந்தத் தலத்திற்கு மற்றெந்தத் தலங்களும் இணையில்லை அவ்விடத்தில் வில்வவிருட்சத்தின் பக்கத்தில் நிறைந்த சிவலிங்கம் ஒன்று பிரதிட்டை செய்து விரும்பிய சிவாகமங்கள் இருபத்

தெட்டினுள் சுத்தமான சூக்குமாகமத்தில் சொல்லி
யபடி பூசைபண்ணினுல் சிவபெருமான் பிரசன்ன
மாகி உத்தமமாகிய வரங்களைக் கொடுப்பார் என்று
உனக்குச் சொல்லென எனக்குப் பரமசிவன் கூறி
ஞர் என்பதாக ஆகாயத்தினின்றும் ஓர் அசரீரிவா
க்கியம் எழுந்தது. எ-று. (உ௰)

இவ்வாறு சூதனென்னு முனிவன்கூற வினிய
சௌனகன் மிகவு மதிசயித்துச், சைவாகமப்
பெருமையெல்லா மிந்தத் தாணிதனி லியாவ
ர் நின்போற்சாற்றவல்லார், ஒவ்வாதகுணம
கற்றி வேதனெவ்வா றுறைந் திரத்தினேசுரப்
பதிட்டையோங்கச் செய்தான், அவ்வாறு யா
னறிய வுரைத்தல் வேண்டு மையவெனச் சூ
தமுனி யறையலுற்றுன்.

(இ-ள்) இவ்வண்ணமாக சூதமுனிவர் சொல்லி
யபோது சௌனகமுனிவர் மிகவும் ஆனந்தம் அ
டைந்து அதிசயித்து சைவாகமத்தின் பொருள்க
ளையெல்லாம் இவ்வுலகத்தில் உம்மைப்போலச், சொ
ல்லவல்லார் யாவரொன்று துதிசெய்து பிறகு அந்த
ப் பிரமனானவன் பொருந்தாத இராசதகுணத்தை
அகற்றி இரத்தினேசுவரனைப் பிரதிட்டை செய்து
எவ்வாறு பூசைபண்ணினுன் அதனை அடியேற்குச்
சொல்லியருளவேண்டும் ஐயனே என்று கேட்க
அப்போது சூதமகாமுனிவர் சொல்லத் தொடங்கி
ஞர். எ-று. (உ௧)

இரண்டாவது

பிரமதேவன் அகங்காரச் சருக்கம்

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

இரத்தினபுரிப் புராணம்

மூன்றாவது

# சிவபூசைச் சருக்கம்.

---

வேறு.

இருநாலு திசைப்பால ரொவருமஞ்சு முகமாக, ஒருநாலுமுகத்துடனே யொளிபரவ பிரமாவும், ஒருநாலுஞ் சம்புதிசை தனிலே சம்புவைப் போற்றத் திருநாலு மறையோதித் தேவகிரி தனைச் சேர்ந்தான்.

(இ-ள்) பிரமதேவனானவன் தன்னைக்கண்ட திக்குபாலகர் எண்மரும் அஞ்சும்படி நான்குமுகத்துடனே பிரகாசம் விரிய நாலு விருட்சம் சூழ்ந்த மகமேருவுக்கு தென்பாலாகிய நாவலந்தீவில் சம்புவாகிய பரமேசுவரனைப் போற்றச் சிறந்த நாலுவேதங்களையும் சொல்லிக்கொண்டு தேவகிரியை அடைந்தான். எ-று. (க)

தேவகிரியெனு மிரத்தினச் சிகரவரை தனை நோக்கிப், பாவவினை தீர்க்கு முயர் பாணி நந்தை தனைநோக்கி, மேயுவில்வ வனநோக்கி விரும்பியதிற் றவம்புரியும், தாவிலுரோமசன் முதலாந்தவ முனிவர் தமை நோக்கி.

(இ-ள்) தேவகிரி என்னும் இரத்தின சிகரம் பொருந்திய மலையைநோக்கியும் பாவவினையை அகற்றி உயர் பதவியை அருளும் உதகம் நிறைந்த நந்தாநதியைக் கண்டும் அவ்விடத்திலிருக்கின்ற வில்வ வனத்தைப் பார்த்தும் அதனுள் விரும்பித் தவஞ்

செய்து கொண்டிருக்கும் உரோமசர் முதலான மகாமுனிவர்களைத் தெரிசித்தும். எ-று. (௨)

சருகுதனை யேபுசித்துந் தருவினிலை தானு
கர்ந்தும, வருமனிலந் தனையுண்டும் வார்புனலை
யே குடித்தும், பொருவு நிலவருந்தியும் வா
ன் பொங்க னலைத்திடையிருந்தும், ஒருபதத்
தை யெடுத்து நின்று முயர் தவஞ் செய்தவர்
பலரால்.

(இ-ள்) அந்த வில்வ வனத்தில் உதிர்ந்த சருகுகளைப் புசித்தும் தருவின் இலைகளை உண்டும் வரப்பட்ட காற்றினை அயின்றும் ஒழுகுகின்ற புனலினைக் குடித்தும் பொருந்திய நிலவை அருந்தியும் ஒளி பொங்குகின்ற பஞ்சாக்கினி மத்தியில் வைகியும் ஒரு தாளைத் தூக்கி நின்றும் உயர் தவஞ்செய்யப்பட்டவர்கள் பலர். எ-று. (௩)

தருவெனவே சிதலைபெல்லாந் தாண்முழு
தும் புற்றெடுப்ப, விரவு செடி கொடிகளெல்
லா மேனிமுழுவதும் படரப், பரவு சடையி
சைக் குடம்பை பறவையினந் தாளமைப்ப,
உரவுநிலை யெனமாக்களுரசநோற்பவர் பலரால்.

(இ-ள்) உலர்ந்த கட்டையென்று கருதிக் கால்களில் சிதல்கள் புற்றமைக்கவும் முளைத்த கொடி செடிகள் எல்லாம் சரீரமுழுதும் படரவும் சடையின் மீது பறவைகள் கூடு அமைக்கவும் திண்ணிய கற்கம்பங்களென்று மிருகங்கள் உரிஞ்சவும் தவம்செய்யப் பட்டவர்கள் பலர். எ-று. (௪)

ஆனினத்தி னீண்முலைக ளைப்புலிப் பறழ
ருந்து, மானிளங்கன்று புலிமுலை மகிழ்வுடன்

குடிக்கும், கானெலிக் கிடம்புற்றிடைக் கொடுத்தராக் காக்குந், தேனருந்துவோர்க்குதவி யீயப்புறஞ் செல்லும்.

(இ-ள்) இன்னும் அவ்வனத்தில் பசுக்கூட்டத்தின் நீண்ட முலைகளில் புலிக்குட்டிகள் சென்று அருந்தும் மானிளங்கன்று புலிமுலைகளில் மகிழ்ச்சியுடன் உண்ணும் கானகத்திலெ திரிகின்ற எலிகளுக்குப் பாமபுகள் தமது புற்றிடத்து இடங்கொடுத்துக் காக்கும வண்டுகள் அவ்விடத்தில மது உண்ண வந்தவாகளுககு தாமுண்ணுந்தேனை கொடுத்து வேறொரு இடத்தில் செலலும. எ-று. (௫)

இன்னவாறு ரோமசருனை யெழில் கொளாச சிரமந், தன்னைநோககியே வேதனு மிகவதிசயித்து, மினனுசெஞ்சடைப் பாமன்மே லருசசனை விருமபி, யுனனியே சிவலிங்கம தேதெனா வோாவான்.

(இ-ள்) இவவிதமான உரோமசமுனிவர் வசிக்கின்ற அழகுபொருந்திய ஆசிரமத்தைப் பிரமதேவன் கண்டு மிகவும் மகிழ்ந்து பிரகாசிக்கின்ற சடாமகுடத்தையுடைய பரமசிவனை அவ்விடத்தில் எழுந்தருளச்செய்து சிவார்ச்சனைபண்ண விரும்பி அதற்குச சிவலிங்கம எதுவென உணர்வாயினன். எ-று. (௬)

விரிந்த தேவமால் வரைதனில் விளங்கிய சோதி, நிரைந்திலங்கிய விந்திரநீல விரத்தினத்தால், வரிந்து நின்மிதம் பஞ்சசூத்திரப்படி வகுத்துத் திருந்தவேசெய நினைந்தனன் றேவதச்சனையே.

(இ-ள்) விசாலமான தேவகிரியில் விளங்கிய சோதி வரிசையாகப் பிரகாசிக்கின்ற இந்திரநீல இரத்தினத்தினால் பஞ்சசூத்திரவிதிப்படி வரிந்து நிர்மாணஞ்செய்யத் தெய்வத்தச்சனாகிய விசுவகன்மாவை நினைத்தான். எ-று. (எ)

வந்திறைஞ்சிய விசுவகன்மனை மிகமகிழ்ந்தே, இந்துசேகரற்காலய மமைத்தி யின்றெனலும், புந்தியானினைந்துத் தமவிதிப்படி பொருந்த, நந்தைமாநதித் தெக்கண தீர்த்தத்தை நாடி.

(இ-ள்) பிரமதேவன் நினைத்தமாத்திரத்தில் தன் எதிர்வந்து வணங்கி நின்ற விசுவகன்மனை மிக்க மகிழ்ச்சியுடன் நோக்கிச் சந்திரசூடனாகிய சிவபெருமான் எழுந்தருள்வதற்கு ஓர் ஆலயம் இப்பொழுதே அமைப்பாய் என்று சொன்னவளவில் அதைக்கேட்ட விசுவகன்மனானவன் தன் புத்தியில் நினைத்து உத்தமவிதி பொருந்த நந்தைமா நதியின் தென்கரையில் ஆராய்ந்து. எ-று. (அ)

ஓங்குவில்வமாவனத்திடை யுயர்தருவதனின், பாங்கராகவே விமானமும் கோயிலும் பணித்துத், தாங்குமண்டப நெடுமதில் கோபுரஞ்சமைத்தே, தீங்குறுவகை செய்தனனாலயஞ் சிறக்க.

(இ-ள்) உயர்ந்த வில்வவனத்தினிடை ஒரு விருட்சத்தின்பக்கத்தில் விமானமுங் கோயிலும் உண்டாக்கி அதனைச்சூழ அனேக மண்டபமும் மதில்களும் கோபுரமுஞ் சமைத்துக் குற்றமில்லாதபடி பார்ப்பவர்களுக்குச் சிறப்பாக ஆலயத்தை அமைத்தான். எ-று. (கூ)

மருவு நந்தியாவட்ட மாமலரதேபோல,
பொருவிலெட்டு நாலாகிய விலக்கணம்பொரு
ந்தத், திருவிமானமுஞ் சிகரமு முடிகளுஞ் செ
ய்தே, பரவுசெம்பொனு மணிகளுங் குயிற்றி
யே பணித்தான்.

(இ-ள்) பொருந்திய நந்தியாவட்ட மலர்போல ஒப்பில்லாத முப்பத்திரண்டு இலட்சணமும் பொருந்த அழகாற் சிறந்த விமானமும் சிகரமும் முடிகளுஞ் செய்து அவைகளிற் சிவந்த பொன்னாலிழைத்து நவரத்தினங்களைப் பதித்துப் பிரகாசமாக உண்டாக்கினான். எ-று. (௰)

அமைக்கும் வேய்புரை தோளியா மிமைய
வெற்பருளும், உமைக்குமெண்ணிய நூல்
வழிக் கோயிலுண்டாக்கிச், சமைத்தனன் ம
யன் வீதிகளானதுந் தழைக்க, இமைக்கொ
ணாதிடு மெண்கணனெண்ணினன் முகூர்த்தம்.

(இ-ள்) திரண்ட பசுமூங்கிலையொத்த தோளையுடைய இமோர்ப்பருவத ராஜகுமாரியான உமாமகேசுவரிக்கும் சிற்பசாஸ்திரப் பிரகாரம் கோயிலுண்டாக்கி வீதிகளெல்லாந் தழைந்தோங்க மயன் சமைத்தான் அப்பொழுது இமைத்தலில்லாத எண்கணனான பிரமதேவன் அதனைப்பார்த்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்ய நல்ல முகூர்த்த காலத்தை எண்ணினான். எ-று. (௧௧)

அஞ்சதாகிய வங்கமுமமுத சித்தியோகம்
விஞ்சுமோரையின் மதிபுகர் வியாழவுச்சத்தின்
மஞ்சுநேர்குழலுமையுடன்சிவலிங்கமலரோன்
பஞ்சமாக்கரவிதிப்படி பண்ணினன் பதிட்டை.

(இ-ள்) பஞ்சாங்கவிதிமுறைப்படி அமுதசித்தி

யோகமுங் குற்றமில்லாத ஓரையும் சந்திரன வெள்ளிவியாழன் உச்சங்கூடிய சுபதினத்தில் நீருண்ட மேகத்தையொத்த அளகபாரத்தையுடைய உமாமகேசுவரியுடன் சிவபெருமானையும் பஞ்சாக்ஷரவிதிப்படி பிரமதேவன் பிரதிஷ்டை செய்தான். எ-று. ()

எண்ணுநான்மறைவேதிய ரிருடிகள்சூழத்
திண்ணமாகவே யாகமவிதிமுறை தெரிந்து
பண்ணுமோமமுஞ்சாந்தியும் பலிகளுஞ்செய்தே
அண்ணலைப்பிரமன் சுயம்பாகவே யமைத்தான்.

(இ-ள்) எண்ணப்படுகின்ற நான்மறை வேதியர்களும் முனிவர்களும் சூழ்ந்திருக்க உண்மையாகம விதிப்படி தெளிந்துபண்ணப்பட்ட ஓமம்சாந்திபலி முதலானயாவுஞ்செய்து அண்ணலாகிய பரமசிவத்தைப்பிரமதேவன் சுயம்புலிங்கமாகவே அமைத்தான், எ-று. (௧௨)

கருதுமால் வரைக்காரிகை கணபதி கந்தன்,
திருவுருத்திரர் மகேசுரராதவன்றிங்கள்,
மருவுநந்திசண்டே சுரர்வயிரவர் முதலா,
விரவுகின்ற தோரிருப்பத்து நாலுவிக்கிரகம்.

இ-ள் யாவருங்கருதுகின்ற பெரிதான இமோர்ப்பருவத ராஜபுத்திரியாகிய உமைகணபதி சுப்பிரமணியர் மகாலட்சுமி உருத்திரர் மகேசுவரர் சூரியன் சந்திரன் நந்திகேஸ்வரர் தண்டியடிகள் வயிரவர்முதலான விக்கிரகங்களையும் அமைத்தான். எ-று

மற்றுமுள்ளனவுறசவவண்மையாம்பேதம்
முற்றுமாகம விதிப்படி பதிட்டை கண்முடித்துப்,
பற்றிடுந் திரிகாலமும் பூசைகள் பண்ணி,
வெற்றியே தருமுற்சவ விழாவெலா நடத்தி.

(இ-ள்) மற்றுமுள்ள லிங்கங்களை அமைத்து ஆகமவிதிப்படி பிரதிட்டை செய்து திரிகாலமும் பூசைபண்ணி ஆனந்தத்தை விளைவிக்கின்ற திருவிழாவையும் நடத்தினான். எ-று (கரு)

சந்நிதிக்கெதிராகவே பிரமதீர்த்தந்தான், என்னவே யொரு தீர்த்தந்தன் பெயரினுலியற்றி, மின்னுநூலிடைவாணியுந் தானுமாய் வேதன், மன்னுகாலமநேகமங்கி ருந்தனன்மகிழ்ந்து.

(இ-ள்) சிவபெருமான் சந்நிதிக்கெதிராகப் பிரமதீர்த்த மென்றொரு தீர்த்தம் தன்பெயரால் உண்டுபண்ணிப் பிரகாசிக்கின்ற நூல்போன்ற இடையையுடைய வாணியுந்தானுமாக அநேககாலம் மகிழ்ச்சியுடன் அங்கிருந்தனன்- எ-று. (கசா)

வேறு.

பிரமபுரமெனவந்தப் பெரும்பதிக்குப் பேருரைத்துப், பரவுமறைவேதியர்களநேகரையும் படைத்தருளி, அரனுடனேயு மைமகிழவந்திசந்திடுபூசைகள், விரவுசிவாகமப் படியே மேலானபூசை செய்தான்.

(இ-ள்) பிரமதேவனானவன் தன்பேர்விளங்கும்படிக்குப் பிரமபுரமென்று பெயரிட்டுப் பரவுகின்ற வேதோத்தமர்கள் அநேகரைச்சிருட்டித்துவைத்துச்சிவபெருமானுக்கும் உமாமகேஸ்வரிக்கும் மூன்றுகாலமும் விரிந்தசிவாகமத் தின்பிரகாரம் பூசைபண்ணினான். எ-று. (கஎ)

அப்பரிசேபூசைசெய் யுமந்நாளிலோர் ஞான்று. செப்பரி தாமவிமயமாய்ச் சிவலிங்கந்

தனிலிருந்தோர், மெய்ப்படிவமுறத் தோன்றி விளங்குமையாளுடனாக, ஒப்பரிதாஞ்சோதியு டனோங்கியெழுந்திடக் கண்டான்.

(இ-ள்) பிரமதேவனானவன் மேற்சொல்லிய வண்ணம்சிவபூசைசெய் யும்நாட்களில்ஓர்நாள் சொல்லற்கரியமாணிக்கமயமாகச்சிவலிங்கத்திலிருந்துஎழ அந்த ஒளியில் சிவபெருமானும் உமாமகேஸ்வரியும் தோன்றக்கன்டான், எ-று. (கஅ)

கண்டுமிகமனம் வெருவிக்கசிந்துநெகிழ்ந்துளமுருகித்,தெண்டனிட்டுப்பஞ்சாங்கவட்டாங்கச்செயலாகப், பண்டைமறைவிதிப்படியேபல காலும் பணிந்தேத்திப், புண்டரிகவுடையானைப் புண்டரிகன்போற்றுதலும்.

(இ-ள்) பிரமதேவனானவன் சோதி சொரூபத்தைக் கண்டவுடனே அஞ்சி உள்ளம் கசிந்து நெகிழ்ந்து உருகிப் பஞ்சாங்க அஷ்டாங்க விதியாகத் தெண்டனிட்டுப் பழமையானவேதவிதிப்பிரகாரம் புலித்தோலை உடையாகத்தரித்த சிவபெருமானைத்தோத்திரம் பண்ணினமாத்திரத்தில். எ-று. (கசு)

இந்துற்ற சடைமுடியாரிறைவிமுகமதிநோக்கிச்,சந்தசுபாராயணனுஞ்சதுர்வேதன் பூசையினால், வந்தித்துப் போற்றுதலால்வந்தபிழையாம்பொருத்தேம்,சிந்தித்துவரமுதவத் தேவியே நீயும் பொறுப்பாய்.

(இ-ள்) சந்திரசூடனாகிய பரமேசுவரன் பார்வதியினுடைய பூரணச்சந்திரோதயம் போன்ற முகத்தைப் பார்த்து தேவி சதுர்வேத பாராயணனாகிய பிரமதேவன் நம்மை வந்தனை செய்து போற்றுதலினால் அவன் பிழையை யாம் பொறுததோம்அ

வ்வாறே நீயும் பொறுத்தருள்வாய் என்றார். எ-று()

சமையுன்பா லிருததலினுற சமாபதியா மு
ன்பெயரும், எமையுந்தான் சுத்தரத்தினேச
னென்றி யாருந்துதிப்பர், உமையுன்பேரற்றீ
ர்த்தமென்றுனது கோயின்முன்னர், அமை
யென்றே யருளவுமை யருள்விழியினுலமைத்
தாள்.

(இ-ள்) பரமசிவனுனவர் பின்னுந் தேவியைப் பார்த்துப் பெண்ணே பொறுமை உன்னிடத்திலிருத்தலினுல் சமாபதியென்றுந் திருநாமம் உனக்கு உண்டாகும் எமையும் சுந்த இரத்தினேசுரர் என்பதாக இயாவரும் துதிப்பார்கள் ஆதலினுல் உன் பெயரால் ஒரு தீர்த்தம் உன்னுடைய கோயிலின் முன்னுக அமைத்தருள்வாயென்று சொல்ல அப்பொழுதே அம்மையும் கிருபாநோக்கத்தினுல் ஒரு தீர்த்தம் உண்டாக்கினுள். எ-று. (உக)

தந்தயிந்தத் தீர்த்தந்தான் சமாபதியாமெ
னவாகும், வந்தயுக நாலுக்கு மருவுமிந்த வ
ளம்பதிதான், முந்துகத்திற் பிரம்புரமொழிந்
த திரேதாயுகத்தில், உந்தனுடைப் பெயரா
லே சமாபுரமா முமைகேளாய்.

(இ-ள்) இவ்வண்ணம் உமையவள் பரமசிவன் சொற்படி தீர்த்தத்தைச் சிருட்டித்தவளவில் பரமேசுவரன் அம்மையைநோக்கிப் பெண்ணே நீ கேட்பாயாக உன்னுல் சிருட்டிக்கப்பட்ட இந்தத் தீர்த்தம் சமாபதியென்னும் பெயரையுடையதாகும் நான்கு யுகத்திலும் நிலைபெற்ற இந்தக்ஷேத்திரம் முதல் யுகமாகிய கிரேதாயுகத்தில் பிரமபுரமென்றும் திரேதாயுகத்தில் உன்னுடைய பெயரால் சமாபுரமென்றும் பெயரையுடையதாகும். எ-று. (உஉ)

நாடுதுவாபரயுகத்தினன் னந்தாபுரமாகும்,
கூடுங்கலியுகந்தன்னிற் குறித்த விரத்தினபுர
மாகும், வீடுபெறு மெவரேனும் விரும்பியிந்
தத் தலத்திருந்து, தேடிநம்மைத் தெரிசித்தா
ற் செல்வமுடன் பெறுவர்முத்தி.

(இ-ள்) துவாபரயுகத்தில் நந்தாபுரமென்றும் க
லியுகத்தில் இரத்தினபுரமென்றும் பெயரையுடை
யதாகும் அன்றியும் மோக்ஷத்தைப்பெற விரும்பு
வோர்கள் இந்தத் தலவாசம்பண்ணி நம்மைத் தெ
ரிசித்தால் இகத்திற்குரிய செல்வத்தோடு மோக்ஷ
த்தையும் அடைவார்கள். எ-று. (உ௩)

விருக்கமெனு வனம்வில்வ விருக்கமு நம்மு
ருவாக, இருக்குமிந்த விருடிகளு மெமது பங்
கிலொருகூறும், திருக்கிளர்நம் பிரமர்பலர்
செயும்பூசை தெரிசிக்க, உருக்கமுடன் விருடி
களு முரோமசரு மிங்கிருந்தார்.

(இ-ள்) பல விருட்சங்களால் நிறைந்த இவ்வ
னத்திலுள் இருக்கின்ற வில்வ விருட்சங்களெல்லா
ம் நமது சொரூபமாகும் இவ்வனத்திலிருக்கின்ற இ
ருடிகள் எல்லாம் எமது பங்கில் ஒருகூறாகும் இஃத
ன்றியும் மாறுபாடில்லாத அனேகம் பிரமர்கள் நமக்
குச் செய்யும் பூசையைத் தெரிசிக்க அன்புடன் அ
னேக முனிவர்களோடு உரோமசமுனிவரும் இங்கு
வசித்தார். எ-று. (உச)

முன்னநாமித்தலத்தின் முனிவரனேகம்பே
ர்க்கு, நன்னுதலாய் வரங்கொடுத்தோ நமது
சடைமுடிமீதில், மின்னு கங்காநதிச்சலமேவி
று நந்தாநதியாகும், பன்னுபஞ்ச பாதகங்கள
கலுமிந்தப் பதிதனிலே.

(இ-ள்) பிறைபோலும் நல்ல நெற்றியையுடைய பெண்ணே முன்னாளில் நாமிந்தத் தலத்தில் எழுந்தருளியிருந்து அனேக முனிவர்களுக்கு வரங் கொடுத்தருளினோம் நமது சடையிலிருக்கின்ற கங்காசலமே பெருமைபொருந்திய நந்தாநதியாகும் இந்தத் தலத்தில் கொடிய பஞ்சமா பாதகங்களும் போம். எ-று. (உரு)

அஞ்சுகுரோசத்தூரமாகுமந்தத்தலத்தெல்லை, விஞ்சவே யெவரேனு மிதித்தவுடனே துலையாப, பஞ்சமாபாதகங்கள் பறந்தோடு மிப்பதியில், வஞ்சமாமனத்தவரும் வந்திருக்கிற் கதியடைவார்.

(இ-ள்) அந்தத் தலத்திற்கெல்லை ஐந்து குரோச தூரமாகும் இந்த எல்லைக்குள் யாவராயினும் ஓரடியிடில் அவர்களுடைய மகா பாதகங்களெல்லாம் பறந்தோடிப்போகும் வஞ்சனையுள்ளவரானாலும் இப்பதியில் வசித்தால் மோட்சத்தை அடைவார்கள். எ-று. (உசா)

மருவிய விப்பதிமகிமை மாதேகாணென்றுரைத்துப், பரவுகின்ற பிரமாவைப் பார்த்துனது பூசையினால், உரவுபிரமத்துவந் தானுண்டாக வுனக்கென்று, திரமுறு நல்வரங்கொடுத்துச் சிவலிங்கத்துடன் கலந்தார்.

(இ-ள்) இந்தச் க்ஷேத்திரத்தின் மகிமையைப் பெண்ணே நீ அறிவாயென்று உமாதேவியாருக்குரைத்துப் பின்பு தன்னைப் பூசித்துத் துதிக்கின்ற பிரமதேவனை நோக்கி ஓ பிரமனே உனக்குப் பிரமத்துவம் உண்டாகக்கடவதென்று திரமான வரங்கொடுத்துச் சிவலிங்கத்துடன் கலந்தருளினார். எ-று.

மென வெழில்பெறு சூதனு
மினிது, பன்னவே சவுனகனும் பரிவுடனு
ண் மகிழ்வாகி, அன்னவாகன னெவ்வாறரனை
த் தோத்திரஞ்செய்தான், என்னநேர்வரம்பெ
ற்ற னென்பது கூறெனச் சொல்வான்.

(இ-ள்) இவ்வண்ணமாக அழகிய சூதமகாமுனிவர் அன்புடன் சொன்ன அளவில் அதைக்கேட்ட சவுனகனும் மகிழ்வடைந்து சுவாமி பிரமதேவன் எவ்வண்ணம் சிவபெருமானைத் தோத்திரம் செய்தான் என்ன நேர்மையான வரத்தைப்பெற்றன் அவற்றைச் சொல்லியருளவேண்டு மென்று கேட்கச் சூதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினர். எ-று.

சிவபூசைச் சருக்கம்
முற்றுப்பெற்றது.
ஆகச்செய்யுள்—86.

---

உ

சிவமயம்.

இரதினபுரிப் புராணம்.

நான்காவது

# வரம்பெற்ற சருக்கம்.

பிரமபுரப் புராணத்திற் சிவனையன்று பிர
மனுனை தோத்திரஞ்செய் பெருமைதன்னைப்,
பரவுமெவர்களுக்குநாமுரைத்ததில்லைப் பரமர
கசியமாகும் பாரின்மீது, விரவுதிருநீற்றுடன்

கண்டிகையணிந்து மேலாம் பஞ்சாக்கரமோ
தாதபேர்க்கும், உரவுசிவபூசை யில்லாதார்க்
கும் வேதவுரையைப் பொய்யென்றுரைக்கு
நாத்திகர்க்கும்.

(இ-ள்) பிரமபுரபுராணத்தில் பரமேசுவரனை அந்நாளில் பிரமதேவன் வாங்கினால் தோத்திரஞ்செய்த பெருமையைப் பரவுகின்ற யாவருக்கும் நாம் சொன்னதில்லை இது பரமரகசியமாகும் ஆதலாலிந்தமகத்துவத்தைச் சொல்லுகிறோமென்று சூதமகாமுனிவர் சௌனகருக்குச் சொல்லுகின்றார் பூலோகத்தில் நிறைந்த விபூதியையும் உருத்திராட்சத்தையும் அணிந்து மேலான பஞ்சாட்சரத்தைச் செபிக்காதபேர்களுக்கும் ஆனந்தத்தை விளைவிக்கின்ற சிவபூசைபண்ணாதபேர்களுக்கும் வேதவாக்கியங்களைப் பொய்யென்று நிந்திக்கின்ற நாஸ்திகருக்கும். எ-று. (க)

சிவநிந்தைசெய்வோர்க்கும் பாசண்டர்க்கு
ஞ் சிவனை நினையாதார்க்கும் செப்பவொ
ண்ணு, தவனிந்தத் தோத்திரத்தைச் செவி
யிற் கேட்கி லெப்பாவஞ் செய்தாலுமடைவ
ன் முத்திப், பவமிகுந்த பாதகங்களனேகஞ்
செய்தோர் பரதிரவியங் கவர்ந்தோர் பரிவில்
லாதார், அவரன்னமுண்டோர் சிராத்தம்புசி
ந்தோர டாதவுண்டிதனை நுகர்ந்தோர ரவகு
ணத்தோர்.

(இ-ள்) சிவநிந்தனை செய்யப்பட்டவர்களுக்கும் பாசண்டருக்கும் சிவனை நினைக்காதவர்களுக்கும் சொல்லுதற்கரிதாகிய இந்தத் தோத்திரத்தை யாவராயினும் காதினாற்கேட்டால் அவர்கள் பாவமெ

ல்லாம்நசித்துமோட்சத்தை அடைவார்கள் பாவமி குந்த பாதகங்கள்செய்த அநேகம்பேர்களும் பரதி வியங்களை அபகரித்தவர்களும் அன்புசெய்யாதார் அன்னத்தையுண்டவர்களும் சிரார்த்தங்களில் புசித் தவர்களும் உண்ணத்தகாத வுணவுகளை உண்ட வர்களும் அவகுணமான துற்குணத்தவர்களும் எ-று. (உ)

உண்டிதனைப் பந்திபேதகஞ்செய்துண்டோ
ரொருவருக்குக் கொடுப்பதனை விலக்கல்செய்
தோர், கொண்டவிரதந்தவிர்ந்தோர்பொய்சொ
ல்வோர்கள் கூடிய வேள்வியைக் குலைத்தோர்
கொடியபாவி மிண்டிறுடனெளியாருக் கசிந
செய்தோர் மேவிய பொய்க்கரியுரைந் தோரி
யாவரோனும், புண்டரிகனுரைசெய் தோத்திர
த்தைக் கேட்கிற் புவிமீதிற் புனிதராய் வடவர்
முத்தி.

(இ-ள்) பந்தியில் உணவுசெய்யும்போது தன க்கு நல்லுணவும் பிறருக்கு வேறுவிதமான உணவு மசெய்து புசிப்பவர்களும் கொடுப்பதை விலக்குகி ன்றவர்களும் தாமெடுத்துக்கொண்ட விரதத்தை விடப்பட்டவர்களும் பொய்சொல்லிய பேர்களும் கூடினயாகங்களைக் குலைத்தபேர்களும் கொடிய பா வஞ்செய்தபேர்களும் எளியாருக்கு இடர்பண்ணி னவர்களும் பொய்ச்சாட்சி சொன்னவர்களும் அ ன்றி இன்னும் எவ்விதப் பாதகங்களைச் செய்தவரா யினும் பிரமதேவன் உரைசெய்த தோத்திரத்தை க் கேட்பாராயின் உலகத்தில் புண்ணியராய் வசித் துப பின்மோட்சத்தை அடைவார்கள். எ-று (ந)

இத்தனைகாலமெவர்க்கு முரைத்ததில்லையே
காந்தப்பொருளாகு மிதனையின்று, பத்தியுட

ன்கேட்கையினு னீயுமக்கப் பரமமுனி யாக
கையினுற் பகர்வேன்கேட்டி, சுத்தரத்தின
விலிங்கத்திற் பிரமமான சோதியெழுந்திடக்
கண்டுதொழுதுவேதன், நித்தகர்த்த வத்தபத்
தர்க் கெளியாவென்று நின்று பரவசனுகிப்
போற்றல்செய்வான்.

(இ-ள்) இந்நாள்வரையிலும் யாம் ஒருவருக்கு
ஞ் சொன்னதில்லை இரகசியப் பொருளாகிய இப்
பொருளை இப்பொழுது அன்புடன் கேட்கின்றமை
யாலும் நீயும் பரம சிலாக்கிய முனிவனுகையினுலு
ம் சொல்லுகின்றேன் கேட்பாயாக அந்தச் சுத்த ர
த்தின விலிங்கத்தில் பரப்பிரமசோதிப் பிரகாசம் எ
ழுந்ததைக்கண்டு பிரமதேவன் தொழுதுவணங்கி
நித்தனே கர்த்தனே அத்தனே அடியார்க்கெளியவ
னே யென்று ஆநந்த பரவசத்தனுகித் தோத்தி
ரம் செய்வானுயினுன். எ-று. (ச)

சாம்பசிவமகாதேவுருத்திரபோற்றி சச்சிதா
நந்தபரயோகிபோற்றி, பாம்பணியும் வேணி
மறைமுடிவேபோற்றி பரமகலியாணிசத்தி ய
துரியா போற்றி, யாம் பரவுமீச மகேசுரனே
போற்றியபயகரனேகாலகாலபோற்றி, தேம்
பொருளே யாதியந்தமிலாத திரியம்பகவம்
பிகைநாதபோற்றிபோற்றி.

(இ-ள்) சாம்பசிவ மகாதேவ உருத்திரனே போ
ற்றி சச்சிதாநந்தபரயோகியானவனேபோற்றி சர்ப்
பாபரணமணிந்த சடாமகுடத்தையுடையோனுகிய
வேதாந்தப்பொருளேபோற்றி பரமகலியாணசத்தி
யப்பொருளாகிய துரியனேபோற்றி யாங்கள்பாவித்
துதிக்கின்றஈசமகேசனேபோற்றி அபயாஸ்தத்தை

யுடையவனேபோற்றி காலகாலனே போற்றி வா சனைப்பொருளானவனே ஆதிமத்தியாந்தரகிதனுன திரிநேத்திரதாரியே உமாமகேஸ்வரி நாதனே போற்றி போற்றி. எ-று. (ரு)

ஈசான தற்புருட வகோரவாம விறைவசத் தியோசாத வேகரூப. தேசான சூக்குமனே யனேகரூப சிற்பரானந்த வோங்காரரூப, ஆ சாரமானவனே ரூபாரூப வதலவிதலாதி யண் டமானரூப, வாசாமகோசர வேதாந்தரூப மரு வுதற்பரானந்தரூபா போற்றி.

(இ-ள்) ஈசானம் தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதமென்னும் பஞ்சானனங்களை யுடைய இறைவனே ஏகரூபனே சூக்குமரூபனே அனேகரூபனே சிற்பரானந்த ஓங்காரரூபனே ஆசாரமானவனே ரூபாரூபனே அதலவிதலாதி அண்டசொரூபமானவனே வாசாமகோசரனே வேதாந்தரூபனே தற்பரானந்த சொரூபனே போற்றி போற்றி. எ-று. (சா)

ஆறுமக்கர மெட்டாமக்கரங்க ளைம்பத்தோ ரக்கரங்களனைத்து மேனி,நீறுயமுதல்வ சந்திர பானு நேத்திர நின்மலபண்டித வயித்திய நி ருவிகார, விறுமியோகியரித யகமலவாச விம லகயிலாச நிராமயவுலாச, பேறுகுஞ்சுத்த ரத் தினேசுரனே போற்றி பிஞ்ஞகனே யுன்றிரு த்தாள் போற்றி போற்றி.

(இ-ள்) சடாட்சரம் அட்டாட்சரம் ஐம்பத்தோ ரட்சரங்கள் முதலான அட்சரங்களையெல்லாம் நீறு க்கித் திருமேனியிற்றரிக்கும் முதல்வனே சோமசூ ரிய நேத்திரனே நின்மலனே எல்லாம் வல்லவனே பவப்பிணியை நீக்கும் வயித்தியனே விகாரமில்லா

தவனே பெருமைபொருந்திய யோகியர் இதயகமல த்தில் வாசம்பண்ணப்பட்டவனே மலரகிதனே கைலாசனே நிராமயனே உல்லாசனே அடியார்கள்பேருகிய சுத்த ரத்திநேசுரனே போற்றி பிஞ்ஞகனென்னு நாமத்தை யுடையவனே உனது திருவடிகள் போற்றி போற்றி. எ-று. (எ)

அடியேன்செய் யபசாரமனேகங்கோடி யத்தனையும் பொறுத்தருள்வாய் போற்றி யென்றே, முடிமீதுகுவித்த கையானின்று போற்ற முக்கணனெண்கணன்பான் முனிவுமாறிப், படிமீதில்வேண்டும்வரங்கொடுப்பேங்கேளாய் பங்கயனேயென வேதன் பகர்வானென்றும், கொடிதான விராசதமாங் குணந்தானென்பாற் குறுகாமல் வரங்கொடுப்பாயென்று பின்னும்.

(இ-ள்) அடியேன் செய்த அநேகங்கோடி அபசாரங்களைப் பொறுத்தருளவேண்டுமென்று சிரசின்மேற் குவிந்த கையினனாகி நின்று போற்ற அப்பொழுது பரமசிவன் பிரமதேவன்மேல் உண்டான முனிவுநீங்கி ஓ பிரமனே உனக்கு வேண்டும் வரங்களைக் கேட்பாயாக என்று சொல்ல அதைக்கேட்ட பிரமதேவன் சுவாமி கொடுமையான இராசத குணம் என்பால் வாராதிருக்க வரங்கொடுப்பாயென்று சொல்லிப்பின்னும். எ-று. (அ)

தேவனேயுன்மீதில் வைத்தபத்தி சிதையாமலென்னுளத்தி லிருத்தல்வேண்டும், மேவியிந்தச் சுத்த ரத்தினலிங்கந்தன்னில் விளங்கி யிவ்வாறேயென்று மிருத்தல் வேண்டும், யாவராயினுந் தெரிசித்தோர் கட்கெல்லா மிட்டகாமியங்களெல்லாமி னிதுநல்கிப், பாவவி

னை தீர்த்துமுத்தியுதவவேண்டும் படிமீதிலிப்பி ரமபுரத்திற்குனே.

(இ-ள்) ஓ தேவதேவனே உன்மீதில்யான்வை த்த பத்திசிதையாமல் என்னுளத்தில் இருத்தல்வே ண்டும் இப்பூமியில் பிரமபுரத்திலென்னுல் ஸ்தாபி க்கப்பட்ட சுத்தரத்தின லிங்கத்தில் இன்று சோ திமயமாய் விளங்கிய வண்ணமே என்றும் விளங்கி அருளல் வேண்டும் உன்னைத்தெரிசித்தவர் யாவரா யினும் அவர்கள் விரும்பிய இஷ்டகாமியங்களைக் கொடுத்து அவர்களைப்பற்றிய பாவகருமங்களைத்தீ ர்த்து முத்தியளித்தருளவேண்டும். எ-று (க)

பிறந்தோர்க்கு மிருந்தோர்க்கு மிறந்து
ளோர்க்கும் பேரின்பமாம் பதவி யுதவவேண்
டும், அறந்தானோர் சிறிதுசெய்தபேர்கட்கெ
ல்லா மனேக புண்ணியஞ் செய்த பலனுதவ
வேண்டும், சிறந்தொருவர்க்கமுதளித் தாலா
யிரம்பேர் சேர்ந்து புசித்திடு பலனேகொடுத்
தல்வேண்டு, மறந்த சிந்தையாரோனு மொரு
நாள்வைகில் வளர்ந்துறையும் பாவமெல்லாம
கற்றவேண்டும்.

(இ-ள்) இந்தஸ்தலத்தில் பிறந்தவர்கட்கும் இ ருந்தவர்கட்கும் இறந்தவர்கட்கும பேரின்பமாகிய மோட்ச பதவியைக் கொடுத்தருளவேண்டும் இந்த ஸ்தலத்தில் சிறிது தருமஞ்செய்தவர்கட்கு அனேக புண்ணியபலனைக் கொடுத்தருளவேண்டும் ஒருவரு க்கு அன்னங்கொடுத்தால் ஆயிரம்பேருக்குக்கொடு த்தபலனை அளித்தருளவேண்டும் எப்பொழுதும் பாவவினையையே பயின்றவராயினும் அவர்கள் இ த்தலத்தில் தங்குவாராயின் அவர்கள் பாவங்கள் யாவற்றையும் அகற்றல்வேண்டும். எ-று. (உ)

மதிக்குமின்றுபோல வித்த வைகாசத்தின்
மருவுபௌரணைத் தினத்தின் மகிழ்ச்சியாகக்
கதிக்கினிய விந்தவிரத்தின விலிங்கந்தன்னைக்
கலந்தபஞ்ச கவ்வியத்தா லெண்ணெய்க்காப்
பால், விதிப்படியே யபிடேகஞ்செய்து சால
மேனியெலா முபசாரத்தாலேயொற்றி, இதற்
குப்பின் பரிவட்டமியல்பாச் சுற்றியிணர்த்து
ம்பைமாலையினை யிணையச்சாத்தி.

(இ-ள்) இயாவராலு மதிக்கப்பட்ட இன்றைத் தினம்போல வைகாசிமாதப் பௌரணையில் ஆனந்தத்தைவிளைவிக்கின்ற முத்தியைக்கொடுக்கும் இந்தச் சுத்தரத்தின இலிங்கத்தைப் பஞ்சகவ்வியத்தினுலும் எண்ணெய்க்காப்பினுலும் விதிப்படி அபிஷேகஞ் செய்து உபசாரத்துடன் திருமேனியில் ஒற்றுடையிட்டுப் பின்பு பரிவட்டஞ்சுற்றி அலர்ந்த தும்பை மாலையைப் பொருந்தத் தரித்து. எ-று. (கக)

யாவர் தொழுதாலுமிந்த விலிங்கந்தன்னி
லிப்படியே தெரிசித்தோர் கண்ணிற்காண,
சேவைகொடுத்தவர் கடமக்கந்தந்தன்னிற் சி
றந்த சாயுச்சியமே கொடுத்தல்வேண்டும், மே
வியவர் தமைத்தெரிசித்தோர் கட்கெல்லாமி
க்க செல்வ முதவியவர் கிளைஞரோடுந், தா
வுகயிலாயத்திற் சாரூபத்தைத தரித்திருந்து
பின்னர் முத்தியடையவேண்டும்.

(இ-ள்) இயாவராயினும் யான் மேற்சொல்லிய வண்ணம் அபிஷேகம் முதலியவைசெய்து வணங்கினுல் இன்று தோன்றியவாறே அவர்கள் கண்ணிற்காணச் சேவைகொடுத்து இறுதிக்காலத்தில் சிறப்பான சாயுச்சியபதவியும் கொடுத்தருளவேண்டும் அப்படித் தெரிசித்தவர்களைத் தெரிசித்தவர்கட்கெல்லா மிக்க பாக்கியத்தைக் கொடுத்து அவர்கள் சு

ற்றத்தாருடன் சாரூபத்தைப் பெற்றுக் கயிலாசத்திலிருந்து பின்பு மோட்சத்தை யடையவேண்டும். எ-று. (கஉ)

மன்னுவைகாசிப் புகரோன்வாரந் தன்னில் வந்து சிறுகாலைநந்தைநதியின் மூழ்கிப், பின்னர் சமாபதித்தீர்த்தம்படிந்து கோயிற்பிரதக்கணஞ் செய்தம்மை யகிலாண்டதேவி, தன்னை மணமல்லிகை மாலையினாற் சாத்திச் சந்தனமு மரிசனமுஞ் சிறக்கத்தீட்டிப், பன்னுபச்சைமாவோடையமுது நல்லபாலுடனி வேதித்துப் பணிந்துபோற்றி.

(இ-ள்) நிலைபெற்ற வைகாசிமாதம் சுக்கிரவாரம் உதயகாலையில் நந்தாநதியில் ஸ்நாநம்பண்ணிப் பின்பு சமாபதித்தீர்த்தத்தில்மூழ்கித் திருக்கோயிலைப் பிரதக்ஷணஞ்செய்து அகிலாண்டநாயகிக்கு மணங்கமழும் மல்லிகைமாலைசாத்திச் சந்தனமு மஞ்சளும் சிறப்பாகத் தரித்துப்பச்சைமாவும் பஞ்சாமிருதமும் பாலுடன் நிவேதனஞ் செய்து பணிந்து போற்றி. எ-று. (கங)

மங்கையர்களிப்படியே நாலுவாரமதிப்புடன்போற்றிடிற் சென்மமலடு நீங்கித், தங்கிய கர்ப்பந்தரித்து மகவுண்டாகித் தாமரையின் னிருவாருடானும் பெற்றே, எங்குநிறைபுகழுடனே வாழவேண்டு மெழில்பெறவே மாசியெனுமாதந்தன்னிற், பொங்குநந்தாநதி மூழ்கிநீறுசாத்திப் பொருந்திய கண்மணிமாலை நிறையப் பூண்டு.

(இ-ள்) மாதர்களும் இவ்வண்ணமே வைகாசி மாதத்தின் நான்கு சுக்கிரவாரத்திலும் போற்றினால் சென்மலடு நீங்கிச் சந்ததியுண்டாகி இலக்குமிசா

சுவதி இருவர்கடாட்சமும் பெற்று எங்கு நிறைபு கழுடனே வாழவேண்டும் அல்லாமலும் மாசிமாத த்தில் நந்தாநதியில் மூழ்கி விபூதிதரித்தலுடன் உ ருத்திராட்சமாலையும் பூண்டு. எ-று. (௧௪)

தெக்கணத்தினுறைமூர்த்திக் கெதிரதாகச்
சிறக்கவெழுதின மஞ்சுதினமூன்றுரும், தக்க
தினமன்றியொரு தினந்தானேனுஞ் சாந்தமு
டனிருந்து பஞ்சாக்கரஞ்செபிக்கில், உக்கிரமா
ம் பூதவேதாளத்தோடு முடன்பிரியாப்பிரம
ராக்கதி பேயெல்லாம், மிக்கவவனைக்காணி ல
ரியைக்கண்டு வெருவுமதமாவென விட்டேக
வேண்டும்.

(இ-ள்) தச்சணமூர்த்தி சன்னிதியில் ஏழுதின மாயினும் ஐந்துதினமாயினும் மூன்றுதினமாயினும் அல்லது ஒருதினமாயினும் சாந்தகுணத்துடனிரு ந்து பஞ்சாக்ஷரம் செபித்தவர்களைக் காணில் உக் கிரமான பூதவேதாளங்கள் நீங்காத பிரமராக்ஷதிக ள் பேய்கள் முதலானவைகளெல்லாம் சிங்கத்தை க்கண்ட யானையைப்போல் பயந்தோடல் வேண்டு ம். எ-று. (௧௫)

இப்படியே யிவ்வரங்க ளனைத்தும்வேத
னெம்பிரான்றனைக்கேட்க வுளமகிழ்ந்தே, அ
ப்படியேயருளின மென்றுரைத்தானன்னவக
ங்களிகூர்ந்தே சவுனகன்முன்கூறும், மைப்ப
டியுங் குழலுமையாளுடனே துய்யமாமணியீ
சுரன்றனக்கு மகிழ்ந்தே வேதன், எப்படித்
தான்திருவிழாநடத்தல் செய்தானென்ப தனை
க்கூறுமெனச் சூதன்சொல்வான்.

(இ-ள்) பிரமதேவன் இவ்விதமான வரங்களை யெல்லாந் தந்தருளவேணுமென்று பரமபதியைக்

கேட்கச் சிவபெருமான் அவ்வண்ணமே தந்தருளி னுமென்று சொல்லினுரென்றதைக் கேட்ட சௌனகன் அகமகிழ்ச்சிகொண்டு சூதமுனிவரை நோக்கிச் சுவாமி சமாபதியாருக்கும் துய்யமாமணியாருக்கும் பிரமதேவன் நடத்திய திருவிழாச்சிறப்பையும் சொல்லியருளவேணுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். எ-று. [௱௨)

வரம்பெற்ற சருக்கம்
முற்றிற்று.
ஆகச்செய்யுள்—102.

---

உ

சிவமயம்

ஐந்தாவது

## திருவிழாச் சருக்கம்.

வேறு.

சிந்தைமகிழ்ந்தயனர்ச்சனை செய்துதிருநாட்கள்
சந்ததமுஞ்செய்து வந்திடுசெயலெதுதானென்னிற்
கந்தமிகுந்த சுவாசுகமாரன் களிகூர
வந்ததுமுந்துறு சித்திரைதானெனு மதிமாதம்.

(இ-ள்) பிரமதேவன் மனமகிழ்ச்சியுடன் சிவார்ச்சனை செய்து பின்னடத்திய திருவிழாச்சிறப்பு எவ்வாறென்னில், வாசனைமிகுந்த நல்ல புட்பபாணத்தையுடைய மன்மதன் களிப்படையும்படி வருகின்

ற வசந்தகாலத்தில் மேடமாதமென்கின்ற சித்தி ரைமாதம் பிறந்தது. எ-று. (க)

கோடலர் சண்பகநீடுறு புன்னைகுருக்கத்திப்
பாடலமாமகிழ் கேதகைமாதுளை பைம்பூகம்
எடலருங்கனி காரமொடார மிருஞ்சோகம்
காடணிகூவிளை புன்குநறும்கனிகற்சூரம்.

(இ-ள்) கொம்புகள்விரிந்த சண்பகம், நீண்டபு ன்னை, குருக்கத்தி, பாதிரி, மகிழ், தாழை, மாதளை, பசுமையையுடைய கமுகு, ஏடவிழ்ந்த கோங்கு, ச ந்தனம், பெரிய அசோகம், காவிற்கு அலங்காரமா கிய வில்வம், புன்கு, நறிய கனிகளைத்தருகின்றபே ரீந்து. எ-று. (உ

தாழைபலாவலர் தாதகிதோடு தருங்குந்தம்
வாழையொடாசினி நீடதவால் மருதம்பன்னீர்
காழையுறும்பெரு வாகைசெருந்திகருஞ்சம்பு
மாழைபெருந்தரு வாமலகத்துடன் மலிசோலை.

(இ-ள்) தென்னை, பலா, மலர்ந்த ஆத்தி, விரிந் த குருந்தம், வாழை ஈரப்பலா, நீண்டஅத்தி, ஆல், மருதம், பன்னீர், வயிரம்பொருந்திய பெரிய வா கை, செருந்தி! கருநாவல், பெரிய புளி மா, நெல்லி, முதலான விருட்சங்களால் நிறைந்தசோலை. எ-று.

மல்லிகை பட்டிகை கருமுகநறவணி மந்தாரம்
எல்லையில் வாசமலிந்த செவந்தியொடிருவேலி
முல்லைகடுக்கை மணந்தருத மனகமுதலாக
அல்லிதருஞ்சிறு சண்பகவல்லி யநேகங்கள்..

(இ-ள்) மல்லிகை, இருவாகூழி, அரும்புநிறைந் த மந்தாரம், வாசனைமிகுந்த செவ்வந்தி, மரு, முல் லை, மருக்கொழுந்து, அகவிதழையுடைய சிறுசண்

பகம்முதலான கொடிகளும் விருக்ஷங்களும் அனேகம். எ-று. (ச)

இத்தகையாகிய சோலையின்வாவிகளிடையெங்கும்
மெத்தியதாமரை செங்கழுநீரலர் விரிநெய்தல்
கொத்தலர் செங்கிடை வள்ளையரத்தங்குளிர்நீலம்
நத்தொடுபுட்கயல் தத்திமிகுந்தே நனிவாழும்.

(இ-ள்) இத்தன்மையான சோலையினடுவிலுள்ள தடாகங்களினிடமெங்கணும் நிரம்பியதாமரையும் செங்கழுநீரும் மலரவிழ்ந்தநெய்தல்களும் கொத்துகளலர்ந்த செங்நெட்டியும் வள்ளைத்தண்டும், செம்பரத்தையும் குளிர்ச்சிபொருந்திய நீலோற்பலமும் சங்கும் பட்சிகளும் கயன்மீன்களும் மிகுந்து வாழாநிற்கும். எ-று. (ரு)

கூவியகோகில வோசைகளாசைகள் குடிகொள்ளத்
தாவியமாமயி லாடிடவண்டுகடான்பாடப்
பாவியல்சேர்திரு வாசகநாளும் பைங்கிளிகள்
நாவின்மொழிந்திடு சோலைகள்சூழ்தரநவாக.

(இ-ள்) அச்சோலையினடுவாகக் கூவப்பட்ட குயிலின் ஓசையைக்கேட்டு அன்புகுடிகொள்ளத் தாவிச் செல்கின்ற மயில்களாட வண்டுகள்பாடப் பாவிலக்கணமமைந்த திருவாசகத்தைப் பசியகிளிகள் நாவினாற் சொல்லாநிற்கும். எ-று. (சா)

பசைந்தெழுபுனல் சுற்றுறுகுழி நடுவண்பாங்காக
இசைந்துறுசந்திரகாந்தமெனுஞ்சிலையேகொண்டே
அசைந்துறுதென்றல் வருந்திசையது முகமேயாக
வசந்தவிமண்டப மொன்றெழிலாக வகுத்தேதான்.

(இ-ள்) பிரமதேவனானவன் விரும்பி அச்சோலையிலுள்ள தடாகத்தின்மத்தியில் அழகாக இசைந்தசந்திரகாந்தக் கற்களைக்கொண்டு தென்றற்காற்றி

ற்கு எதிர்முகமாக வசந்தமண்டபம் ஒன்றுவகுத்து. எ-று. (எ)

காவணமானதுசுற் றுறுபவளக்கால்கொண்டே
மேவிடவாசவிலா மிச்சங்கொடு மேய்வித்தே
தாவில்விதானிப் பதுமவிமலர்கொடுதான்செய்து
பூவடைவாலுகமீதுபனிப் புனல்பொலிவித்தே.

(இ-ள்) பவளக்கால்கள் நிறுத்தி அதன்மேல் வாசனைப்புற்களால் பந்தல்வேய்ந்து குறைவில்லா தபலபுட்பங்களினல் மேற்கட்டிகட்டிப்பூமியில்வெண்மணலைப்பரபபி அதன்மீது பன்னீர்களைப் பொலிவாகத்தெளித்து. எ-று. (அ)

சப்பரமானது பூமலரோகொடுதான் சோடித்
தெப்பதிதன்னிலு மிப்படி யிலையெனவேசெய்தே
ஒப்பிலிரத்தினபுரத் துறைநாயகருடனுகச்
செப்பன கொங்கை சமாபதிமாது சிறப்பாக.

(இ-ள்) பூமலர்களைக்கொண்டு விமானமொன்று எவ்விடங்களிலும் இவ்வாருக இல்லையென்று சொல்லும்படி செய்வித்து அதில் ஒப்பில்லாத இரத்தினபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற நாயகரான சுத்த ரத்தினேசுரரையும் இங்குலிகச் செப்பையொத்த தனபாரத்தையுடைய சுமாபதியாரென்கிற அகிலாண்டவல்லியாரையும் எழுந்தருளப்பண்ணி. எ-று.(

அலரணிசப்பரமீதி லெழுந்தருளப்பண்ணி
நலமிகு சந்தவசந்தக் காவணநடுவைத்தே
யிலகியசிங்காதன மண்டபமதிலினி தேற்றிப்
பலமணிசந்தனங் குங்குமமான்மதம் பன்னீர்கள்.

(இ-ள்) புட்பங்களால் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தின்மீது சுவாமியையும் அம்மனையுமெழுந்தருளப்பண்ணி நன்மைமிகுந்த சந்தனவாடையுடன் க

லந்து வரப்பட்ட தென்றல் வீசுகின்ற வசந்தப்பந் தலின் நடுவில் பிரகாசிக்கின்ற சிங்காதனத்திலேற் றிப் பல ஆபரணங்களும் சந்தனம் குங்குமம் கஸ் தூரி பன்னீர்களும். எ-று. (ம)

சாத்திமலிந்த சுகந்தத்தொடை மலர்தன்னோடும்
ஏத்தி நிவேதன முழுதுந்தூபமு மினிதாகத் [ண
தோத்திரமேசெய்து மங்கையர்நடனத்தொழில் கா
வேத்திரபாணிகடிருவோலக்க மிரச்செய்ய.

(இ-ள்) ஆபரணம் சந்தனம் குங்குமம் கஸ்தூ ரி பன்னீர் முதலானதும் சுவாமிக்கும் அம்மனுக்கு ம் தரித்து அதனுடன் சுகந்த மலர்களினாலே தொ டுத்த மாலைகளுந் தரித்து நிவேதனஞ்செய்து தூ பதீப வுபசாரங்களையு முடித்துத் தோத்திரஞ் செய் தபின் அரம்பைமாதர்கள் நடனஞ்செய்ய வேத்திர பாணிகள்திருவோலக்கதெரிசனஞ்செய்யவும்.எ-று.

வேறு.

இந்தநல்வசந்தமு மிலங்குபணிலங்குறமொ
ழிந்துவரு மங்கைமடவார், கொந்தளகபந்திக
ள் வகிர்ந்து மலர்கொண்ட தொடைகொண்டு
குழலைப்பின்னியெ, சந்தனநிரம்பிய தனந்த
னிலுமங்கெழில் கொடங்கமெனு மங்கமிசை
யுங், கந்தமிக வெங்கணுமணிந்து நடனங்கள்
செய்து கம்பிதவசந்த மறைவார்.

(இ-ள்) இந்நன்மையான வசந்தப் பாக்களைப் பண்பொருந்தப்பாடி ஆடுகின்ற பெண்கள் அளக பாரத்தின் பந்திகளை வகிர்ந்தெடுத்து அதில் புட்ப ங்களாற்றொடுத்த மாலைகளையணிந்து சந்தனக்குழ ம்புதிமிர்ந்த தனபாரத்திலும் பொன்போலு மேனி யிலுங் கதம்பப்பொடிகளை யணிந்து நடனமாடி வ சந்தம் பரவுவார்கள். எ-று. (கஉ)

கனகமணியண்டைகளை வெள்ளியண்டைக ளுடன் காந்தளங்கையிலேந்திக், குனகுகிளி யெனு மழலைவஞ்சியர்கள் களபக்குழம்பினை முகந்தெறிகுவார், தனகடினவம்புகள் பொரு தறக்கைகளிற் றுங்கியே நாணிநிற்பார், தின கரனையெதிர்கண்ட கமலமெனுமுகமாதர் செ ண்டுகளெறிந்து மகிழ்வார்.

(இ-ள்) சுவணத்தினாற் செய்யப்பட்ட அழகு பொருந்திய தட்டுக்களும் வெள்ளித்தட்டுகளும் காந்தளங்கையிலேந்திக் கிளிபோலுஞ் சொல்லினை யுடைய பெண்கள் களபச்சேற்றினை முகந்தெறிவா ர் கச்சறுந்த தனங்களைக் கையிலேந்துவார் வெட்கி நிற்பார்கள் சூரியனைக்கண்டு மலர்ந்த தாமரைமல ரையொத்த முகத்தையுடைய பெண்கள் ஒருவர் மேலொருவர் மலர்ச்செண்டுகளையெறிந்து விளையா டுவார்கள். எ-று. (௰௩)

கேடகக்குழிதனிற் குதிகொண்டு நீந்துவா ர் கேசங்களவிழ விழுவார், சூடகக்கைகளாற் புனன்முகந்தெறிகுவார் சூழ்புனலின் மூழ்கி யெழுவார், பாடகக்கால்களிற் கலைசுற்றவரா வென்று பதைபதைத்துளம் வெருவுவார், ஆ டகப்படிகளில் வழுக்கிவிழுவார் நீரிலாடைவி ழவே நாணுவார்.

(இ-ள்) நீரிற்குதித்து நீந்துவார்கள் கூந்தலவி ழச் சலத்தில் விளையாடுவார்கள் வளையலையணிந்த கைகளினாலே சலத்தை முகந்தெறிவார்கள் சலத்தி ல் மூழ்கி யெழுவார்கள் இடையில் தரித்த வஸ்திர ம் அவிழ்ந்து பாடகக்கால்களில் சுற்றிக்கொள்ளப் பாம்பு சுற்றிக்கொண்டதென்று உள்ளம் பதைப தைத்து வெருவுவார்கள் கரையில் ஏறுகிறபோது

சுவர்ணத்தினுல் செய்த படிகளில் கால்வழுக்கி வி ழுவார்கள் வஸ்திரம்அவிழ வெட்கப்பட்டு நிற்பார் கள். எ-று. (கச)

இந்தவகை வளர்பிறைச் சத்தமிதொடங்கி
யேயிறைவனுடனிறைவிமிகவும்,சிந்தைமகிழு
ம்படி வசந்தம்விளையாடியே சித்திரைப்பௌர
ணையிலே, முந்துவகையபிடேக முஞ்செய்து
மகிழ்வான்முடித்தனன் மாதபூசை, பிந்தவரு
வைகாசி மாதத்திருத்தேர் பிறங்குதிருநாளை
மொழிவாம்.

(இ-ள்) இவ்வண்ணமாக வளர்பிறைச் சத்தமி தொடங்கிச் சிவபெருமானும் தேவியாரும் மனமகி ழும்படி வசந்தம் விளையாடிச் சித்திரைப்பௌரணை யிலே முன்சொல்லியபடி அபிஷேகஞ் செய்து மகி ழ்வுடன் மாதபூசையும் பண்ணினுன் வைகாசிமாத த்தில் இரதவுற்சவம் நடத்திய சிறப்பினையுஞ் சொ ல்லுவாம். எ-று. (கரு)

வையமீதினில் வந்தவைகாசிமாதத்தின் ம
ருவிரத்தினபுரத்துத், துய்யமாமணி யீசரே
றிய திருத்தேர்துலங்கு திருநாளென்னவே,
வெய்யமால் யானைமிசை வள்ளுவர்களேறியே
வீதிவீதிக ளெங்குமே, கையினுன்முரசறை
ய நகரிசனமெங்குங் களிப்புடன் மிகமகிழ்ந்தே.

(இ-ள்) இவ்வுலகில் வரப்பட்ட வைகாசிமாதத் தில் இரத்தினபுரத்திற் பொருந்திய துய்யமாமணி யீசுரர் திருத்தேரில் ஆரோகணித்துவரப்பட்ட திரு நாளாகும் இதனை யாவருமறிவீர்களென்று கோபத் தையுடைய பெரிய யானையின்மீது வள்ளுவர்களே றி வீதிகளெங்குஞ்சென்று முரசறைந்தார்கள் அ

தைக்கேட்ட நகரத்துள்ள ஜனங்கள் இயாவரும் ஆநந்தசாகரத்தி லழுந்தி. எ-று. (கசு)

வீதிகள்சிறக்கவே தோரணநிறுத்துவார் மிக்கவேதிகை யமைப்பார், கோதில்பவளத்தினாற் கால்களைநிறுத்திக் கொடுங்கைககனகத்தமைப்பார், போதிகைவிளங்கிடுந்தூணுத்திரங்களைப் புதியபட்டான் மறைப்பார், சோதிபெறு சுவர்களைக் களபகத்தூரியாற் சூழ்ந்துசித்திரமெழுதுவார்.

(இ-ள்) வீதிகளில் தோரணங்களைக் கட்டுவார் மேடைகள் போடுவார்கள் குற்றமில்லாத பவளங்களாற் கால்கள் நிறுத்திச் செம்பொன்னினாற் கொடுங்கைகளமைப்பார் போதிகைவிளங்கிய தூண்உத்திரங்களைப் புதிய பட்டினால் மறைப்பார் பலர்கூடி அழகிய சுவர்களிற் களபகஸ்தூரிகளினாற் சித்திரமெழுதுவார்கள். எ-று. (கஎ)

பச்சைமாணிக்கமுத்தின் றொடைகளூற்றியே பட்டுமேற்கட்டி புனைவார், செச்சைமாலைத் தொடையல்கட்டியே வகைவகைச்செய்ய பூப்பந்தலிடுவார்,வச்சிராயுதனுலக மென்னவே பொன்னால் வகுதததிண்ணைகண் மெழுகுவார், கச்சமில்லாமணிய ழுத்தியேவாசலிற் கனகதோரணமமைப்பார்,

(இ-ள்) மரகதத்தினாலும் மாணிக்கத்தினாலும் முத்துக்களாலும் மாலைகள் தொடுத்துத் தொங்கக்கட்டிப் பட்டுவஸ்திரங்களினால் மேற்கட்டி கட்டுவார்கள் வெட்சிமாலைகளைத் தொங்கக்கட்டிச் சிவந்த புட்பங்களினாற் பந்தலிடுவார்கள் இந்திரஉலகம் இதுதானென்று சொல்லும்படி பொன்னாலமைக்கப்பட்ட திண்ணைகளைச் சந்தனக்குழம்பால் மெழுகுவார்கள

குற்றமில்லாத இரத்தினங்களைப் பதித்த வாசல்களி ல் பொன்னரிமாலையைத் தூக்குவார்கள். எ-று. ()

செம்பொனாற்கும்பம் பசும்பொனான் மாவி லை சிறந்த தேங்காய்மணியினாற், பைம்பொனா ல் வேதிகை வெண்பொனான்மென் முளைப்பா லிகை நிரைத்துவைப்பார், தம்பமானதைமணி யினாற்பொதிகுவார் செய்ய சாந்துகொடுதரை மெழுகுவார், உம்பர்மாளிகைதொறுங்கொடிக ளணிவார் வீதியொளிபெறத் தீபமிடுவார்.

(இ-ள்) செம்பொன்னினாற் கும்பமும் பசும் பொன்னினால் மாவிலையும் நவரத்தினங்களினால்தே ங்காய்களமைத்துப் பசும்பொன்னினாலமைத்த தி ண்ணைகளிற் பரப்பி வெள்ளியினால் பாலிகைகளை நிரைநிரையாக வைப்பார்கள் கம்பங்களைநாட்டி அ தில் மாணிக்கங்களைப் பதிப்பார்கள் சிவந்த சந்த னக்குழம்பால் பூமியை மெழுகுவார்கள் மேல்வீடு கள்தோறுங் கொடிகளை நிறைப்பார்கள் வீதிகளெங் கும் பிரகாசமாகும்படி அளவில்லாத தீபங்களை யே ற்றுவார்கள். எ-று. (௰௩)

நாலுதிசையுஞ் சத்திரசாலை செய்வார் ம ணநறும்புனற்பந்தலிடுவார், பாலுநறையுந் தயி ருநறு நெய்யுமாகவே பந்தியில் விருந்தளிப் பார், ஏலமணியுங்குழன் மடந்தையர்தமேனித னை யிசையவொப்பனைகள் செய்வார், ஞாலமி சையுளபந்து சனமெலாம்வந்துறவு நண்ண வேதூதுவிடுவார்.

(இ-ள்) நாலுதிக்குகளிலும் அன்னசத்திரமும் யாகசாலைகளும் செய்வார்கள் வாசனையுடைய பன் னீர்க்குடங்களைப் பந்தலெங்கும் வைப்பார்கள் பா ல் தேன் தயிர் நெய்யுடன் யாவருக்கும் விருந்தளி

ப்பரர்கள் சாந்தணிந்த அளகபாரத்தையுடைய மா தர்கள் தங்கள் மேனிகளை அழகுபொருந்த அலங் காரம் செய்வார்கள் உலகத்திலுள்ள பந்துஜனங்க ளெல்லாம் வந்து உறவுகொள்ளும்படி தூதுகள் வி டுவார்கள். எ-று. (உ௰)

வேறு.

இலகுமான கருளோரியாரு மிவ்வகைப்
பலபலவிதத்தினுற் பரிவுகூர்தர
உலகெலாம் படைப்பவனு வந்து நோக்கியே
அலகினூற்கணித மாமதனையுன்னியே.

(இ-ள்) பிரகாசிக்கின்ற பெரிய நகரத்திலுள் ளோர் இயாவரும் இவ்வண்ணமாக மகிழ்ச்சிஅடை ந்திருக்க அப்பொழுது பிரமதேவனானவன் சந் தோஷித்து நகரின் அலங்காரத்தை நோக்கி அளவி ல்லாத சாஸ்திரகணிதத்தை மனதில் எண்ணி.எ-று

திக்கெனுங்கிராம தேவதைகள் பூசனை
தக்கதோர்கிராம சாந்திகளுந்தான்செய்து
சுக்கிலபக்கத்திற் றோன்று சட்டியிற்
புக்கதாமகிழ் புனர்பூசநாளிலே.

(இ-ள்) திக்குகளிலிருக்கின்ற கிராமதேவதை களுக்குப் பூசைசெய்து தகுதியாகக் கிராமசாந்தி களு முடித்துச் சுக்கிலபக்ஷத்திற் றோன்றிய சஷ்டி த்திதியில் பொருந்திய புனர்பூசநக்ஷத்திரத்தில்.எறு

அங்குரார்ப்பணஞ்செய்தே யன்னவூர்தியான்.
பொங்குமோமத்தொழில் புரிந்துபோற்றியே
தங்கமார்ந்தில குறப்பதுமந்தாபித்துக்
கொங்கலரன்னமாங் கொடியையேத்தினன்.

(இ-ள்) அங்குரார்ப்பணஞ் செய்து மூன்றக்கி னியால் ஓமத்தொழிலை நடத்திப் பொன்னால் நி

றைந்து பிரகாசிக்கும்படி பதுமபீடந் தாபித்து வா சனேமிருந்த தாமரைமலரில் எழுந்தருளிய திருமட ளேப் பூசைபண்ணினன். எ-று. (உக)

ஆகமவிதிப்படி யட்டதிக்கினும
வாகினுலவரவர் வாகனங்களால்
ஓகையாற்கொடிகளு மோங்கவேத்தியே
தோகைபாகனை மிகத்தொழுது போற்றியே.

(இ-ள்) ஆகமசாஸ்திரவிதிப்படி அஷ்டதிக்கினு மிருக்கப்பட்ட தேவதைகளை அழகுபொருந்த அவ ரவர்கள்வாகனங்களில். ரோகணிப்பித்துச்சந்தோ சத்துடன் கொடிகளை யேத்திப்பின்பு உமாபங்கனு கிய பரமசிவனே மிகவும் தொழுதுபோற்றி. எ-று

பேரிகைதாளத்தாற் பிறங்குதேவர்கள்
சேரவேவந்துதான் சேவைசெய்யவே
சீரியலத்திர தேவரைக்கொடு
பாரியபலியெலாம் பாலித்தானரோ.

(இ-ள்) மேளதாளங்கள்முழங்கப்பிரகாசிக்கின் ற தேவர்கள் தெரிசனஞ் செய்யும்படி சிறப்பினையு டைய அஸ்திரதேவரைக்கொண்டு பெரியபலியெல் லாங் கொடுத்தான் எ-று. (உரு)

கணபதிதிருவிழாக் கந்தனுற்சவம்
மணமிகநடத்தியே மண்டபப்படி
பணபதிதனை யணிபரமனன்பினுல்
நணுகிடவகைவகை நடத்தினரோ.

(இ-ள்) கணபதிதிருவிழா சுப்பிரமணியர்திருவி ழா திருக்கலியாண உற்சவம்முதலானதும் நடத்திப் பின்னர் மண்டபப்படியிலே ஆதிசேஷ கங்கணம ணிந்த பரமசிவன் மகிழும்படி விநோதவிநோதமா க நடத்தினன். எ-று. (உசு

நாலுநாட்டிருவிழா நடந்தசப்பரம்
சாலவேநடத்திப் பின்றருமவேதனும்
ஏலவைந்தாந்தின மிடபவாகனம்
மேலதாந்திருவிழா விழைவித்தானரோ.

(இ-ள்) நாலாந்திருவிழா நடக்கப்பட்ட சப்பரத்தின்பேரில் மிகவும் சிறப்பாகநடத்திவைத்துப் பின்பு தருமசொரூபியாகிய பிரமதேவன் சிறப்புப் பொருந்தும்படி ஐந்தாந்தினத்தில் விருஷபாரூடரா எழுந்தருளிவரும்படி செய்வித்தான். எ-று. (உஎ)

ஆறதாந்திருவிழா யானைவாகனம்
வீறுடனேழி லிந்திரவிமானமும்
கூறுமெட்டதனிலே குதிரைவாகனம்
பேறுறநடத்தியே பிறங்குமொன்பதில்.

(இ-ள்) யானைவாகனத்தில் ஆறுந்திருவிழாவும் இந்திரவிமானத்தில் பெருமைபொருந்திய ஏழாந்திருவிழாவும் குதிரைவாகனத்தில் எட்டாந்திருவிழாவும் நடத்திவைத்துப், பின்பு பிரகாசிக்கின்ற ஒன்பதாந்தினத்தில். எ-று. (உஅ)

பொன்னணியிரத்தின புரத்துநாயகர்
நன்னுதற்சமாபதி நாயகிக்குமே
உன்னியதினகர னுதிக்குமுன்னமே
மன்னுநந்தாநதி மஞ்சனங்கொடு.

(இ-ள்) ஒன்பதாந்திருநாளில் அழகுபொருந்திய இரத்தினபுரீசுவரர்க்கும் நன்னுதலையுடைய சமாபதியென்னும் அகிலாண்டநாயகிக்கும் சூரியோதயமாகுமுன்னமே நிலைபெற்ற நந்தாநதித்தீர்த்தங் கொண்டுவந்து. எ-று. (உகூ)

திருந்தவேவகை யபிஷேகஞ் செய்தபின்
பொருந்துசெம்பொன் கொடுபூனை பட்டாடையை

அருந்தவர்விடும்புலி யதளேச்சாத்திய
பெருந்தகை மருங்கினிற் பிறங்கச்சாத்தியே.

(இ-ள்) திருந்தமுற அபிஷேகஞ்செய்து பின் செம்பொன் இழையாற் புனைந்த பீதாம்பரத்தைத தாருகாவன இருடிகளால் ஏவியபுலித்தோலைத்தரித்த பரமபதியின் யிடையிற்றரித்து. எ-று. (கூ0)

நலமணிநவமணி நற்கிரீடமும்
குலவியமகர குண்டலமுஞ்சந்திர
கலையொடுகங்கை யுங்கண்டமாலிகை
இலகுறுதாளமு மிலங்கச்சாத்தியே.

(இ-ள்) குற்றமற்ற நவரத்தினம் பதித்த நல்ல கிரீடமும்குலாவிய மகரகுண்டலமும்மூன்றாம்பிறைச்சந்திரனும் கங்காநதியும் கண்டமாலிகையும் பிரகாசிக்கின்ற முத்துமாலிகையுந் தரித்து. எ-று.(கூக)

ஆரமும் பதக்கமு மாரமாமணித்
தாருநல்லுதர பந்தனமுங்கண்டிகை
யோரணிவடங்களு மிழையுமுப்புரிச்
சீருபவீதமுஞ் சிறக்கச்சாததியே.

(இ-ள்) சந்தனமும் பதக்கமும் முத்துமணித் தாவடமும் உதரபந்தனமும் உருத்திராக்ஷத்தாவடமும் நூலிழையினல் முப்புரியாகச் சேர்க்கப்பட்ட சிறப்பான பூணநூலுந் தரித்து. எ-று. (கூ௨)

கரந்தனிற் கடயமும் கவின்கொளாழியுந்
திரந்தரு பதமிசைச் சிலம்புங்கிண்கிணி
வரிந்திடு மாவமும் வலியவீரமும்
தருந்தனிக்கழலுடன் றயங்கச்சாத்தியே.

(இ-ள்) கைகளில் கடககங்கணமும் அழகினையுடைய மோதிரமுந்தரித்து மோட்சத்தைத் தரப்ப

ட்ட பாதங்களில் சிலம்புகளையும் கிண்கிணிகளையும் தரித்ததோடு அரவத்தையும் வலியையும் வீரத்தையும் குறிக்கின்ற வீரகண்டாமணியும் பிரகாசிக்கத் தரித்து. எ-று. (௩௩)

செண்பக மல்லிகை செருந்திகூவிளம்
தண்பிடி கடுக்கையார்த மனகதகொடும்
எண்பட வகைவகை யிணங்குமாலிகை
பண்படியளியினம் பரவச்சாத்தியே.

(இ-ள்) சண்பகம் மல்லிகை செருந்தி வில்வம குளிர்ச்சிபொருந்தியகொன்றை ஆத்திமருக்கொழுந்து முதலானவைகளைக் கணக்குவகையாகத் தொடுத்த மாலைகளை இசைபாடுகின்ற வண்டுகள்சூழத் தரித்து. எ-று. (௪௪)

மேருவைவளைத்திடும் வெற்றி வில்லினைத்
தாரணிமுடிமிசைத் தாங்கினுனெனச்
சீரணிசெம்பொனிற் சிறந்தவாசிகை
ஏரணிந்திட மிசையினிது சாத்தியே.

(இ-ள்) ஆதிகாலத்தில் வளைத்த வெற்றிபொருந்திய மேருவில்லை இப்பொழுது மாலையையணிந்த முடிமேற்றாங்கினுனென்று சொல்லும்படி சிறப்புப்பொருந்திய செம்பொன்னுற் செய்து விளங்கிய திருவாசிகையை அழகுபொருந்த மேலே இனிதாகச் சாத்தி. எ-று. (௩௫)

மணிமுலைச சமாபதி மடநதைககுங்கலை
அணிவகை மாலைகளனைத்துஞ் சாத்தியே
தணிதருநெறித்திரு நீறுஞ்சாத்தியே
பணிபதமுடியினுற் பணிந்துபோற்றிப்பின்.

(இ-ள்) நவரத்தின மாலிகைகளைத் தாங்கிய சமாபதியாரொன்னும்அகிலாண்ட நாயகியாருக்கும் ப

ட்டுவத்திரங்களும் ஆபரணங்களும் வகைவகையா கிய மாலைகளுஞ் சாத்திச் சாந்தத்தைவிளேவிக்கின்ற திருநீறுஞ்சாத்தி அரவத்தண்டையணிந்த திருவடி யில் முடியினுற் பணிந்து போற்றிப்பின்னர். எ-று

அருந்திடுமமுதுடன பூபமாதியாத்
திருந்திட நிவேதனஞ் செய்து சோடசந்
தரும்பரிவுடனுப சாரந்தானெலாம்
பொருந்திடவுதவியே பொற்றண்டேற்றினுன்.

(இ-ள்) அருந்தத்தக்க அன்னங்களுடனே அப்பவருக்கங்களேயும் திருத்தமாக நிவேதனஞ்செய்து பரிவாகச் சோடசவுபசாரத்துடன் எல்லா உபசாரங்களேயும் செய்துபின்னர் பொற்பல்லக்கின் மேல் எழுந்தருளப்பண்ணினுன். எ-று. (கூள)

முன்னரோ கணபதி முருகவேளெழிற்
பொன்னணியிரத்தின புரத்துநாயகர்
தன்னிகரிலாதமர் சமாபதித்திருப்
பின்னர்சண்டேச்சுரன் பெரிதுதோன்றினுர்.

(இ-ள்) முன்னுக விக்கினேசுரரும் முருகக்கடவுளும்எழுந்தருளிவரவும் அவர்கட்குப்பின்னுகத்திருமகள் வசிக்கும் இரத்தினபுரியைக் கோவிலாகக் கொண்ட சிவபெருமானும் தனக்குத்தானே ஒப்பாகியமர்ந்த சமாபதியாளென்னும் அகிலாண்டவல்லியாரும் அவர்கட்குப் பின்னுக சண்டேசுரநாயனுரும் எழுந்தருளினுர். எ-று. (கூஅ)

சங்கமெக்காளநற் றூளமத்தளந்
துங்கபெரிகையுட னிடக்கைதுந்துமி
சிங்கநாதத்தொடு சிறந்தமேளங்கள்
எங்கணுஞ்செவிடுற விரைந்துவிம்மவே.

(இ-ள்) சங்கு எக்காளம் நல்லதாளம் உயர்ச்சியான பேரிகை உடுக்கை தேவதுந்துபி சிங்கநாதம் முதலான வாத்தியங்களுடன் சிறந்த மேளவாத்தியங்களும் எவ்விடமும் செவிடுபடச் சத்தித்து அதிகரிக்கவும். எ-று. (௩௯)

மெல்லிய சவரிகள் வீசமீதினிற்
சொல்லருமால வட்டங்கள் சூழ்தரப்
பல்வகையடுக்கொலி பயிலவாசமே
புல்லியதூபத்தின் புகைகள்விம்மவே.

(இ-ள்) மெல்லிய சாமரைகள் வீசவும் சொல்லுதற்கரிய ஆலவட்டங்கள் ஆகாசத்தில் நிறையவும் பலவகையான மணிச்சத்தங்கள் ஒலிக்கவும் வாசனைகள்பொருந்திய தூபத்தின் புகைகள் எங்கும் அதிகரிக்கவும். எ-று. (௪௰)

துங்கமாவேதத்தின் றோத்திரங்களுந்
தங்கிசைநாவலர் தமிழின்பாடலும்
மங்கைமாரிசையுடன் மகரவீணையும்
அங்கவராடலு மாகிமுன்செல.

(இ-ள்) மகத்தாகிய நாலுவேதங்களையும் பிராமணோத்தமர்கள் சொல்லிக்கொண்டு வரவும் எங்கும் இசைபரவிய சமயாசாரியர்கள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரந் திருவாசகமுழங்கவும் மங்கைப்பருவப்பெண்கள் குரலிசையோடு வீணைகள் வாசித்துக்கொண்டு வரவும் அப்பருவப்பெண்களிற் சிலர்நடனமாடவும். எ-று. (௪௧)

முத்தினாற்பவளத்தான் முறைசெய்பொன்னினாற்
பத்திசேர்மணியினாற் பட்டினாற்செய்த
மெத்தியகொடிகளோர் கோடிமீதிடச்
சித்திரம்வகுத்த சீராடிகோடியே.

(இ-ள்) முத்தாற்செய்த குடைகளும் பவளத்திறைற்செய்த குடைகளும் பொன்னிறைற்செய்த வரிசையானகுடைகளும் பத்திபத்தியாக நிறைத்து நல்லரத்தினங்கள் பதித்த குடைகளும் பட்டுகளாற்செய்த குடைகளும் ஆகாசத்திற் சூழ்ந்துவரவும் சித்திரங்கள்வகுத்தகண்ணுடிப்படங்கள் சூழ்ந்துவரவும். எ-று. (சஉ)

சந்திரவட்டமுந் தரணிவட்டமும்
இந்திரமகர தோரணமுமெண்ணிலாப்
பந்தியின்சாலையாப் பற்றுதொங்கலின்
கொந்தலர்பீலியங் குடைகள் கோடியே.

(இ-ள்) சந்திரவட்டங்களும் சூரியவட்டங்களும் தேவேந்திர சம்பிரமமான மகரதோரணங்கள் பந்தியின் சாலையாகப் பற்றிப்பிடிக்கக்கொத்துகளலர்ந்த குஞ்சங்கள் கட்டிய ஆலவட்டக்குடைகள் கோடானுகோடி சூழ்ந்துலாவும். எ-று. (சங)

உலவியவிடையினு முயர்ந்தபொற்கொடி
வலிதருமூடிக மலிந்தபொற்கொடி
இலகியமயிலடி யெழுதுபூங்கொடி
குலவுமன்னக்கொடி கோடிகோடியே.

(இ-ள்) உலாவிவருகின்ற உயர்ச்சியான அழகமைந்த இடபக்கொடிகளும வலிமையமைந்த மிகவு அழகான பெருச்சாளிக் கொடிகளும் பிரகாசிக்கின்றமயிலடியெழுதிய அழகானகொடிகளும் குலாவுகின்ற அன்னக்கொடிகளும் கோடானுகோடிகள். எ-று

மாயனூர்கருட வாகனத்தின்மேல்வர
ஆயபேரிந்திரனி யானைமேல்வரத்
தீயவன்மேடத்திற் சிறக்கவேவரக்
காயுயிர்ச்சமன் பெருங்கடாவின்மேல்வர.

(இ-ள்) திருமால் கெருடவாகனத்தி லெழுந்தருளிவரவும் இந்திரன் யானைவாகனத்தி லேறிவரவும் அக்கினிதேவன் ஆட்டுக்கடாவாகனத்திலேறிவரவும் உயிர்களைக் காயப்பட்ட இயமன் பெரிய எருமைக்கடாவி லேறிவரவும். எ-று. (சரு)

நிருதிதன்றெழிலுறு நிருதன்மேல்வர
வருணனுஞ்சுறமிசை மருவியேவரக்
கருதியவாயுவுங் கலையின்மேல்வர
வருநிதியவனும் புட்பகத்தின்மேல்வர.

(இ-ள்) நிருதிதன்றொழில்பெற்ற இராக்ஷதன் மேலேறிவரவும் வருணன் மகரவாகனத்திலேறிவரவும் வாயு மான்வாகனத்திலேறிவரவும் குபேரன் புட்பகவிமானத்தி லேறிவரவும். எ-று. (சசு)

ஈசனென்றியமபுவா ரிடபமேல்வர
மூசகார்க்கஞ்சுகன் முடுவன்மேல்வரத்
தேசணியந்தரி சிங்கமேல்வர
ஆசிலாக்காளியு மலகைமேல்வர.

(இ.ள்) ஈசனென்றியாரு மியம்புகின்ற ஈசானன் இடபவாகனத்தி லேறிவரவும் மொய்த்த இருளையொத்த சட்டையையணிந்த வயிரவர் சுவானவாகனத்திலேறிவரவும் பிரகாசம்பொருந்திய துர்க்கையம்மன் சிங்கவாகனத்திலேறிவரவும் குற்றமில்லாத காளியம்மன் பிசாசுவாகனத்திலேறிவரவும். எ-று

மற்றுளோர்களுமவர் வாகனங்கண்மேற்
சுற்றியேபணிந்து மெய்த்தோத்திரஞ்செய
அற்றைநாளோர்தரு வடிகண்டின்மேற
பற்றமர்மழுவினா பரிந்துதோனறலும்.

(இ-ள்) மற்றுண்டான தெவர்களெல்லா மவரவர்கள் வாகனங்களி லேறிச்சூழ்ந்து பணிந்து உண்

மையாகத் தோத்திரங்கள் செய்துவர அன்றைறத்தி னம் அழகுபொருந்திய திருவாடுதண்டின்மேல் ம ழுவைக் கையிற்பிடித்த பரமேசுரன் எழுந்தருளி னுர். எ-று. (சஅ)

தேவமால்வரையான் வந்தான்றிரு வில்வ வ னத்தான் வந்தான், நாவினிற் றுதிக்கு நந்தாந திதனக்கிறைவன் வந்தான், பூவினுன்போற்று மந்தப் புகழ்புனை தீர்த்தந்தன்னிற், பாவமோ சனங்கள்செய்யும் பஞ்சமங்கலத்தான்வந்தா ன்.

(இ-ள்) இவ்வண்ணமாகப் பரமசிவனெழுந்தரு ளி வரும்போது பெரிய தேவகிரியான் வந்தான் அ ழகுபொருந்திய வில்வவனத்தான் வந்தான், நாவா ற்றுதிக்கப்பட்ட நந்தாநதிக்கிறைவன்வந்தான் கம லாசனத்தான் போற்றுமக் கீர்த்தியைப் புனைந்த பி ரமதீர்த்தத்தில் பாபவிமோசனஞ்செய்கின்ற பஞ் சமங்கலத்தான்வந்தான். எ-று. (சகூ)

பிரமமாபுரத்தான் வந்தான் பெருஞ்சமாபு ரத்தான் வந்தான், வரமெலாமருளு நந்தாபுர த்துறைமகேசன் வந்தான், பொருவிலா வெ ழிலிரத்தினுபுரத்துறை யொருவன் வந்தான், துரியனுஞ்சுத்த விரத்தின துய்யமாமணியா ன் வந்தான்.

(இ-ள்) பிர மபுரத்தான்வந்தான் பெரியசமா புரத்தான்வந்தான் வரங்களைப்பாலித்தருளும் நந் தாபுரத்து மகேசன்வந்தான் ஒப்பில்லாத அழகு பொருந்திய இரத்தினுபுரத்தொருவனுகிய ஈசன் வ ந்தான் இடபவாகனத்தையுடை சுத்தரத்தினமென் னும் துய்யமாமணீசுரன் வந்தான். எ-று. (ருய)

செப்புமிவ்வாறுசெம்பொற்சின்னங்கடொ
னித்தலோடு, மும்புரமெரித்த நாலுமுதற்பெ
யர் படைத்துவாழும், இப்புரத்தீசனூர்த மிரு
பதம்பணியவென்றே, துப்பணி கடகச்செங்
கைச் சுரிகுழன்மடவாரெல்லாம்.

(இ-ள்) மேற்சொல்லியவாறு பொற்சின்னங்க
ள் தொனித்தவளவில் நந்தபுரமென்றும் இரத்தின
புரமென்றும் பிரமபுரமென்றும் சமாபுரமென்று
ம் நான்கு நாமங்களையுடைய க்ஷேத்திரத்திலெழுந்
தருளிய சிவபெருமான் திருவடிகளை வணங்கவே
ண்டுமென்று பவளங்களையுங் கடகங்களையு மணிந்த
கைகளையும் அளகபாரத்தையுமுடைய மாதர்களு
ம. எ-று. (ருக)

பேதையாதியாகப் பேரிளம் பெண்களீரு
ச, சோதிசேர்தளத்தின்மீதுஞ் சுதைபொதி
மாடமீதும், வீதியின் மருங்கு மேடைவிளங்
கு சாளரத்தினூடும், ஓதைமேகலைகளார்ப்ப
வொருவர்முன்னொருவ ரின்றார்.

(இ-ள்) பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம பெண்ணென்னும் எ
ழுவகைப் பருவப்பெண்களும காந்தியையுடைய த
ளத்தின்மீதும் சுண்ணச்சாந்தந் தீற்றிப் பிரகாசிக்கி
ன்ற மாடமாளிகைகளிலும் வீதிப்பக்கங்களிலும்
மேடைகளிலும் விளங்காநின்ற பலகணியினுள்ளு
ம் மேகலாபரணங்களார்ப்ப ஒருவர்முன்னொருவரா
க நின்றார்கள். எ-று. (ருஉ)

முண்டகவேதன்செய்த முதன்மையாம் பூ
சையாலே, கண்டனமிவனையென்பார் காணு
தற்கெளிதோ வென்பார், கெண்டைவேல் வி

ழிகளாலே கிரியனமார்பிற்பூண்ட, வெண்டா
ளத்தின் மாலைவிளங்கு நீலமதாச்செய்வார்.

(இ-ள்) கமலாசனனாகிய பிரமதேவன்செய்த முதன்மையாகிய பூசையால் நாம் கடவுளைக் கண்டோமென்பாரும் இவர் காணுதற்கெளியரோ வென்பாரும் கெண்டைமீன்போன்ற கண்ணால்பருவத்தை யொத்த முலைகளையுடைய மார்பிற்பூண்ட வெள்ளிய முத்துமாலைகளை இக்கடவுள் மார்பில் நீங்கள் சேரவில்லையேயென்னுங் கருத்தானேக்குந்தோறும் அவைநீலமாலையாகப் பிரகாசித்தன. எ-று.

ஆலமேமிடத்தில் வைத்தாரயன்றலை நகத
தாற்கொய்தார், காலனைக் காலாலட்டார் கண்
ணினுலெரித்தார்வேளை, சாலமுப்புரங்க டன்
னைந் தழுலெழ நகையாற்செய்தார், சூலமு
மழுவுங்கையிற் சுமப்பதே னிவருக்கென்பார்.

(இ-ள்) மேற்சொல்லிய மாதருட் சிலர் ஆலகால விஷத்தைக் கண்டத்தில் வைத்தவரிவரொன்பார் சிலர் இயமனைக் காலால் உதைத்துக் கொன்றவரொன்பார் சிலர் மன்மதனைக் கண்ணாலெரித்தவரொன்பார் சிலர் திரிபுரத்தை நகைத்தெரித்தாரொன்பார் சிலர் அப்படிப்பட்டவர் சூலமும் மழுவுங் கையிற் சுமந்த காரணமென்னென்பார் சிலர். எ-று. (ருஅ)

சிலைமதன்றனை யெரித்தாரென்பது தின்ண
மாயிற், றலையினிற்பாதிமெய்யிற் றருணியரி
ருவர்வாழ்வர், உலைமெழுகென்னவுள்ள முரு
கவே விகாரஞ்செய்தார், கலைமதன்றுனு மை
ந்தாங்கணை மலரொய்தாரெனன்பார்.

(இ-ள்) இவர் காமவிகாரமில்லாதிருக்கக் கருப்புவில்லையுடைய மன்மதனையெரித்தது மெய்யாயி

ன் தருணமங்கையரிருவர் இவர் சிரசிலும் சரீரத்தி லுமிருக்கக் காரணமென் அன்றியும் நாம் இவரைக் கண்டவளவில் அக்கினியைக்கண்ட மெழுகுபோல் நம்மனமுருகக் காரணமில்லை மன்மதன் பாணங்களை யெய்கின்றனனென்பார் சிலர். எ-று. (௫௫)

அண்டத்திலிமையோர்வாழ வாலத்தைத்த
ரித்தாரொன்பார்,கண்டத்தைக் காணீரொன்பார்
காண்கிலம் வளையலென்பார், விண்டொத்த
தோளிபங்கர் வெள்ளிய சோமனருகுந், துண்
டத்தைத் தலைமேற்கட்டித் தோலையே னுடுத்
தாரொன்பார்.

(இ-ள்) சிலர் தேவர்கள் பொன்னுலகத்தில்வா ழும்படி விஷத்தைக் கண்டத்திற் றரித்தாரென்பா ர் சிலர் இவர் கழுத்தைப் பாருங்களென்பார் சிலர் நம்மை வளையல்களைக் காணேமென்பார் சிலர் மூங்கி லை யொத்த தோளையுடையஉமைபங்கனென்பார்பா லசந்திரனைத் தலையிற்றுங்கி யரையிற் புலித்தோலை த் தரித்தாரிதற்குக் காரணமென்னவென்பார் சில ர். எ-று. (௫௬)

தொடுக்குமிவ்வாளிவேளைத் தூளெழப் பா
ரீரொன்பார், அடுக்கலிற்பொன்னும் வேலையத
னிலாரமுமாகிற்பார், இடுக்கணும் விரகந்தீர
வெழுதுமே மடலையென்பார், படுக்கு மெல்
லணைமேல்வீழ்ந்து பரதவித்துழன்றுநிற்பார்.

(இ-ள்) புஷ்பபாணங்களைத் தொடுத்து நிற்கி ன்ற மன்மதனைப் பொடியாகும்படியாகப் பாருமெ ன்பார்கள் சிலர் பருவதத்திலே இலக்குமியும் சமு த்திரத்திலே சந்தனமுமாக நிற்பார்கள் சிலர் து

ன்பமாகிய விரகந்தீர மன்மதசின்னங்கள் நிறைந்த மடல் எழுதுமென்பார்கள் சிலர் சயனத்தில்விழுந்து பாதவித்து வருந்தி நிற்பார்கள் சிலர். எ-று. ()

மங்கையர்குழாங்களெல்லா மறுகியிவ்வாறு கூற, எங்கணும் பூவின்மாரி யிமையவர் சொரிந்துபோற்றத், துங்கமால் விடையிலேறுந் துய்யமாமணியார் சோதி, தங்குமாமேருவென்னத் தழைத்ததோர் மருங்குசார்ந்தார்.

(இ-ள்) இவ்வாறு மாதர்கள் விரகங்கொண்டு ஒருவருக்கொருவர் சொல்லிநிற்கின்ற வேளையில் தேவர்கள் புஷ்பமாரி சொரிந்து போற்றப் புனிதமான இடபத்தின்மேல் துய்யமாமணியார் ஆரோகணித்து மேருகிரியைப்போல் உன்னதமாகியமாடங்கணிறைந்த வீதியில் எழுந்தருளினர். எ-று. (நிஅ)

மன்னிய செம்பொன்சில்லிவச்சிர மச்சுமீது, துன்னிய பூதப்பார்க டுலங்கு கோமேதகந்தான், மின்னுமாணிக்கத்தட்டு மேனிலம்பச்சையோங்கிப், பன்னுசிங்காதனந்தான் பலவகைமணிகளாமே.

(இ-ள்) இடபாரூடராக எழுந்தருளிய பரமசிவன் செம்பொன்னினுற் சகடமும் வச்சிரத்தினுல் மேல்மச்சும் கோமேதகத்தாற் பூதங்களும் பதுமைகளும் மாணிக்கத்தால் தட்டுகளும் மரகதத்தினுல் மேனிலங்களும் நவரத்தினங்களால் சிங்காதனமும். எ-று. (நிசு)

கால்களே பவளமீது கலந்திடு கொடுங்கை தங்கம், வால்கொளுமுத்தின்கோவை வதிந்து பீதாம்பரந்தான், நூல்வழிமையநீலநுவலி

ன்மீ திந்திரகோபம், சாலவேசிகரமீ திற்றம
ணிய மகுடந்தானே.

(இ-ள்) பவளத்தினாலே கால்களும் அதன்மே
ற்றகைகதநினாலே கொடுஙகையும் வெண்மையையு
டைய முகதநுககளினாற் கோவையும் பீதாமபரஙக
ளாற நேர்சசீலையும நீலக்கற்களினால நடுபபதிக
தும இந்திரகோபதனைதமிககுபபதிததும அபராஞ்
சிபபொன்னினாற சிகரமும. எ-று. (சுഠ)

தழுவுவெண்பட்டு முகதாறசமைநதிடு த
வளசசநதிரஙு, குழுவுபொனனெழுகதின ப
ட்டைநகொடிகளி னிரையனேகம, ஒழுகுசா
யநிரையும பட்டினெலிபலுநில்ஙகடோறுங,
கெழுமிய மணியினகோவை கிண்கிணியனநந
மாமே.

(இ-ள்) வெண்பட்டினாலும் முத்தினாலும் அ
மைதத குடைகளும் பொன்னிழையாலமைநத இ
டககியங்களும நிரைநிரையாககட்டிய வெண்சாம
ரைகளும் பீதாமபரங்களாற் றொங்களும் எங்கும்
பிரகாசிககின்ற நவரததினககோவைகளுமகிண்கிணி
யாசிலேநதொங்கலும அமைத்து. எ-று. (சுக)

இன்னதன்மையதாந் தேர்களெழில பெற
வலஙகரித்துப, பன்னுபுண்ணியாகமோமம் ப
லவகைத் தானமபண்ணி, முன்னவன் கந்தன்
றுயயமுழுமணிய கதனமமை, மன்னுதண்டே
சரிந்த வகைபபடி தேறிலேற்றி.

(இ-ள்) இத்தன்மையான தேர்களில் புண்ணியா
கனம்தான முதலானதுஞ்செயது கணேசர் முருக
ககடவுள் துய்யமாமணீசரர் அகிலாண்டநாயகியார்

தண்டீசுரர் முதலானவர்களையும் ஆரோகணிப்பித்து. எ-று. (சுஉ)

வேறு.

மாரதிகணவனை வன்னிகூட்டினோற்
கோர்தினமறைபபரிசிறக்கப்பூட்டிய
பாரதிகணவனும் பதுமன்முனபுபோற்
சாரதியாகவே தானடாத்தினான்,

(இ-ள்) இரதிகேள்வனாகிய மன்மதனை அக்கினிக்கிரையாக்கியபரமசிவனாரோகணித்தஇரதத்திற்கு வேதப்பரிகளைப் பூட்டிய பாரதிநாயகனாகியபிரமன்திரிபுரதகனத்திற்குத் தேர்ச்சாரதியானதுபோலவே இப்பொழுதுஞ்சாரதியாகித் தேரினை நடத்தினான். எ-று. (சுங)

பஞ்சமஞ்சிவனு மின்னிசைகள் பாடிடக்
பஞ்சமபூதங்கள பாவிசசூழ்ந்திடப
பஞ்சமகதிப் பரிபரிந்த தேர்களைப்
பஞ்சமங்கலத்தினிற் பவனிசெய்வித்தான்.

(இ-ள்) பஞ்சமசுருதியமைந்தவாத்தியங்களினின்றும் இராகங்கள் வெளிப்படவும் பஞ்சபூத ஆன்மகோடிகள் பரவிச் சூழ்ந்துவரவும் பஞ்சகதிகளையுடைய பரிகளைப்பூட்டிய தேரைப் பஞ்சமங்கலமென்னும் பெயரையுடைய இரத்தினபுரியிற பவனிசெய்வித்தான். எ-று. (சுச)

சோதிமூன்றுள்ளவத் துய்யமாமணிச்
சோதியைச்சமாபதித் தோகைதன்னையுஞ்
சோதியாந்தேரின்மேற் றோன்றுநல்விழாச்
சோதிநாடன்னிலே சூழ்வித்தானரோ.

(இ-ள்) சோமசூரியாக்கினியாகிய திரிநேத்திரங்களையுடைய துய்யமாமணீசுரரும் சமாபதியெ

ன்னும் அகிலாண்ட வல்லியம்மையும் சோதிநிறை ந்த தேரிலேறிவரச்ச கலவைபவர்துடன் சோதிந க்ஷத்திரத்தில் பிரதக்ஷணமாகச் சூழ்ந்துவரப்பண் ணினன்' எ-று. (சுரு)

மற்றைநாட் பௌரணைமலிவிசாகத்திற்
றெற்றுறுபுனலபிடேகஞ் செய்வித்து
முற்றுறுதிருவிழா முடித்தமாதத்தில்
அற்றைப்பூசையிற் படியன்னஞ்சாத்தினன்

(இ-ள்) மறுநாட்பௌரணையில் நிறைந்தவிசா க நக்ஷத்திரத்தில் கரையைபெற்றுகின்ற தீர்த்தங் கொண்டுவந்து சிவபெருமானுக்கு அபிடேகஞ்செ ய்வித்து நல்லதிருவிழாமுடிந்த மாதத்தில் தினப்பூ சைப்படித்திரங்களுடனே அன்னமலருஞ் சாத்தி னன் எ-று. (சுசு)

முறையினிற் றிருவிழாமுடியுங்காறுநின்
றறுபதினயிர மந்தணாளர்க்கும்
மறுவறுலக்கமா மகேசுரர்க்குநல்
லறுசுவையமுதளித்தனனன்பாலரோ

இ-ள் முறையாகத்திருவிழா முடியுமளவுமிருந து அறுபதினயிரம் பிராமணேத் தமர்களுக்கும் இலக்ஷமாகேஸ்வரருக்கும் அறுசுவையுடன் அன்ன மிட்டான் எ-று (சுஎ)

வந்துறுமிதுனநன் மாதப்பூசைதான்
றந்துமுக்கனியினற் சாற்றியேத்தியே
பிந்துகற்கடகந்தான் பிறங்குந் திங்களின்
அந்திலான்பாலின லாட்டிப்போற்றினன்.

(இ-ள்) ஆனிமாதத்திற் பூசைகள் செய்வித்து முக்கனிகளைச் சிவபெருமான் றிருமேனிமுழுதுஞ்

சாற்றியேத்திப்பின் ஆடிமாதத்திற் பசுவின்பாலால் அபிஷேகஞ்செய்து வணங்கிப்போற்றினுன். எ-று. (சுஅ)

ஆவணியதனிலெள் ளதனைச்சாற்றியே
பூவினேன்கன்னியிற் பொரியைச் சாற்றிப்பின்
மேவியதுலாத்தினெய் விழுதுசாற்றிமேற்
றேவகார்த்திகையினிற் றீபஞ்சாற்றினுன்.

(இ-ள்) ஆவணிமாதத்தில் எள்ளைச்சாற்றிப் புரட்டாசிமாதத்தில நெற்பொரியைச் சாற்றிப்பின் வந்த அர்ப்பிசைமாதத்தில் நெய்விழுதுசாற்றிக் கார்த்திகைமாதத்திற் றீபங்களைச் சாற்றினுன். எ-று.

தெரிதருமார்கழித் திங்கடன்னிலே
வருதிருவாதிரை வாய்த்தநாளிலே
தருதிருவிழாவகை தானடாத்தியே
பரிமளகுங்குமம் பரிவிற் சாற்றினுன்.

(இ-ள்) மார்கழிமாதத்தில் வருகின்ற திருவாதிரை நக்ஷத்திரத்தில் திருவிழாவகைகளெல்லா நடத்திப்பின் குங்குமமுதலாகிய வாசனுதிரவியங்களையுஞ் சாற்றினுன். எ-று. (எய)

மகரசங்கிராந்தியு மருவுபூசமுந்
திகழ்வுறநடத்தியே திங்கட்பூசைதான்
றகவுறத்தேனபி டேகஞ்சாற்றியே
மிகமகிழ்ந்திறைஞ்சினன் விதிக்கும்வேதனே.

(இ-ள்) சங்கிராந்தி மருவியதைமாதம் பூசநக்ஷத்திரத்தில் பிரகாசிக்கப் பூசைநடத்தித் தேனபிஷேகஞ்செய்து மிகவும் மகிழ்வடைந்து வணங்கினுன் சிருட்டிகர்த்தாவாகிய பிரமதேவன். எ-று

கும்பமாதத்தினிற் குலவுபூசைநெய்க்
கம்பளஞ்சாத்தியே கருதுமீனத்தில்

வம்பவிழ்சந்தன மலியச்சாத்தியே
செம்பதுமத்தனுஞ் சிறந்துபோற்றினான்.

(இ-ள்) பிரமதேவனானவன் மாசிமாதத்திற் குலவிய பூசைகள்செய்து நெய்கின்ற மயிர்படாகமென்னும் வஸ்திரந்தரித்துப் பின் பங்குனிமாதத்தில் வாசநிறைந்த சந்தனத்தை மலியச்சாத்திப் போற்றினான். எ-று. (எ௨)

மாதபூசைகளு மிவ்வாறுசெய்துமேற்
றீதறுவிழாவெலாந் திருந்தச்செய்துதான்
வேதனல்வரங்களை மிகவும்பெற்றுப்பின்
கோதமமுனிவனை நோக்கிக் கூறுவான்.

(இ-ள்) இவ்வண்ணம் பனிரண்டுமாதப் பூசைகளையும் குற்றமில்லாத திருவிழாக்களையுஞ் சிறப்பாகச் செய்து பரமசிவனிடத்தில் நல்ல வரங்களையும் பெற்றுப்பின் கௌதமமுனிவனை நோக்கிக் கூறுகின்றான். எ-று. (எ௩)

இந்தமாமிகு விரந்தினபுரந்தனில்
முந்தியகலியுக மீதொருத்தன்றான்
சுந்தமாமன்ன தானச்சொரூபியாச்
சந்தியநெறியுளான் றனிங்கெய்தியே.

(இ-ள்) இந்தவிரந்தினபுரியென்னுந் தலத்தில் கலியுகத்தில் அன்னதானஞ்செய்யும் சத்தியநெறியுடையவனாகியொருவனிங்கடைந்து. எ-று. (எ௪)

அன்னதானத்தினை யடைவிற்செய்துதான்
மன்னியதுய்யமா மணியென்னுதற்குத்
தென்னியல் கைங்கரியத்திருப்பணி
பன்னியதிருவிழாப் பலவுஞ்செய்வனே.

(இ-ள்) அன்னதானத்தினை யடைவாகச் செய்து நிலைபெற்ற துய்யமாமணியென்னும் எந்நாதனுக்கு அழகும் இயல்பும் வாய்ந்த திருப்பணியோ

டு திருவிழாவையுஞ் செய்வான். எ-று. (எரு)

சிறந்தவந்தணர் சிவபத்தரானபேர்
நிறைந்திடப்பதிட்டைக ணீதியாச்செய்தே
பிறந்திடுமிரத்தின புரத்தைப் பேர்பெற
அறந்தனுல்விளக்கியே யடைவுசெய்வனே.

(இ-ள்) வேதோத்தமர்களுஞ் சிவனடியவர்களு நிறைந்து வாழும்படி பிரதிட்டைசெய்து இரத்தினபுரமென்னும் பெயரையுடைய இந்தஸ்தலம்விளங்கச்செய்வான். எ-று. (எசா)

நிதியாற்பத்தியா னிறையுமன்பினுற்
பேதியாமனத்தினுற் பெருமைசெய்குவான்
ஆதலான்மேதினி யாருமன்னர்கரு
மீதுசேர்தேச மானியங்கள் விஞ்சுமால்.

(இ-ள்) நீதியினாலும் பத்திமார்க்கத்தாலும் நிறைந்த அன்பினாலும் பேதமில்லாத மனதினாலும் யாவர்க்கும் பெருமைசெய்குவான் அந்தவிசேடத்தால் அரசருக்குமேலான சமபத்தும் மானியங்களும் அதிகரிக்கும். எ-று. (எஎ)

என்றுவிரத்தினேசுரன் றன்னையேத்தியே
தன்றுணைநதேவியுந் தானுமாகவே
துன்றியமலருளோன் றூயவன்னமீ
தொன்றியே சத்திய வுலகமெய்தினுன்.

(இ-ள்) இவ்வாறு சொல்லி இரத்தினேசுரரைத் தோத்திரஞ்செய்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு மனையாளோடு அன்னவாகனத்திலேறித் தன்னுலகமாகிய சத்தியவுலகத்தை யடைந்தான் பிரமதேவன். எ-று. (எஅ)

ஒன்னவேகுதனு மியம்பக்கேட்டது
மன்னியசௌனகன் மகிழ்ந்துபோற்றியே
யுன்னுபஞ்சாட்சர மொருதினத்தினிற்
பன்னுமாவடிதரு பரமன்முன்னரோ.

(இ-ள்) இப்படியென்று சூதமுனிவர் சொல்ல நிலைபெற்ற சௌனகர் கேட்டு மகிழ்ச்சிகொண்டு போற்றி உச்சரிக்கத்தக்க பஞ்சாட்சர மந்திரத்தை யொருதினம் யாவரும் பரவுகின்ற திருவடியைத்த ந்தருளும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியின் முன்னிருந் து. எ-று. (எசு)

செவித்திடலவர்தமைத் தெரிசித்தால்வினைப்
பவத்தினிற்படுத்திடும் பசாசுதீர்வதுந்
தவத்துமைதனைப்புகர் தன்னிற் போற்றினல்
எவர்க்குமேபால ருண்டாகுமென்பதும்.

(இ-ள்) செபம்பண்ணினல் அவர்களைக்கண்டா ல் வினையாகிய பவத்திற்பட்டழுந்திய பிசாசு வி மோசனமும் தவத்தினையுடைய அகிலாண்டவல் லியாளைச் சுக்கிரவாரத்திற் போற்றி வணங்குகி றவர்களுக்குப் புத்திரோர்ப்பத்தியுமுண்டாம். எ-று

கொடுத்தனர்வரமெனக் கூறினீர்முனம்
அடுத்தவரொருவருக் கானதுண்டெனிற்
றொடுத்ததுதெரிவுறக் சொல்லவேண்டுமென்
றெடுத்துரைசெயவதற் கினிதுசூதனே.

(இ-ள்) பரமசிவன்கொடுத்தனரென்று முன்ன ர்க்கூறினீர் அவ்வரப்படி யாருக்காவது நடந்ததுண் டானல் அதனை அடியேற்குத் தெரியும்படி சொல் லியருளவேணுமென்று சௌனகர்கேட்க அதற்கு ச் சூதமாமுனிவர் சொல்லத்தொடங்கினர். எ-று.

திருவிழாச்சருக்கம்
முற்றிற்று.
ஆகசெய்யுள்—183

உ

சிவமயம்

ஆறுவது

# பிசாசு விமோசனச் சருக்கம்.

திருவணிமாகத தேசநாட்டினிற்
பொருவிறன்மா ரணியப்புரத்தினில்
அருமறைவேதிய ரமைந்துவாழ்வுபெற்
றிருநிதிவளத்துட னினிதுமேவுவார்.

(இ-ள்) திருவிளங்கிய மாகததேசமென்னு நாட்டில் ஒப்பில்லாத தன்மாரணியபுரமென்று ஒருநகரமுண்டு அந்நகரத்தில் மிக்கசெல்வத்துடன் அனேகம் வேதோத்தமர்கள் வாழ்வுபெற்றிருந்தார்கள். எ-று. (க)

மேவும்வேதியர்களில் விளங்குநான்மறை
நாவினன்கலை தெரிநற்குணத்தினன்
றவுநீதியுமுயர்த யாவுமேயுளான்
றேவசன்மாவெனத் திருந்துபேரினன்.

(இ-ள்) அப்பிராமணர்களுக்குள் நான்குவேதங்களையும் பயின்ற நாவினையுடையவனும் அறுபத்துநான்கு கலைக்கியானங்களையுந் தெரிந்த நற்குணத்தினையுடையவனும் நீதியுமுயர்ந்த தயையுடையவனுமாகிய தேவசன்மாவென்னு மழகிய நாமத்தையுடைய வொரு பிராமணனுண்டு. எ-று. (உ)

அன்னவன்மனைவி காந்திமதியாமெனப்
பன்னுநாமத்தினள் பரிந்தகற்பினள்
நன்னியற்குணத்தின ணலஞ்செய்வாணகை
மின்னிடையிரவிபோல் விளங்குமெய்யினள்.

(இ-ள்) அத்தன்மையையுடைய பிராமணன் மனையாள் காந்திமதியென்னும் பெயரையும் பரிவுற்ற கற்பினையும் நல்ல ஒளிபொருந்திய நகையையும் யாவருக்கு மிதஞ்செய்கையையும் மின்னற்போன்ற இடையையும் சூரியனைப்போல் விளங்கு மெய்யையுமுடையாள். எ-று. (௩)

அனையவளுடனவ னன்புபூண்டெழில்
மனையறம்புரிந்துதான் மருவுநாடனிற்
சனமகிழ்தேவசன் மாவின்முன்னவன்
மனமகிழ்தன்மசன் மாவென்பானுளன்.

(இ-ள்) அத்தன்மையையுடைய மனையாளுடன் அன்புபூண்டு அழகிய இல்லறநடத்தி வாழுநாளில் உலகத்தார் நன்குமதிக்கும் அத்தேவசன்மாவின் தமையன் தன்மசன்மா வென்பவ னொருவனுளன்.

சத்திரயாகத்தைதத
மித்திரர்தன்னுடன் விரும்பிச்செய்தனன்
அத்திரங்காண்டலுக் காகவெண்ணியே
புத்திசேர்தேவசன் மாவும்போயினன்.

(இ-ள்) அந்தத்தன்மசன்மாவென்னும் பிராமணன் சத்திரயாகத்தை வேறோரிடத்தில் சில நண்பர்களுடன் கூடிச்செய்தனன் அந்தயாகத்தைக் காண்பதற்குத் தேவசன்மா அவ்விடத்திற்குப் போயினன். எ-று. (௫)

அந்தவேலையிற்கட லனைத்துமுண்டவன்
விந்தமால்வரைதனை மேதினிக்குளே
நந்திடநடந்தவ னுட்டுமுத்தமிழ்
தந்தவன்புவியெலாஞ் சமதலஞ்செயதோன்.

(இ-ள்) அத்தருணத்தில் சமுத்திரத்தையுண்டவரும் உயர்ந்த விந்தகிரியைக் கெடும்படி பூமிக்கு

ட் புதைத்தவரும் நிலைபெற்ற முத்தமிழை இவ்வு லகத்தவருக்குத் தந்தவரும் பூமியைச் சமதலமாகச் செய்தவரும். எ-று. (சு)

வேறு.

வாதாவிவில்வலர் கடகானதேசெய மடிந் தந்தலைவன், வேதாகமகலைகள் கரைகண்டவ ன்பினன் விளங்கு நருவின், போதார்தமிழ்ப் பொதிய மீதிலுறைவோனெறி பொருந்துலகி னுக, காதாரமானவ னகத்தியனெனும பெய ரமைந்தமுனிவன்.

(இ-ள்) வாதாவி வில்வலன் என்னுமிருவர்களை க்கொன்றவரும் வேதாகம சாஸ்திரங்களைக் கரைக ண்டவரும் அனேக தருக்கணிறைந்த பொதியாசல த்தி லெழுந்தருளினவரும் நீதிநிறைந்த இவ்வுலகி னுக் காதாரமானவரும் ஆகிய அகத்தியனென்னும் பெயரையுடைய முனிவர். எ.று. (எ)

வந்தேதன்மாரணிய புரமதிற் றேவசன்மா வின் மனையிற், பந்தார்விரற்காந்தி மதிதனை க்கண்டே பசித்தனமியாஞ், சந்தார்தனத்தும ட வாயன்னபானந் தனைத்தருதி' பிந்தாதம த்தியா னத்திலதிதிக்கிடுதல் பெரிதூலனே.

(இ-ள்) தன்மாரணியபுரத்திற்கு வந்து தேவச ன்மாமனையிற்சென்று பந்துபோல் விரல்களையுடை ய காந்திமதியைக்கண்டு சந்தனநிறைந்த தனபாரத் தையுடைய பெண்ணே யாம் பசித்துவந்தனம் உச் சிக்காலத்திற் பசித்துவந்தவர்களுக்கு அன்னமிடு தல் பெரிய பலனாகும் ஆகையால் அன்னபானாதிக ளை யெனக்குத் தருவாயென்றார். எ-று. (அ)

என்றலுமெழுந்திலளருக்கியமோடாசனமு
மீந்திலளெறச், சென்றடிபணிந்தில டிருந்தன்
னமிங்கிலைச் செலலுமெனலும், மென்றயில்
கிழங்கு காயடகுமலரோனும் விருப்பமுட
னே, தின்றிடவளித்தியென வவையுமிலைம
னையிலென் செலுமெனலும்.

(இ-ள்) என்றுசொன்ன வளவில் எழுந்திருக்காமலும் அருக்கியம் ஆசனமுதலானதுங் கொடாமலும் எதிர்சென்று அடிபணியாமலும் உண்ணத்தக்க அன்னமும் இங்கில்லையெனலும் அகஸ்தியர்மென்று தின்கின்ற கிழங்கு, காய், தழை, பூ யாதாயினும் கொடென்று கேட்க அவைகளுமில்லை என்வீட்டில் உமக்கென்ன காரியம் போமென்று சொன்னமாத்திரத்தில். எ-று. (கூ)

கணவனில்லந்தனி லிராதிருந்தாலுமே கரு
திமனையாள், உணவயின டைபகலில திதிசத்
காரம துறசெய்வதே, குணமதெனவாதலா
லன்னமிடுவாயென்று கூறமுனிவன், அனு
குவினையாலன்ன மில்லையெனவாதா வறகூ
றினள்.

(இ-ள்) நாயகனில்லத்தி லிராதிருந்தாலு மனையாள் உச்சிப்போதில் பசித்துவந்த ஆதுலர்க்குத்தன்னா லியன்ற வுபகாரஞ்செய்யவேண்டும் ஆதலால் எனக்கன்னமிடுவாயென்று அகஸ்தியர்சொல்ல அதைக்கேட்டும் பூர்வபாவகர்மத்தால் பின்னும் அன்னமில்லையென்று இரக்கமறச்சொல்லினாள். எ-று.

ஓதனமருந்துபசு னோரத்திலே யன்னமு
ண்டில்லையென் றுதாவறச்சொன்ன புருட
னேபிரம காதகனுமவன், நீதிபெறுமனையா

ளிருந்தாலுமில்லையெனு நீதிதவறிப், பாதகமி
குந்திடு மவட்கென்னமுனிவன் பகர்ந்துமுனி
வன்.

(இ-ள்) அன்னம்புசிக்கும் பகனேரத்தில் அதி
திகள் வந்து யாசித்தால் உண்டென்றாயினும் இல்
லையென்றாயினும் அன்பறச்சொன்ன புருடன் பிரம
காதகனாவான் வீட்டில் அன்னமிருகக இல்லையென்
றுசொன்ன பெண்களுக்குப் பாதகமிகுமென்று
கோபித்துச் சொல்லுவார். எ-று. (கக)

எக்காலமுந்தன் மனைதன்னிலுமருந் தனமி
ருக்கவுந்தான், முக்காலுமன்னமிலை யென்றே
பசாசுபோன் மொழியோதலாற், றக்காரிலா
தபே யாகுவாயென்னச் சபித்தேகினன், அக்
காலையவ்வுரு வெடுத்துளமயங்கியவ ளஞ்சின
ளரோ.

(இ-ள்) எப்பொழுதும் தன்வீட்டில் அன்னமி
ருக்கவும் அன்னமில்லையென்று மூன்றுதரம் பிசாசு
போற்சொன்னதால் உற்றாரொருவருமில்லாத பே
யாகுவாயென்று சபித்துத்தம் மாச்சிராமத்துக் கெ
ழுந்தருளினர் அந்தக்ஷணமே பிசாசுரூபத்தை ய
டைந்து மனமயங்கி அஞ்சினள். எ-று. (கஉ)

பொன்னனமேனியது கருகியேயுதரம் பு
டைகொண்டுகாய், மின்னனை நுண்ணிடை பெ
ருத்துமுலையானதுவிழுந்துநெடிகிக, கொன்னை
ரயிற்கண்கள்குழிவீழுந்துபுட்கக் கூனன்முது
காய்ப், பன்னுதவுளாகூறு வாணைடுங்கியே
பற்கடெறிய.

(இ-ள்) அக்காந்திமதி பொன்போன்ற சரீரங்
கொள்ளிக்கட்டைபோற் கருக்கவும் வயிறுபருக்கவு

ம் மேனோக்கிய முலைகள் கீழ்வீழ்ந்து நீளவும் கூறி ய வேல்பொன்ற கண்கள் குழிக்கவும் முதுகுவிற போல் வளையவும் வாய் தகாதவார்த்தைகளைச் சொல்லவும் சிவனடுங்கவும் பற்கள் கோரமாக வெளியிற்றெரியவும். எ-று. (கங)

வந்துமுலையானது வனப்பழிய நேர்ந்தவிடை பொந்துதெரியக், கூந்தன் மணமாகிலு முலர்ந்துமுடை நாறுவதுகொண்டுகுறுக. மாந்தளிரின் மேனிபுகக சேர்ந்தசுவாமெனவரண்டு கருகிக், காந்திமதியானவள் பிராந்திமதியாயினள் கருத்தழியவே.

(இ-ள்) நிமிர்ந்த தனங்கள் வனப்பழியவும் நேர்ந்த நூலொத்த இடையிற் பொந்துதெரியவும் கூந்தலிலுள்ள அகில்வாசனைவரண்டு முடைநாற்றங் கொண்டு குறையவும் மாந்தளிர்போன்ற மேனிவரண்டு கருகவும் காந்திமதியானவள் பிராந்திமதியாகிக் கருத்தழிந்துநின்றாள். எ-று. (கச)

தன்மனையிலுண்டாகு மாடை யாபரணங்கடனகனகமும், நென்மலையுடன் சேருமில்லமுங்கைவிட்டு நெடுவீதியிற், றன்மதிகளே கொண்டு மேனிவேறாகியே தோன்றுமுன்செய், கன்மவினை வந்துறக்காடதனி லேகினள் காந்திமதியே.

(இ-ள்) தன் வீட்டிலிருக்கின்ற ஆடை ஆபரணம் திரவியம் நெல் முதலான தானியங்கள் யாவுங் கைவிட்டுப் பெரியவீதியில்வந்து தன்மதிநிறைந்து சரீரம்வேறாகித் தோன்றிய ஊழ்வினைபற்றக் காட்டிற் சென்றாள். எ-று. (கரு)

வேறு.

பின்னர்தேவசன் மாபிறங்குவேள்வியினை முற்றித்
தன்னகரடைந்துபோந்துதானுறைமனையிலெய்தி
நன்னுதற்பாரிதன்னை நாடினன்காண்கிலாமல்
இன்னலுற்றிரங்கியேங்கி யெங்கணுந்தேடினானே.

(இ-ள்) காந்திமதிகாட்டிற் சென்ற பின்னர்யாகத்தை முடித்து வந்த தேவசன்மா தன்னூருக்குவந்து தான் வசிக்கின்ற வீட்டிற் சென்று நன்னுதலையுடைய தன் மனையாளைக் காணாமல் மிகத் துயரங்கொண்டு ஏங்கி யெங்குந்தேடினான். எ-று. (௧௬

தனமிருந்தாலும்வேறு தானுள பொருள்களோடும்
அனமிருந்தாலுமிக்க வன்பினரிருந்தாலுந்தன்
மனதினுக்கினிதாங்கற்பு மனைவியில்லாதவில்லம
புனைகலனணிந்துஞ்சீவன் போயின வுடலமாமே.

(இ-ள்) மிக்க திரவியங்களிருந்தாலும் தனதானிய சம்பத்துகளிருந்தாலும் அன்னவஸ்திரங்கள குறைவறவிருந்தாலும் மிகுந்த அன்பினர்களிருந்தாலும் மனதிற்கினிய மனையாளில்லாத வீடு உயிரில்லாத உடலில் ஆபரணமணிந்ததையொக்கும். எ-

என்பதை யெண்ணியெண்ணி யின்னலுற்
றிருக்குமேல்வை, துன்பொடு சுற்றத்தாகள்
சூழ்ந்தவனுடனுரைப்பார், அன்புட னன்னம்
வேண்டி யகத்தியமுனிவனென்னல், நன்பகற
ன்னிலிங்கே நண்ணியுன் மனையில்வந்தான.

(இ-ள்) இவ்வண்ணமாகவெண்ணித் துக்கமுற்றிருக்கும்பொழுது பக்கங்களிலிருக்கின்ற சுற்றத்தார்கள் துன்பத்துடன் சூழ்ந்துகொண்டு தேவசன்மனே அகஸ்தியமுனிவர் நேற்றைத்தின மிகுந்த பசியுடன் அன்னத்தைவிரும்பி நல்லபகலில் உன்ம

ளையில் வந்தார். எ-று. (௧௮)

பசிபெரிதானதன்னம் படைத்திடென்றவ
ளைக்கேட்க, இசைவிலா மனத்தாளன்னமிருக்
கவுமில்லையென்றாள், அசைவிலாக் கந்தமூலமா
கினுமளித்திடென்ன, வசையுடனில்லையென்
றே வழுத்தினாள் பின்னுந்தானே.

(இ-ள்) வந்த கும்பமுனிவர் தின்மனையாளைநோ
க்கிப் பெண்ணே என்னைப் பசி மிக வருத்துகின்ற
து அதனைத் தணிப்பான் அன்னமளிக்கவேணுமெ
ன்று சொல்ல அதைக்கேட்டு தின்மனையாள் கிரகத்
தில் அன்னமிருக்கவுமில்லையென்றாள் அதன்பின் க
ந்தமூலங்களாயினுங் கொடென்றார் அவைகளுமி
ல்லையென்றாள். எ-று. (௧௯)

ஆதலாற் பிசாசமாகிய வடனையடவிதன்னி
ற், போதியென்றமூன்று சாபம்பொருந்துறவு
ரைத்துப்போனான், மாதுநின்றேவிதானும்வ
ண்ணமும்வேறதாகி, யாதுமோதாமல் யாங்க
ளிணக்கவு மிணங்காளாகி.

(இ-ள்) ஆதலால் பிசாசாகச் சபித்துக் காட்டி
ற்றிரியக் கடவாயென்று சாபமிட்டுப்போனார் உட
னே பிசாசாகி உருவம்வேறுபட்டு ஒரு வார்த்தையு
ஞ் சொல்லாமலும் யாங்கள் புத்திசொல்லவுங் கே
ளாதவளாகி. எ-று. (௨௰)

போந்தனளுறையு நீங்கிப் புறந்தரு கானி
லென்றாள். சாந்தமாங் குணத்தான் கேட்டுச்
சஞ்சலமனத்தனுகிப், பாந்தளுமிடியேறுண்ட
படி யெனத் துயரந்தன்னை, டாந்தியே பொ
ந்துகாந்திமதிதனைக் கண்ணிற்கண்டான்.

(இ-ள்) யாதொரு வார்த்தையுமில்லாதவளாய்

க் காட்டிற் சென்றுளென்றார்கள் அதைக்கேட்ட சாந்தகுணத்தானாகிய தேவசன்மா கலங்கியமனத் தனாகி இடியேறுண்ட பாம்புபோல் ஏக்கங்கொண் டு வெளிப்பட்டுத் தேடும்பொழுது தன் மனையா ளாகிய காந்திமதியைக்கண்டான். எ-று. (உக)

மெய்கரிந்துருவம்வேறு மேனிகொண்டவ ளாநின்று, கையொடுகையையெற்றிக் களே ரெனச் சிரித்துநோக்கும், பையவேநடக்குமீ ளும்படி மிசையாடும்பாடும், தொய்யவேயழு துசோரும் துள்ளியே குதிக்குநிற்கும்.

(இ-ள்) சரீரமெல்லாங்கறுத்து வேற்றுருவங் கொண்டவள் நின்று கையோடுகையையெற்றிக் க ளேரெனச் சிரித்துநோக்குவாள் மெள்ள நடப்பா ள் திரும்புவாள் கூத்தாடுவாள் பாடுவாள் துயரங் கொண்டழுது சோர்ந்திடுவாள் துள்ளிக்குதிப்பா ள். எ-று. (உஉ)

சுற்றியே தலமும்பாரிற் றுகளின்மேற்புர ளுங்காலைத், தெற்றியே நடக்குமோடுந் திரு ம்பியே வெறித்துப்பார்க்கும், மெத்தியே ய டிபபார்போலவெ திருறவதட்டிநிற்கும், நிற் றிவாரலைநீயென்னுநிணிலத்தறையுங்கையால்.

(இ-ள்) சுற்றிக்கொண்டு எவ்விடத்திலும் சுழ லுவாள் புழுதியிற்புரளுவாள்காலொடுகால் தெற் றிக்கொண்டு நடப்பாள் ஓடுவாள்திரும்பிவந்து வெ றித்து மிழித்துப்பார்ப்பாள் எற்றியடிப்பார்களைப் போல் அதட்டி உறுக்கி நிற்பாள் சலத்திற்றேன் றுநிழலை நில்லென்பாள் கையாற் பூமியையறைவா ள். எ-று. (உங)

இருந்திடும்படுக்குமீள வெழுமழுஞ்சிரிக்கு ம் வெட்கும், அருந்திடுமுமிழுமண்ணை யல்

திடுமௌனமாகும்,வருந்தியேதலையைச்சுற்று
ம் வலியபற்கடித்துறுக்கும், குருந்தெனச் சி
லையைப்பற்றிக் கொடுத்திடு முலையைத்தானே.

(இ-ள்) இருப்பாள் படுப்பாள் திரும்ப எழு
வாள் வருத்தமாகத் தலையைச் சுற்றுவாள் கடின
மான பற்களை நெறுநெறென்று கடித்துறுக்குவாள்
கற்களை யெடுத்துப் பிள்ளையென்று கையிலேந்தி
முலைகொடுப்பாள். எ-று. (உ௪)

இன்ன தன்மையளைக்கண்டேயிருபிறப்பாளனெருந்த
மன்னியவிபூதி வேதமந்திர விதியாலிட்டுத் [தே
தன்னுணர்வொருகாற்கூறித்தனையறிந்திடவேசெய்
அன்னவளுடனேதீர்த்தயாத்திரையாகச்சென்றான்

(இ-ள்) இத்தன்மையான செய்கையையுடைய
மனையாளைப் பிராமணன்கண்டு மிகவுநொந்துநிலை
பெற்ற விபூதியை யெடுத்து வேதமந்திரத்தைத்
தியானம்பண்ணி விதிப்படி அவளுக்குத் தரித்துத்
தன்னுணர்வாகிய பஞ்சாட்சரத்தை யொருதரம் சி
வசிவாவென்று சொல்லி அவள் தன்னையறியும்படி
செய்து அழைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரைபோ
யினான். எ-று. (உ௫)

எண்ணியவருடமீரைந்தெங்கணுந் திரிந்து
சுற்றி, நண்ணினன்பரத்துவாசநன்முனி [யிரு
க்கைதன்னிற், கண்ணினன்முனியைக்கண்டு
கழல்பணிந்தேதத்தலோடுந், திண்ணியமுனியு
மாசி செப்பிநல்விருந்தளித்தான்.

(இ-ள்) . பத்துவருடகால மெங்கணுந் திரிந்து
சுற்றிக்கொண்டு பரத்துவாசமுனிவர் ஆச்சிரமம்வ
ந்து அவரைக் கண்டு பாதத்தில் வணங்கி யெழுந்

து தோத்திரஞ்செய்து நின்றபொழுது வலிமை பொருந்திய பரத்துவாசமுனிவர் ஆசிர்வாதஞ்சொல்லி சட்சுவையுட னமுதளித்தனர். எ-று. (உசு).

இவளியாரென்றலோடு மென்னுடைப் பாரியென்ன, அவள்பிசாசத்துவந்தா னடைந்த காரணமியாதென்னக், குவலயந்தன்னின் மிக்க குறுமுனியையங்கேட்க, இவளையமில்லையென்ன விட்டனன் சாபமென்ன.

(இ-ள்) அமுதுசெய்த பின்னர் தேவசன்மாவைப் பரத்துவாசர் பார்த்து இந்தபெண் யாரென்று கேட்கத் தேவசன்மா என் மனைவியென்று சொல்ல அவர் இவளுக்குப் பேயுருவமெய்தக காரணமென்னென்று வினவத் தேவசன்மா சுவாமி மலயமுனிவர் உலகத்திலென்னில்லமடைந்து பிச்சைகேட்க விவள் பிச்சையில்லையென்று சொன்னள் அவர் இச்சாபமிட்டேகினார். எ-று. (உஎ)

சிறியவர் செய்ததீமை சீரியர்பொறுக்கவேண்டும், அறிவினான்மிக்கமேன்மை யகத்தியர் பொறையிலாமற, றருகியிவ்வாறு செய்தற காதெனத் தேவசன்மா,மறுகிநொந்தழுது கூற மாசறு முனிவன்சொல்வான்.

(இ-ள்) சிறியவர்கள்செய்த பிழையைப பெரியோர்கள பொறுக்கவேண்டுவது கடனென்பதை மறந்து மிக்க கௌரவமுடைய அகஸ்தியமுனிவர் பொறுமையில்லாமற் கோபித்து இவ்வாறுசெய்தா ரென்று தேவசன்மா மனஞ்சுழன்று அழுதுகூறஅதைக் கேட்ட பரத்துவாசமுனிவர் சொல்வார். எ-று. (உஅ)

ஒழிந்தமுற்சனனந்தன்னி லுனக்கிவள் பாரியாகுந், தழைந்திடு மிளையதாரந் தானும் வே

றொருத்தியாகும், அழிந்தழகிழந் துன்மத்த
மாகவே யவுடதத்தை, விழைந்தி வளவனுக்
கிட்டு மெலிவித்தாளந்தப்பாவம்.

(இ-ள்) நீங்கிய முற்சென்மத்தில் உனக்கிவள் மனைவியாவாள் இவளையன்றி மற்றொருத்தி உனக்கு மறுதாரமான மனையாளுண்டு அவளை யிவள்தாய்மகாரத்தாலும் கெட்ட உன்மத்தகுணத்தினாலும் கொடிய ஒரு அவிஷதத்தைக் கொடுத்துச் சரீரம் மெலியச் செய்தனள் அந்தப்பாவம். எ-று. (உகூ)

இம்மையிலிவளைப்பற்றி யிடர்செய்ய வந்
துதோன்றி, அம்முனியிடத்திற் சென்றே ய
டைந்ததாதலினாலிந்தச், செம்மை சேரகத்தி
யன்பாற் றீங்கிலையெனத் தெரிந்து, மும்மை
யுமுணரவல்ல முனிபாரத்துவன் மொழிந்தா
ன்.

(இ-ள்) இப்பிறப்பில் இவளைப்பிடித்து இடர் செய்யவந்து தோன்றி அந்த அகஸ்தியமுனிவரிடத்திற் கோபமாக அடைந்ததேயன்றி மகானுவாகிய அம்முனிவரிடத்தில் யாதொரு தீங்குமில்லை யென்று தெரிந்து மூன்றுகாலமுமுணரவல்ல பாரத்துவாசமுனிவர் சொல்லினார். எ-று. (௩0)

ஈங்கிவள் செய்த தீமை யீரைந்துவருட
மாக, நீங்கிடாதுனையுங்கூட நீணிலத்திழுத்த
தன்றே, யாங்கதுதீரும்வண்ண மறைகுவ
ன்கேண்மினென்னப், பாங்குடன் பின்னுமந்
தப் பாரத்துவன் கூறலுற்றான்.

(இ-ள்) இவள் செய்த தீமை பத்துவருஷமாக நீங்காமல் உன்னையும் பத்துவருடம் அலையச்செய்தது அந்தப்பாவநீங்கும்வண்ணஞ் சொல்லுவன் அ

ஞை நீங்கள் கேளுங்களென்று பாங்காகப் பின்னும் பரத்துவாசமுனிவர் சொல்லலுற்றார். எ-று. ()

பலபலசென்னனந்தன்னிற் பத்துச்சென்மத்
திற்செய்த, நிலைபெறுபாவமெல்லா நீங்கும்
புண்ணியங்களாகுந், தலமதில் வாசஞ்செய்
தாற் றாணியின் மனிதர்தேவர், குலவியமு
னிவர்சித்தர் கூறினுற் பாவமெய்தும்.

(இ-ள்) பல சென்மத்திலுஞ் செய்த பாவங்களெல்லாம் புண்ணியஸ்தலத்தில் வாசம்பண்ணினால் அப்பாவங்களெல்லா நசித்துப்போகும் அதுவன்றி இவ்வுலகில் வசிக்கும் உத்தமர்களும் தேவர்களும் குலவியமுனிவர்களும் சித்தர்களும் எந்தக்காரணத்தினாலாவது கோபித்துச் சாபமிடுவாராயில் உடனேயது பலிதமாகப் பற்றும். எ-று. (௬௨)

அன்னது மொன்றுக்கொன்றங் கதிகமா
யேறும்பாவம், பின்னது தீரும்வண்ணம் பி
ரமன்செய் பதிட்டையாக, மன்னுநூற்றெட்
டுலிங்க மிகுதலத்துளவவற்றின், நன்னெறிவி
சிட்டமான நற்றலமெட்டதாகும்.

(இ-ள்) மேற்சொல்லியவர்களானேர்ந்த பாவமொன்றுக்கொன்றதிகமாகும் ஆனதால் அப்பாவந் தீர்வதற் கோருபாயமுண்டு பிரமதேவன் செய்த பிரதிஷ்டையாக நூற்றெட்டுச் சிவலிங்கமிந்த உலகத்திலுண்டு அவைகளுக்குள் நன்மைமிகுந்த ஸ்தலங்களெட்டுண்டு. எ-று. (௬௬)

காசிகாஞ்சினி பிருங்காவாசினிவனநல்வாசம்
வீசியவகுந்தரேசம்விசுவேசங் கரிவனந்தான்
மாசிலாவில்வபேஷ்வ'வனத்தினி விரத்தினேசம்
ஆசிலாமுத்தி தன்னை யளித்திடுந்தலங்களாகும்.

(இ-ள்) அவையாதென்னிற் காசி காஞ்சினி பிருங்காவனம் ஆசினிவனம் வாசநிறைந்த வசுந்தரோசம்விசுவேசம் ஆனைக்கா குற்றமில்லாத வில்வவிருக்ஷங்கணிறைந்த இரத்தினேசம் என்று சொல்லப்பட்ட குற்றமில்லாத முத்தியைக் கொடுக்குந் தலங்களாகும். எ-று. (கூச)

இன்னதினந்தையாரு மிருநதித்தீர்த்தத்தின்பான், மன்னியசுத்தவிரத்தின மகேசனைத்
தெரிசித்தாங்கண், முன்னுதெக் கணத்தின்மூர்த்தி முன்னர்ப்பஞ்சாக்கரத்தைப், பன்னியே
யிவளைப்பார்க்கிற் பசாசுவிட் டேகுங்கண்டாய்.

(இ-ள்) இந்த எட்டுத்தலங்களுக்குள் விசேடத்தலமொன்றுண்டு அதுயாதென்னில் பெருமைபொருந்திய நந்தாநதிப்பக்கத்தில் நிலைபெற்ற இரத்தினபுரியாகும் ஆதிற்றிருக்கோயில் கொண்டெழுந்தருளிய துய்யமாமணியாரைத் தெரிசித்துப்பின்னர் தெக்ஷிணமூர்த்தி சந்நிதியிலிருந்து பஞ்சாக்ஷரத்தைச் செபித்து இவளைப்பார்த்தால் பிசாசநீங்கிவிடும். எ-று. (கூரு)

என்றந்தமுனிவன்கூற விருபிறப்பாளன்கேளா
நன்றெனவவளுந்தானு நணுகினர்சமாபுரத்தின்
மன்றல்சேர்தலத்தோர்கூடி மாகத்தாநந்தானுடி
அன்றெழினந்தையாற்றி னணிகரை மீதினின்றே.

(இ-ள்) என்று அந்தமுனிவர் சொன்னவளவில் தேவசன்மாவென்னும் பிராமணன் அவ்வண்ணஞ் செய்கின்றேனென்று தானுந்தன் மனையாளுஞ் சமாபுரத்திற்கு வந்தார்கள் அப்பொழுது அந்தஸ்தலத்திலுள்ள சனங்கள் கூடி மாகஸ்நானஞ்செய்து அந்நந்தையாற்றின் கரைமேனின்று. எ-று. (கூசு)

கேசமதாத்தும்போது கிட்டினபிசாசுதன்மேல்
வீசியதிவலைசற்றே மேனியிற்படுதலோடுந்
தேசுடன்முன்புபோலச் சிறந்திடுவடிவம்பெற்றாள்
மாசணிபிசாசுதீரும் வகையது நினைத்துமாதோ.

(இ-ள்) மயிரினை யுலர்த்தும்போது அந்தவிடத்தில் வந்த இவ்விருவர்மேலும் மயிரினின்றுந் தெறித்த திவலைகொஞ்சம் பட்டமாத்திரத்தில் அழகுடன் முன்புபோலச் சிறந்த உருவத்தைப்பெற்றாள் உடனே குற்றத்தையுடைய பசாசு தீரும்வகையை நினைத்து. எ-று. (கூஎ)

தேவசன்மாவுநந்தைத் திருநதிதன்னின்மூழ்கி, மேவியசுத்த விரத்தினவிமலனைத் தேவியோடும், ஆவலின்வணங்கித்தென்பாலரன்முன்னஞ் செழுத்தையோதிப், பாவியாமவளைப் பார்க்கப் பசாசுவிட்டகன்றதன்றே.

(இ-ள்) தேவசன்மாநந்தாநதியில் ஸ்நாநஞ்செய்து அங்கெழுந்தருளிய சுத்த இரத்தினேசுவரரையும் அகிலாண்டவல்லி யாரையும் அன்புடன் தெரிசித்து ப்பின் தென்பாலெழுந்தருளிய தக்ஷணாமூர்த்தி சந்நிதி முன்னிருந்து பஞ்சாக்ஷரத்தை ச்செபித்துப் பாபியாகிய தன் மனையாளை நோக்க அவளைப பற்றிய பசாசு விட்டிநீங்கியது. எ-று. (கூஅ)

அவளையு நந்தையாகு மாற்றினின் மூழ்குவித்துத், தவளவெண்ணீறு பூசிச் சமாபதிதனைப்பணிந்து, கவளமாகரியுரித் தகண்ணுதல் பாதம்போற்றித், துவளுநூலிடையாளோடுந் தோத்திரம்பலவுஞ்செய்தான்.

(இ-ள்) பின் அந்தப்பிராமணன் மனையாளுக்கு நந்தாநதியில் ஸ்நாநஞ்செய்வித்து வெள்ளிய திருநீ

று தரித்துச் சமாபதியாரைப் பணிந்து பின்னர் க வளமுண்கின்ற பெரியயானையை யுரித்துப்போர்த்த கண்ணுதலாகிய சுந்தரத்தினேசுரரை வணங்கித் துவளுநூல்போன்ற இடையையுடைய காந்திமதியோடு அளவில்லாத தோத்திரங்கள் செய்தான். ()

வந்தனைசெய்துமீண்டுமகிழ்ந்திருவருமன்பாகி,நந்தைமாநகரந்தன்னி னலம்பெறமனையுண்டாக்கி, மைந்தரைப்பெறுதல் வேண்டிவைகாசிப்புகர்வாரத்திற், சுந்தரிமாதேவிக்குச் சொல்லுநான்முறையிற் செய்தான்.

(இ-ள்) வந்தனைவழிபாடுகள் செயது திரும்பி மகிழ்ந்து இருவரு மிகுந்த அன்புடையராகி அந்நந்தாபுரத்திலோர் இல்லமுண்டாக்கி யதிலிருந்து புத்திரப்பேற்றை விரும்பி வைகாசிமாதம் சுக்கிரவாரந்தோறும் சுந்தரியென்னும் பெயரையுடைய அகிலாண்டவல்லியாருக்குச் சொல்லப்பட்ட நான்குவிதஉபசாரத்துடன்பூசைசெய்தார்கள். எ-று. (சு0)

நாலுவாரமும் பூசித்த நலத்தினாலுமைமகிழ்ந்து, சாலவேநாலுமைந்தர் தனைப்பெற வரங்கொடுத்தாள், ஏலவார் குழலிகாந்திமதியுமிவ்வாறுபெற்றே, பாலர்நால்வரையும் பெற்றுப்பதியுடன் கலந்திருந்தாள்.

(இ-ள்) வைகாசிமாதம் நாலுசுக்கிரவாரமும் பூசைசெய்தநன்மையினால் உமையவள் மனமகிழ்ந்து நான்கு பிள்ளைகளைப் பெற வரங்கொடுத்தாள் அவ்வண்ணமே மயிர்ச்சாந்தமணிந்த கூந்தலை யுடையாளாகிய காந்திமதி நான்கு பிள்ளைகளைப்பெற்று நாயகனுடன் கலந்திருந்தாள். எ-று. (சுக)

அந்தத்திற் கதியும் பெற்றுளாரெனச் சூதன்கூறச், சிந்தித்த சௌனகன்றான் றெளிவு

றமகிழ்ந்து போற்றி, நங்கைதப்பொற்பதியில
ற்ப நண்ணுபுண்ணியஞ்செய்தாலும், விந்தத்
தைப்போல வோங்கு மேன்மையையுரைத்த
ல்வேண்டும்.

(இ-ள்) அந்தக் காந்திமதியானவள் அந்தத்தில்
கதியும்பெற்றுளென்று சூதமுனிவர் சொல்ல அ
வைகளை மனதிற் சிந்தித்த சௌனகமுனிவர் தெ
ளிவுறமகிழ்ந்துபோற்றி நந்தாநதிசூழ்ந்த அந்நகரத்
திற் கொஞ்சம் புண்ணியஞ்செய்தாலும் அது விந்
தகிரியைப்போல வோங்கி வளரு மேன்மையை
ச்சொல்லி யருளவேண்டும். எ-று. (சஉ)

புண்ணியமற்பமாகப் புரிந்துதானியாவர்தா
மே, நண்ணினாதனைக்கேட்க நாடினதென்னு
ளந்தான், எண்ணியதவத்தின்மிக்கோ யியம்பு
கவென்னச் சூதன், பண்ணிசைபுராணத்துள்
ள படியினையுரைக்கலுற்றான்.

(இ-ள்) யாவராலுங் கருதப்பட்ட தவத்தினன்
மிக்கோனே இந்தஸ்தலத்தில் சிறு புண்ணியங்களை
ச்செய்து பெரும்பலனை யடைந்தவர்கள் யார் அவ
ர்கள் சரித்திரங்களைக் கேட்க என்னுளம் விரும்புகி
ன்றது அதனைச் சொல்லி யருளவேண்டு மென்று
சௌனகர் கேட்க நல்ல பண்ணிசைந்த புராணத்தி
லுள்ளவாறே சூதமுனிவர் சொல்லத் தொடங்கி
னார். எ-று. (சங)

பிசாசவிமோசனச் சருக்கம்

முற்றிற்று.

ஆகச்செய்யுள்—226.

உ

சிவமயம்.

ஏழாவது

# தானபலச் சருக்கம்.

ஏடலர்பெண்ணையெனத்திரிமெய்யன்
றாடணமாகிய சொற்பெறுபொய்யன்
வேடர்குலத்தன் வினைப்படுதீயன்
காடகனுமவன் விற்செறிகையன்.

(இ-ள்) மடல்விரிந்த பனைமரம்போல் நீண்டுவளர்ந்து எங்குஞ்சுழன்று திரிகின்ற சரீரத்தையும் நிந்தைச்சொற்களைப் பெற்ற பொய்யை யுடையவனும் வேடர்குலத்திற் பிறந்தவனும் கெடுவினையே குடிகொண்ட தீயவனும் விற்பிடித்தகையை யுடையவனும் ஆகிய அவன் காடகனென்னும் பெயரை யுடையவன். எ-று. (௧)

இருள்பலகூடியிருந்த நிறத்தன்
பெருகுசினங்கள் பிறந்தமுகத்தன்
பருகுநிணத்தசை பற்றுமெயிற்றன்
சுருள்பசிதங்கிய தொந்திவயிற்றன்.

(இ-ள்) பலவிருள் கூடியிருந்ததை யனையநிறத்தையும் பெருகிய கோபம் பிறந்த முகத்தையும் உண்கின்ற நிணத்தசை பிடித்த பற்களையும் சுருட்டிப் பிடிக்கின்ற பசிதங்கிய தொந்திவயிற்றையு முடையவன். எ-று. (௨)

வெண்கவடித் தொடைமீது புனைந்தே
வண்கனுரித்த வசைந்தொளிர்மார்பன்

றிண்கடுமைத் திறலேதெரிபாதன்
கண்கள் சிவந்தழல் கதுவவிழிப்பான்.

(இ-ள்) வெண்மையை யுடைய பலகறைமாலை யை மீது புனைந்து வண்மைபொருந்திய கண்பார் வை யுருவத்தக்க மார்பையும் பலமும் கடினமும் வல்லமையும் காணப்பட்ட காலையும் சிவந்துஅக்கினி பபொறிகளைச் சிந்துகின்ற விழியையுடையகண்க ளையுமுடையன். எ-று. (௩)

அரையில்விசித்திடு சுரிகையனம்பும்
வரிவிலுமுற்றிடு வலியகரத்தான்
நெரிபுருவத்தனு ணெடிதுயர்கிற்கும்
பெரியகுரற்கொடு பெரிதிரைகிற்பான்.

(இ-ள்) இடையில் விசித்துக் கட்டப்பட்ட உடைவாளையும் அம்பும் வரிக் கட்டினையுடைய வில் லும்பொருந்திய கையையும் நெரிப்பான புருவத் தையும் உண்ணீண்டுயர்ந்திருக்கும் பெரிய குரற் கொடுமிக் கிரைதலையு முடையவன். எ-று. (௪)

வேறு.

அடவிநெறியில் வழிகட்டியாரேனுந்தான்வ ருபவரை, உடைமைநிதியமுதல் யாவுமுள்ள கலைகளுடன் பறித்துக், கடகோரயிலாற் குத் திவெட்டிக் கணைகளெறிந்து சோதித்துப், பு டவிமிசையே விழவிடுத்துப் போந்தேகாட்டி னுட் புகுவான்.

(இ-ள்) காட்டுமார்க்கத்தில் வழியைக்கட்டி யா வராயினும் வருகின்றபேர்கள் ஆபரணந்திரவியம்வ ஸ்திரங்களைப் பறித்துக் கொண்டு பரிசாயுதத்தினா ல் வெட்டியும் வேலாயுதத்தினாற் குத்தியும் சோதி த்துக் காட்டினுட் புகுந்தொளிப்பவன். எ-று (௫)

வேதநெறிசேர் பூசுரர்கள் விரதம்பூண்டதா பதர்கள், ஏதமிலாவெதிசுரர்களிவர்கண் முத லாவெவர்களையும், வாதைப்படுத்திக் கொலை செய்து வலியநிதி கடனைக் கவர்ந்தும், போ துமடவார்தமை யழிந்தும் பொல்லாநெறியே புகுந்திடுவான்.

(இ-ள்) வேதப் பிராமணர்கள் மாவிரதியர்கள் முனிவர்கள் யோகியர்கள் முதலான நல்லோர்களை வாதைப்படுத்திக் கொலைசெய்தும் வரப்பட்டவர்க ள் நிதியங்களைக் கவர்ந்தும் போதுகின்ற மாதர்களை க் கற்பழித்தும் திரிகின்றகெட்ட நிலைமையையே பூண்டவன். எ-று. (௬)

இந்தவகையேகொலைகள விங்கெல்லை யில் லா வகைசெய்து, சந்ததமுந்தானவ் வடவிச னிலே யுறையுமந்நாளில், நந்தைநதியீசான்றி ருத்தேர்நடத்துந்திருநாள்சேவிக்கச், சிந்தைம கிழ்ந்தே காஞ்சிபுரந்தனிலே யிருந்துசிலபே ரகள்.

(இ-ள்) இவ்விதமான கொலை களவு முதலான வைகளை யெல்லையில்லாமற் றினஞ்செய்து அக்கா ட்டிற் றிரிகின்ற அந்த நாளில் நந்தாபுரத்திலெழுந் தருளிய பரமபதியின் இரத உற்சவஞ்சேவிக்க ம னமகிழ்ந்து காஞ்சிபுரத்தினின்றும் சில பேர்கள் வ ந்தார்கள். எ-று. (௭)

தூசின்விதங்கள்பல வகையுந்துகிருந் தாள த்துடன்விளங்கு, காசின்வடமுஞ்செழு நி தியுங் கலனுமாகி வருவோரை, வீசுமயில்வா டரித்த கரவேடன்கண்டு வழிகட்டி, மாசில்வ கைகளெலாம் பறித்து வனத்துளிருக்கு மவ் வேலை.

(இ-ள்) பட்டுவஸ்திரங்களும் பவளங்களும் முத்துகளுங்கோர்த்து விளங்கப்பட்ட குற்றமில்லாத தாவடங்களும் செழுமையான திரவியங்களும் ஆபரணங்களும் கொண்டுவருகிற பேர்களைக் கூர்மைபொருந்திய வேலும் வாளும் பிடித்த கையையுடைய வேடன்கண்டு வழிகட்டிப் பறித்துக்கொண்டு அவ்வனத்துள் ளிருக்கும் வேளையில். எ-று. (

தூரவொருவன்விளாங் கனியின்சுவையங்
கெடுத்துவருபவனைச், சாரவருதலொடுங் கா
லிற்றடியாற் புடைத்தான வ்வடியாற், பா
ரின்விழுந்தானவ னிவனும் பறித்துக்கலையும்
பழச்சுவையுஞ், சேரவெடுத்துவனத்துள்ளே
செறிந்தேயிருக்குமந்நாளில்.

(இ-ள்) தூரத்திலொருவன் விளாம்பழச்சுவையை யெடுத்துக்கொண்டு வருவதைக்கண்டு தன்னருகு வருமளவும் பேசாமலிருந்து சமீபத்திலவன்வந்தவுடன் தன்கையிலிருந்த தடியால் அவன் கலைக்காலில் ஓங்கியடித்தான் அடித்தவுடன் பூமியில்விழுந்தான் அத்தருணத்தில் வஸ்திரத்தையும் பழச்சுவையையும் பறித்துக்கொண்டு அக்காட்டினுள்ளிருக்குமந்த நாளில். எ-று. (௬)

வேறு.

மெய்திகழிரத்தினபுரி மீதிலுறைநெறியோன்
வைதிகனெனப்பெயர் தரித்தநெறி மறையோன்
எய்தியவனத்திடை யெரித்திடு சமிதுக்
கொய்துபலபுட்பமொடு கொண்டுவரலோடும்.

(இ-ள்) சத்தியமேவிளங்குகின்ற இரத்தினபுரியில் வசிக்கப்பெற்றவனும் நன்னெறியையுடையவனும் வைதிகனென்னும் பெயரையுடையவனும

ஆகியவோர் பிராமணன் அக்கொடியவேடன் தங்கி யவனத்திலுட்சென்று சமித்தும் பத்திர புஷ்பங்க ளும் கொய்துகொண்டு வருந்தருணத்தில். எ-று. (

கண்டனனவ்வேடனு யர்கலைநிதிகள் கவர்தற்
குண்டெனநினைத்தவ னொளிக்கமறையோனுங்
கொண்டதோர்சமித்தினொடு குறுகுதலுமதிர
மிண்டினொடுநில்லென வெருண்டுநிலம்வீழ்ந்தான்.

(இ-ள்) அந்தப்பிராமணன் வருதலை வேடன்கண்டு வஸ்திரங்களும் நிதிகளும் கவர்தற்கு இவனிடத்திலுண்டென்று நினைத்து ஒளித்துக்கொண்டிருக்க அப்பொழுது பிராமணன் சமித்தொடு புஷ்பங்களுங்கொண்டு வேடனொளித்த இடத்திற்குச் சமீபத்தில் வந்தமாத்திரத்தில் கோடையிடிபோற் சத்தித்து மிண்டினோடு நில்லென்று சொல்ல அதைக் கேட்டபிராமணன் பயந்து நிலத்தில் வீழ்ந்தான். எ-று. (கக)

விழுந்துடறளர்ந்துமிக வெடவெடெனவெருவுற்
றெழுந்திலனடுங்கின னிளைப்பினொடு புரளும்
அழுந்துமனவேடனவ னருகுறவும்வந்தே
மொழிந்ததிருவேடமு முந்நூலுமனிநீறும்.

(இ-ள்) அந்தப்பிராமணன் பூமியில் விழுந்து சரீரந்தளர்ந்து மிகவும் வெடவெடென்று நடுங்கிப்பயந்து எழுந்திராமல் இளைப்புடன் பூமியிற் புரளும்போது கடின சித்தத்தையுடைய வேடன்கண்டு அந்தப்பிராமணன் கிட்டேவந்து பார்த்துச் சொல்லப்பட்ட உருத்திராக்ஷமும் பூணூலும் விபூதியும். எ.று. (க௨)

மானதளுமுள்ளினுடை கோவணமுமன்னும்
மேனியதுகண்டிவனில் வேறுபலமொன்றும்

ஆனதில்லையென்னவய ரேலெழுதியானீ
தானெனதுநினைத்தபொருடந்திடுவெனென்றான்.

(இ-ள்) மான்றோலும் உள்ளுடையாகிய கோவணமும் சிவவேடந்தரித்த திருமேனியுங்கண்டு இவனிடத்தில் நமக்கு யாதொரு பிரயோசனமு மில்லையென்று நினைத்து ஓ பிராமணா நீ சோர்வடையவேண்டாம் எழுந்திருநீ மனதில்நினைத்த பொருளைச் சொல் அப்பொருளை யான்றருவேனென்று சொல்லினான். எ-று. (௧௩)

வேண்டுவதுகூறுகென வேடனுமியம்ப
நீணடமறைவேதிய னினைத்தயர்வுநீங்கி
யீண்டிவன்மொழிந்தபடி யாமினிமறுத்தால்
மீண்டுமிவனென்செயுமெனவெருவலுற்றே.

(இ-ள்) பின்னும் நீவேண்டுவதைச் சொல்லென்றுசொல்ல அவ்வார்த்தையைக் கேட்ட வேதவல்லவனாகிய பிராமணன் சோபநீங்கி யிப்பொழுதிவன் சொல்லியபடி செய்யாமல் மறுத்தால் பின்னென் செய்வானோவென்று பயந்து. எ-று. (௧௪)

வைத்திடுவிளாங்கனியின் வாசமதறிந்தே
யுத்தமகனிந்தபல மொன்றருடியென்றான்
அத்திடமிரண்டுகனி யவனுதவல்கொண்டே
எத்துமறைவேதிய னிரத்தினபுரியுற்றான்.

(இ-ள்) அவ்விடத்தில் வைத்திருந்த விளாங்கனியின் வாசத்தை யறிந்து ஏ உத்தமனே ஒருவிளாம்பழம் கொடுக்கவேணுமென்றான் அந்தப்படியே யிரண்டுபழத்தைக் கொடுத்தான் அதைப்பெற்றுக்கொண்டு வேதவல்லவனாகிய பிராமணன் இரத்தினபுரியையடைந்தான். எ-று. (௧௫)

நந்தைநதிமேவிய நறும்புனலிலாடிப்
புந்தியுடன்மிக்க சிவபூசனை புரிந்தே
நிந்தையில்விளங்கனி நிவேதனமளித்தே
அந்தவிதியோடவையு மன்னமுமயின்றான்.

(இ-ள்) அடைந்தவன் நந்தாநதியிற் பொருந்தி யவாசநீரில் ஸ்நானஞ்செய்து அறிவுடன் மிக்க சிவபூசைசெய்து கெடுதியில்லாத விளாங்கனியைப்பரமசிவநிவேதனஞ்செய்து அந்தவிதிப்படி செய்த அன்னத்தோடு விளாம்பழத்தையுமுண்டான். எ-று

அஞ்சுதினமான திரு நாளதனின்மேவி
விஞ்சுவிடைமீதில்வரு விமலனடிபோற்றி
நெஞ்சமகிழ்வோடவனு நேசமோடிருந்தான்.
வஞ்சமனவேடனவன் வளமினியுரைப்பாம்.

(இ-ள்) பின் அந்தப்பிராமணன் ஐந்தாந்திருவிழாவில் இடபவாகனரூடராக எழுந்தருளிவந்த விமலனாகிய இரத்திநேசுரர் திருவடிகளில் வணங்கித் துதிசெய்து மிக்க மகிழ்வுடன் அங்கிருந்தான் அது நிற்க வஞ்சக நிரம்பிய மனத்தையுடைய வேடனது செய்தியை யினிச்சொல்வாம். எ-று. (கஎ)

பன்னுவனவேடனெடு நாட்பவமிழைத்தே
பின்னரவன் வல்லுயிர்பிரிந்திடு மந்நாளில
முன்னியமதூதுவர் கடாமுடுகிவந்தே
பின்னுறுமபாசமதனாற் பிணிவுசெய்தார்.

(இ-ள்) மேற்சொல்லியவேடன் நெடுங்காலமிக்க பாவங்களைச் செய்து பின் அவன் வலிய உயிர்பிரிகின்ற அந்தநாளில் யமதூதர்கள் இவன்மிகக்கொடிய பாவியென்று நினைத்து எருமைக்கடாவை முடுகி நடத்திக்கொண்டு வந்து பின்னலுற்ற பாசக்கயிற்றினாற் கட்டியிழுத்தார்கள். எ-று. (கஅ)

## வேறு.

அந்தவேலை யானருள்சூடிய
நந்திதான்கணநாதனை யேவவே
வந்துதோன்றி வன்பாசமதிற்றுகச்
சிந்தவேயமதூதனைச் சீறினார்.

(இ-ள்) அத்தருணத்தில்பரமசிவன்அருளைப்பெ ற்றநந்திகேசுரர் வேடனைக்கொண்டுவரும்படி சிவக ணங்களை அனுப்ப அச்சிவகணங்கள் வேடனருகு வந்து யமதூதர்கள் கட்டியபாசக்கயிறுகள் அற்று ப்போகச் செய்து அவ்யமதூதர்களை மிகவுங் கோ பித்தார்கள். எ-று (௧௯)

அடித்துரப்பிட வங்கைமுறிந்தவர்
நடுங்கிடச்சென்று காலனைநண்ணினார்
விடுத்தவேடனும வேடனையொப்பென
அடுத்தமேனிய தேநரித்தானரோ.

(இ-ள்) யமதூதனைக் கணநாதர்கள்ஆர்ப்பரித்து அடித்த அளவில் கைகால்கள் முறிந்து மிக நடுக்க த்துடன் யமன்பாற் போய்ச் சேர்ந்தாகள் அப்பா ற பாசக்கயிற்றினின்றும் விடுபட்ட வேடனானவன் மன்மதனுக்குச் சமானமான அழகுவாய்ந்த உருவத் தைப்பெற்றான். எ-று. (௨௰)

தேவனாகிய திவ்வியரூபத்தான்
மேவிசெம்பொன் விமானத்தின்மீதிலே
தாவியந்தரதுந் துமிதானெழப்
பூவின்மாரி பொழிந்திடப்பூவைமார்.

(இ-ள்) தேவாம்சத்தையடைந்த அழகுநிறைந் த உருவத்தையுடைய வேடன் செம்பொன்விமான த்திற் பொருந்த அச்சமயத்தில் அந்தரதுந்துமி மு

முங்கவும் அரம்பைமாதர்கள் புட்பமாரி பொழிய வும். எ-று. (உக)

கவரிவீசிடக் கானங்கள்பாடிட
எவருமேத்த வினிதுகொண்டேகியே
தவமுனிக்கணந் தாங்குங்கயிலையிற்
புவனநாதனைப் போற்றிடவேசெய்தார்.

(இ-ள்) அரம்பைமாதர்கள் வெண்சாமரை வீசிக்கொண்டு வரவும் வயிரியர்கள் கானம்பாடிவரவும் யாவருந்துதிக்க மனமகிழ்வுடன் அழைத்துச்சென்று தவமுனிவர் குழாம் ஏத்தெடுக்கின்ற கைலையிலெழுந்தருளிய அகிலபுவன காரணனாகிய பரமசிவனைத் துதிபண்ணும்படி செய்தார்கள். எ-று. (உஉ)

அன்னதாகவ வன்கைலாயத்தின்
மன்னினான்பின் மலியமதூதுவர்
முன்னியந்தகன் முன்புறச்சென்றுதான்
சென்னிதாழ்த்திச் செயதெரிந்தாரரோ.

(இ-ள்) அவ்வண்ணமாக அந்தவேடன் கைலாயத்தினிலைபெற்றிருந்தான் பின் யமதூதர்கள் அந்தக்ஷணமே இயமன் முன்சென்று வணங்கி வேடன் கைலையங்கிரிக்குப்போன சங்கதியைத்தெரிவித்தார்கள். எ-று. (உ௩)

கேட்டகூற்றுகி லேசமுங் கோபமுங்
காட்டவேகண் கனல்வந்துசிந்திட
வாட்டமாகிய திர்ந்தெழுந்தெமிகுங்
கோட்டினாகம யிடங்கொணர்கென்றான்.

(இ-ள்) தூதுவர்கள் வார்த்தையைக் கேட்ட யமன் கிலேசமுங்.கோபமுங்கொண்டு கண்களினின்று நெருப்புப் பொறிபறக்க மிக்க வர்ட்டத்துடன் சத்தித்தெழுந்து நீண்டகொம்புகளையுடைய மலை

யையொத்த மகிஷத்தைக் கொண்டுவருகவென்று
ன். எ-று. (௨௪)

வேறு.

நெறித்தமருப்பி னழுத்தியகிம்புரி நிமிரொ
ளிமணியிலகச், செறிதகவெறித்த விழிக்குள
னற்பொறி சிதறிக்கனலுதிரப், பிறித்தவகைப்
படி கட்டுசதங்கைகள் பெருகொலி கலகவெ
னக், குறிக்தகழுத்தின் மணித்தொனிதிக்கு
றை குலகிரிசெவிபட.

(இ-ள்) நெறித்து முறிப்பாகிய கொம்புகளிற் பதித்த பூண்களில் அழுத்திய ஒளியையுடைய மணிகள் பிரகாசிக்கவும் நெருக்கமாக விழித்துப்பார்க்கின்ற கண்களினின்றும் அனற்பொறி சிந்தவும் வகைவகையாகக் கட்டிய சதங்கையினின்றும் பெருகிய வொலி கலகவெனவும் கழுத்திற்கட்டிய மணிந்தொனியால் அஷ்டகுல பருவதங்கள் செவிபடவும். எ-று. (௨௫)

கனைக்கனைப்பினி டிக்குமுகிற்குல கணம
து நைபருகத், தனிதனிவைத்த பாதத்தி
னதிர்ச்சியிற் றுரணிமுதுநெரியக், குனித்த
குனிப்பொடுதத்திமதத்திடு கொடியமயிடமந
னைப், பனைகருகிகர்த்த விரற்கைபடைத்திடு
படர்கொடு வரலுமரோ.

(இ-ள்) கனைக்கின்ற கனைப்பினால் முகிற்கூட்டங்கள பயந்து பக்கங்களிலொதுங்கவும தனிதனியாகவைத்த பாதஅதிர்ச்சியால் பூமியின்முதுகுநெரியவும் குதித்துத் துள்ளிவருகின்ற எருமைக்கடாவைப் பனைமரத்துக்குச் சமானமான விரல்களையடைந்த கையையுடைய தூதர்கள் கொண்டுவரலும். எ-று. (௨௬)

சிவத்த மயிர்த்தொகை பற்றுசினத்தொடு
செறியனல் விழியிலகக், கவர்த்தபிறைக்குல
மொத்த வெயிற்றொடு கரியமுகம தொளிர
ப், புவித்தலமுற்றும் வளைத்தகயிற்றொடு பு
கரணியயிலுடனே, நிவர்த்தகதைப்படி வை
த்தகரத்துணை நிமிர்வளையமதுறவே.

(இ-ள்) இயமனானவன் சிவந்த மயிர்த்தொகையைப் பற்றிக்கோபத்துடன் நெருங்கிய அக்கினிக்கண் பிரகாசிக்கவும் பிளந்து வளைந்த மூன்றாம்பிறையையொத்த கோரதந்தங்களுடன் கருமேகம் போன்ற முகம் விளங்கவும் பூமியெல்லாம் வளைக்கப்பட்ட பாசக்கயிறும் புள்ளிபாய்ந்த வேலோடு உயர்ந்த தண்டாயுதத்தைவைத்த இரண்டுகைகளிலுள்ள வளையத்தோடு. எ-று. (உஎ)

பகட்டினின் மேற்கொடு டைத்தவிசைக்
கொடு பரவையரவமுடனே, முகட்டளவெ
ற்றி யிரைதருவரத்தென முழுதுமுலைத்துலை
யத், துகட்டரைமுற்று மெழுப்பியதப்பணி
தொடுகடலளறுபட, விகற்பெறுகொற்ற மி
கப்படர்சுற்றிட ரிற்றிரியனுகமே.

(இ-ள்) எருமைக்கடாவின் மேலேறிக்கொண்டு சமுத்திர முடைந்துக்கொண்டு ஆகாசமளவும் பொங்கி யிரைத்து வருதலைப்போல் உலகமெல்லாம் உலைந்துபோகவும் நடைவேகத்திலெழுந்ததூகள் படிந்து சமுத்திரஞ் சேறுகவும் வெற்றிமிகுந்த அனேக யமபடாள் சூழ்ந்துவரவு நடந்தான். எ-று. (

வேறு.

கருங்கடாவினின்றிழிந்து போய்க்கைலைவெற்பெய்
மருங்கெலாந்தவர்சூழ் திருவாயிலையணுகி [தி

நெருங்கியண்டர்குழாத் தொகைநிரைநிரையாக
ஓருங்கினேத்துநந்தி சுரரோலக்கமதனே.

(இ-ள்) தானேறிச்சென்ற கருத்த எருமைக்க டாவினின்றிழிந்து கயிலாயமலையையடைந்து அரு ந்தவராகிய முனிவர்கூட்டங்கள் நிறைந்த கோபுர வாயிலைச்சேர்ந்து அவ்விடத்தில் தேவர்கள் நிரைநி ரையாகச்சேவித்து நிற்கு நந்திகேசுரர் திருவோல க்கத்தை. எ-று. (உ௯)

கண்டுதூரத்தில் வேளைபார்த்தருகுறக்கலந்தே
அண்டர்நாயகசயசய போற்றியென்றகலந்
தெண்டனிட்டு நின்றேத்தலுஞ் சிலாதரன்குமரர்
சண்டன்வந்ததென் கூறெனமலியுஞ்சாற்றும்.

(இ-ள்) கண்டு தூரத்தில்நின்று சமயம்பார்த்து அருகிற்சென்று தேவர்நாயகனே ஜயஜயபோற்றி யென்று மார்பானது நிலத்திற்படியத்தீர்க்க தெண் டஞ்செய்து எழுந்து கைகட்டி வாய்புதைத்து நிற் கச்சிலாதமுனிவர் வரபுத்திரராகிய நந்திகேசுரர் இய மனே நீ யிங்குவந்தகாரியம் யாதென்று வினவ இய மன்சொல்வான். எ.று. (௩0)

அய்யகேளிரத்தின புரத்துத்தரத்தடவி
வெய்யகானிலோர் வேடனுங்காடகனென்பான்
செய்யொணு மகாபாதகங் கொலையுடன்றீங்கும்
பொய்யுமேசெய்து திரிந்துபின்னிறந்திடும்போதில்

(இ-ள்) ஐயனே கேட்டருளுக இரத்தினபுரிக் கு உத்தரபாரிசத்தில் மிகப்பயங்கரமான காடொன் றுண்டு அதில் காடகனென்னும் பெயரையுடைய ஒருவேடன் செய்யத்தகாத மகா பாதகங் கொலை தீங்கு பொய் முதலான கெடுதிகளைச் செய்து திரிந் து அந்தியகாலத்தில் சிவன் விடுகிறபோது.எ-று. (

அடியனேன் படரவனுயிர்கவரச்சென்றாரைத்
கடியவே நகொடு சிவகணநாதர் கடாக்கி
நெடிய தானபொன்விமானத்திலேற்றிநின்னெறியே
கடிதினுய்த்தனரவனையிக் கயிலையங்கிரியில்.

(இ-ள்) அடியேனாகிய என்னுடைய தூதர்கள் அவனுயிரைக் கவரச் சென்றார்கள். அவர்களைச்சிவகணநாதர்கள் தடிகளினாற்றாக்கி நெடிய பொன்விமானத்திலேற்றி நெறியில் விரைவாக நடத்தி யிக்கயிலையங்கிரியிற் கொண்டுவந்து சேர்த்தார்கள். எ-று

ஞாலமீதினிற் பாவரைநரகத்தில் வீழ்க்க
எனுமிவ்வதிகார மேதினியெனக்கென்றே
காலதண்டமும் பாசமுங்கழித்து முன்வைத்தான்
நீலகண்ட நந்தீசனார் வெகுண்டிவை நிகழ்த்தும்.

(இ-ள்) உலகத்திற் பாவஞ்செய்தவர்களை நரகத்தில் விழுத்தாழ்த்தக்க அதிகாரம் எனக்கேதென்று காலதண்டத்தையும் பாசக்கயிற்றையும் வாங்கி நந்திகேசுரர் முன்வைத்து நின்றான் அப்பொழுது நீலகண்டராகிய நந்திகேசுரர் கோபித்துச் சொலவார்.()

எம்பிரானுறை யிரத்தினபுரத்துறை யெவரும்
சம்புவாகியசொரூபமாச் சற்கதியடைவார்
அம்புவிக்கணேயஞ்ச தாங்குரோசமென்னெல்லை
நம்புமவ்விடமாகு முன்னிடாதினண்ணு.

(இ-ள்) எம்பிரானாகிய பரமேசுரன் எழுந்தருளிய இரத்தினபுரியில் வசிக்கப்பட்டவர்கள் யாவரும் சிவசொரூபமாகி நற்கதியையடைவார்கள். அந்த இரத்தினபுரிக்கு எல்லை ஐந்து குரோசமாகும் அவ்வெல்லைக்குள் வசிப்பவர்களிடத்தில் உன் தெண்டனை செல்லாது. எ-று. (௯௪)

அந்தவெல்லையிலுறைபவரகம்புறமுறைபவோர்
எந்தவல்வினைப் பாவங்கள் செய்தபேரெனினும்
சிந்தையாரவோருண்டியுஞ் சீரடைக்காயுந்
தந்திடிற் பரகதியினிற சாருவர்பின்னும.

(இ-ள்) மேற்சொல்லிய எல்லைக்குள் உறைபவர்கள் அல்லது அகத்திலாயினும் புறத்திலாயினு முறைபவர்கள் மகா பாதகங்களைச் செய்தவராயினும் அவர்களுக்கு அன்புடன் ஓர் பொழுது அன்னமிட்டு வெற்றிலைபாக்கு அளிப்பாராயின் பரகதியடைவது திண்ணம் இதன்றியும். எ-று- (௯௫)

கருதுவெள்ளியங்கிரியவர் காணியாங்காணுய்
சுருதிவேதியன்கையினிற் ருேன்றிய கனிவின் [ற்
அரியவெள்விளங்கனி யிரண்டளித்தபுண்ணியத்தா
பெரிதுபெற்றனன் வேடனிப்பிறங்கலின் பேறே.

(இ-ள்) யாவருங் கருதுகின்ற வெள்ளியங்கிரியவர் காணியாகுங்கண்டாய் அத்தன்மையையுடைய இரத்தினபுரியில் வசித்த வேதோத்தமன்கையில இந்தவேடன் மனக்கனிவோடு இரண்டு விளாங்கனியைக்கொடுத்த புண்ணியத்தால் இக்கயிலாசகிரியை யடையும்பேற்றைப் பெற்றுன். எ-று (௯௬)

ஆதலாலிரத்தினபுரத் துறைந்தவர்க்காகாப்
பேதையாளருஞ்சிறிது செய்திடினுமேபெரிய
மாதவங்கள்செய்தவரினும் வளர்ந்திடும் பலந்தான்
ஈதறிந்து நீ நடத்தியாலிப் பிழைபொறுத்தோம்.

(இ-ள்) ஆதலால் இரத்தினபுரியில் வசிக்கின்றவர்களுக்கு உலகத்தார்களுக் காகாத பேதமையையுடையவர்களானாலும் அற்ப உபகாரத்தைச் செய்வாராயின் மாதவத்தோர் புண்ணியங்களினும் அதிகப் புண்ணியப் பலன்களை யடைவார்கள் இதையறி

ந்து நீ நடப்பாயாக இப்பொழுது செய்த பிழையைப் பொறுத்தோம். எ-று. (௩௭)

என்றுகூற லுநன்றெனவடியிணையிறைஞ்சித்
தென்றிசைக்கிழவோனுந்தன்செழும்பதிசென்றான்
கொன்றுகுத்தி வெங்கொலைபுரிகொடும்பவவேடன்
மன்றல்வெள்விளாங் கனியினாற் கயிலையில்வாழ்ந்தான்.

(இ-ள்) இவ்வண்ணமாக நந்திகேசுரர் சொன்னமாத்திரத்தில் அவ்வண்ணமே செய்கிறேனென்று திருவடிகளில் வணங்கி யமனானவன் தன்னுடைய வளநகரத்திற்குச் சென்றான் வரப்பட்டவர்களைக் கொன்றும் குத்தியும் கொலைசெய்த வேடனானவன் வாசனையையுடைய இரண்டு விளாங்கனியைக் கொடுத்த புண்ணியத்தால் கைலையங்கிரியில் வாழ்ந்திருந்தான். எ-று. (௩௮)

பறித்தவெள் விளாம்பழமிரண்டிப் படிப்பலித்தால்
அறத்திறத்தினாற்றான்செய்த பலத்தை யாரறிவார்
குறித்தவாறெனச் சூதமாமுனிவனுங்கூறத்
நிறைந்தமாதவச் சௌனகன் மகிழ்ந்துரை நிகழ்த்தும்.

(இ-ள்) காட்டிற்பறித்த வெள்ளிய இரண்டு விளாம்பழம் இப்படிப் பலத்தைக் கொடுக்குமானால் அறத்தினாலீட்டிய பொருள்கொண்டு செய்த புண்ணியத்தால வரும் பலனை யாவர் மொழியவல்லார் என்று சூதமுனிவர் சொல்ல நிறைந்த மாதவத்தினையுடைய சௌனகர் மகிழ்ச்சியாற் சொல்வார். ()

இந்தவாறுதானப்பல னன்றதாமினிமேல்
நிந்தையில்லதாந் தேவமால்வரை யந்நிலத்தில்
வந்தவாறதுகேட்க வென்மனம்விரும்பியதாற்
புந்தியாலுணர்ந்துரையெனச் சூதனும் புகல்வான்.

(இ-ள்) இந்தப்பிரகாரந் தேவரீர் அனுக்கிரகம் பண்ணின தானபல மகத்துவங்கேட்டு அடியேனுக்கு ஆனந்தமாயிற்று இனிமேல் இகழ்வில்லாதபெரிய தேவகிரி பருவதம் அந்தயிடத்தில்வந்த வரலாற்றையுங் கேட்க என் மனம் விரும்புகின்றது ஆகையால் தங்கள் அறிவினலுணர்ந்த அக்கதையையுஞ் சொல்லவேண்டுமென்று சௌனகர் சொன்னமாத்திரத்தில் சூதமுனிவருஞ்சொல்வார்எ-று. (௬0)

தானபலச் சருக்கம்.

முற்றிற்று.

ஆகச்செய்யுள்—266.

---

உ

சிவமயம்.

ஏட்டாவது

# தேவகிரிச் சருக்கம்.

சுத்ததவளித சுடரொளிகிளர்தர
மெத்துமிரசித மிகவளர்கிரியது
பத்தர்சிவகணபரமர் கண்முனிவர்கள்
சித்தருறைவது சிவனுறைகைலையே.

(இ-ள்) பரமசிவனுறைகின்ற கயிலாசகிரியானது பரிசுத்த வெண்மை நிறங்கிளருகின்ற மிருதுவாகிய இரசிதத்தினல் அமைந்தமலை அன்றியும் அடியவர்களும் கணநாதர்களும முனிவர்களும் சித்தர்களும் உறைவிடமாயுள்ளது. எ-று. (க)

குயிலைவிருதுள கொடிகயன்மதனேடு
டெயிலையவுணரை யெரிசெயுமவனுடன்
மயிலைநிகரொழின் மலைமகளுறைவது
கயிலைவரையது கடவுளர்பணிவதே.

(இ-ள்) குயிலை எக்காளமாகக்கொண்ட மீனக்கொடியை யேந்திய மன்மதனேயும் திரிபுரத்தையும் அதிற்றங்கிய அவுணர்களையும் எரித்த பரமசிவனும் மயிலையொத்த சாயலையுடையமலைமகளும் உறைவிடமாயுள்ளது. கயிலையென்னும் பெயரையுடையது தேவர்கள் வணங்கத்தக்கது. எ-று. (௨)

அனைய கயிலையிலழகிய சிகரம
தெனைய பலபலவிலகிய கொடுமுடி
வனையுமவைதனின் மருவியதொருவரை
புனையுமிறகொடு புவிமிசைதிரியுமே.

(இ-ள்) அந்தன்மையான கைலையங்கிரியிலே அழகிய உச்சியில் அனேகவிதங்களாகப் பிரகாசிக்கின்ற கொடுமுடிகளுண்டு அவைகளுக்குட் பொருந்தியிருக்கின்ற ஒரு கொடுமுடி பறக்கின்ற சிறையுடன் உலகத்தில் உலாவித்திரியும். எ-று. (௩)

தேவகிரியெனவே பெயர்திகழ்வது
தாவியிறகொடு தாரணிமுழுவதும்
மேவுபறவைகளாமென விசையுடன்
ஏவில்விடுசர மீதெனமருவுமே.

(இ-ள்) அந்தக் கொடுமுடியானது தேவகிரியென்னும் பெயரைக்கொண்டு சிறகோடு உலகமுழுவதுந் தாவிப் பறவைகளைப்போலப் பறந்து விலவிற்பூட்டி விடப்பட்ட பாணத்தைப்போல் விசைகொண்டு மருவும். எ-று. (௪)

வேறு.

அந்நாளில் வரையனைத்து மகிலமிசைப் பறவைகள்போல், மின்றருஞ்சிறகுடனேமிகப்பறந்து வீழ்ந்தெழுந்து, பன்னாளுந் திரிதலின்றற் பலவுயிர் வீய்ந்திடக் கண்டான். கொன்றருஞ்சதகோடி கொடுவாள் கொண்டிந்திரன்றான்.

(இ-ள்) அக்காலத்தில் உலகத்திலுள்ள மலைகள் யாவும் இந்தப்பூமியிற் பறவைகளைபபோலப் பிரகாசம்பொருந்திய சிறகுடனேபறந்து விழுந்து எழுந்து அனேககாலந் திரிதலினற் பலவுயிர்களிறப்பதைத அச்சத்தை விளைவிக்கின்ற நூறுகோடி கொடுவாளாகிய ஆயுதங்களைக்கொண்டு இந்திரன் கண்டான். எ-று. (௫)

வரையனைத்துஞ்சிறகரிந்து வரும்போதிலெதிராக விரைவுடனேதேவகிரி மீளுதலுமகவான்கண் [ லும் டுரைவெகுண்டங் கதன்மீது லுயர்குலிசந்தாககுர ரைவிரிந்த சிறகின்மிசை நேர்பட்டுவாய்மடிந்தே.

(இ-ள்) தேவேந்திரன் பருவதங்கள் எல்லாவற்றையும் சிறகரிந்துவருகிறசமயததில் தனக்கெதிராக அதிக வேகத்துடன் தேவகிரி வருவதைக்கண்டு கோபித்து அக்கிரியின்மேல் வச்சிராயுதத்தையெடுத்துத தாககினமாத்திரத்தில் விசாலமாக விரிந்த அந்தத்தேவகிரியின் சிறகிற்பட்டு வாய்மழுங்கி. எ-று. (௬)

சுவரொறிந்தகந் துகம்போற் சுடர்க்குலிசமீளுதலும், கவரொயிற்றுவெண்ணிறவெங்கடா மலையை யெதிர்கடவித், தவவில்வளைத்தனந் தமழைச்சரம்பொழியத்தேவகிரி, குவியிறகிவிருபாலுங் கொண்டகேடகம்போல.

(இ-ள்) அந்தவச்சிராயுதமானது சுவரிற்றுக்கி ய பந்துபோல் மீண்டமாத்திரத்தில் கவர்பட்ட தந் தங்களேயும் வெண்ணிறத்தையும் மதசலத்தையுமு டைய யானையை அந்தத்தேவகிரிக்கு எதிராகச் செ லுத்தி மிகவும் இந்திரதனுவைவளைத்துக் கார்காலம ழைபோலச் சரங்களைப்பொழிய அப்பாணங்களைத் தேவகிரி யிருபாலுமுள்ள சிறகிற் கேடகம்போல க்கொண்டது. எ-று. (எ)

புடைக்து தறிச்சரங்களெல்லாம் புகர்முக க்கைதனினூறி, அடர்த்தெதிர்ந்தே தந்திதனை யச்சிறகான் மோதுதலும், கிடைத்தசெருவி ப படியில்கிரிசெயலே தெனவெருண்டு, மி டல்செய்குலி சந்தனையேவிட நினைந்த நாரத ன்றன்.

(இ-ள்) அந்தத்தேவகிரி சிறகையடித்து உதறி னபோது கேடகமபோற் பொருந்திய சரங்களெல் லாம் அயிராவதத்தின் புகர்பாய்ந்த முகத்திலுள்ள கையிற்றைத்து விரிடளநிர்ந்து அச்சிறகால்மோ தினமாத்திரத்தில் நமக்குக்கிடைத்த யுத்தத்திற்கு ள் உலகத்தில் இப்படிப்பட்ட யுத்தங்கிடையாதெ ன்று பயந்துவலிமைசெய்கின்ற வச்சிராயுதத்தை யே பின்னும்விடநினைந்தான் அந்தச்சமயத்தில் நார தமுனிவன். எ-று. (அ)

வந்துவலாரியைநோக்கி மகிதலத்துங்கிரிகளென இந்தவரைதனைநினை யேவிதுகைலக்கொடுமுடியின் முந்துசிகரத்திலொன்றுமென்று முனியோதிடலுந் தந்திதனை விரையவிட்டுத் தடங்கைலைக்கிரியணுகி.

(இ-தி) நாரதமுனிவர்வந்து இந்திரனைநோக்கி ஓ இந்திரனே இந்தஉலகத்திலுள்ள மலைகளைப்போ

ல இம்மலையைநினைக்காதே இதுகைலாயபருவதத்தின்கொடுமுடிகளில் முந்தியகொடுமுடி யாகுமென்று சொன்னமாத்திரத்தில் இந்திரன் வெள்ளையானையை விரைவாக நடத்தி விசாலமான கைலாயகிரியை அடைந்து. எ-று. (க)

இறைவனடியைப் பணிந்திங்கிவ்வாறு விளம்புதலும், நறையிதழிச்சடை முடியோனவிவ்வனந்தக் கிரியதனைப், பறவைகள்போனீ யுலகிற்பறந்து திரிவதுதவிர்ந்தே, உறையெனநாமதற் குரைத்தவுண்மையை நீ கேட்டியென.

(இ-ள்) சிவபெருமானைப் பணிந்து தேவகிரியின் சமாசாரத்தைச் சொன்னமாத்திரத்தில் வாசனைபொருந்திய கொன்றை மாலையைத்தரித்த சடையையுடைய பரமசிவன் இந்திரனைநோக்கி ஓ இந்திரனே அந்தத்தேவகிரிக்குப் பறவைகளைப்போல உலகத்திற் பறந்து திரிவதைவிட்டு உலகத்தில தங்கியிருப்பாயென்று நாம் உத்திரவு கொடுத்திருக்கின்றோம் அந்த உண்மையை நீ கேட்பாயாக. எ-று. (

விளங்குவில்வவனம் பொன்னிவியனதிக்கு வடக்காக, உளங்கனியுமுனிவர் குழாததுடனீ யோசனைதூரம்,களங்கமில்லாநிலததாங்குகாசினிகருண் மேன்மையதாய், வளர்ந்திடுமெவ்விடந் தன்னின்மருவு முரோமசனிருக்கும்.

இ-ள். விளங்கப்பட்ட வில்வவனமெனறு ஒருவனமுண்டு, அந்த வனம் விசாலமாகிய காவேரிநதிக்கு வடக்காக உளக்கனிவினையுடைய முனிவர் கூட்டத்துடன் யோசனை தூரத்திலுள்ளது. குற்றமில்லாத இந்தப பூமிக்குள் மேன்மையையுடையதாக வளர்ந்தோங்கும் அந்த விடத்தில் உரோமசமு

னிவ ரிருப்பார். எ-று. (கக)

உத்தமமாமவணைகியுன் சிறகுமேனியுந்தான்
மெத்துபுவிதனக்குளுறமீது சிறிதேவிளங்கி [லம்
அத்திசையிலுறை முனிவோர்க்கருந்து கந்தமூலப
மொய்த்ததிரணங்காட்ட முயர்சமித்துமுதலாக.

இ-ள். உத்தமமாகிய அவ்விடத்திற் சென்று உன் இறகும் சரீரமும் மெத்தென்ற புவிக்குள் மறைந்து வெளியிற் சிறிது தோற்றப்பட்டு அந்தவிடத்தில் வசிக்கப்பட்ட முனிவர்களுக்குக் கந்தமூலம் பலம் இந்தனம் சமித்து முதலானவைகளை யெல்லாம். எ-று. (கஉ)

உதவியவணுறை யுன்மீதுறைதேவனுகமெ
னும், முதன்மைபெறு தீர்த்தத்தின் முதல்
வியுடனே நாமும், இதமுடனே சலககிரிடை
யெனப்புரிய வருதுமென, விதமுடனேயுரை
த்தப் பான்மேலு முயர் வரங்கொடுத்தும்.

(இ-ள்.) அவர்களுக்குக் கொடுத்து அந்த இடத்தில உறையுன்மேல தங்கிய தேவநாதமென்னு முதன்மைபெற்ற தீர்த்தத்தில் பார்வதியும் நாமும் இன்பமாக அதிற் சலக்கிரீடைசெய்ய வருவோமென்று பலவிதமாகச் சொல்லியும் உயர்ந்த வரங்களைக்கொடுத்தும். எ-று. (கங)

உனையொருகால்வலம் வந்தாருறுபிணிநோ
ய்மிடியடையார்; நினைவதெல்லாம்பெற்றிடுவா
ர் நீடுகதியும் பெறுவார், வனையுமெழிற் கயிலை
தனை வலம்வந்தோர் பெறும்பேறு, தனையடை
டைவார் தெரிசித்தோர் தானுமிக்கபலன்பெ
றுவார்.

(இ-ள்.) உன்னையொருதரம் வலமாகப் பிரதக்ஷணம் வந்தபேர்கள் பொருந்திய பிணி தரித்திரம் அ

டையமாட்டார்கள் நினைத்ததையெல்லாம் பெறு வார்கள் பெரிய கதியையும் அடைவார்கள் தெரிசித்தவர்கள் கயிலாசத்தை வலமாகவந்தபலன் எதுவோ அந்தப்பலனையும்பெறுவார்கள். எ-று. (கச)

உன்னிடத்தின் முளைத்த புதலுயர்தரு புல்
கொடிமுதலா. மன்னுமந்தப் பச்சிலைகள் வந்
துதனியுறைவோர்கள், தன்னைவருந்திடுங்கொ
டிய சகல வியாதிக்குந்தான், நன்னெறிசேர
வுடதமாநன்மை தனைக்கொடுத்திடுமே.

(இ-ள்.) உன்னிடத்தில் முளைத்த பூண்டுகள் உயர்ந்த மரங்கள் புற்கள் கொடிகள் முதலாகப் பொருந்திய பச்சிலைகள் உன்னிடத்தில் வந்து பொருந்தினவர்களுடைய கொடிய சகல வியாதிகளுக்கும் நல்ல அவுடதமாகி வினைகளை நீக்கி நன்மையைக் கொடுக்கும். எ-று. (கரு)

என்றுமிகவர நாமிங்கிய மனமதுமகிழ்ந்து
துன்றுமணித் தேவகிரி தொழுது விடைகொ
ண்டேகி, நன்றுபுரி வில்வவனநாடிய திறபாய்
ந்திடலும், ஒன்று புவியினுஞ் சேடனுயர் பட
முநெளித்துளதால்.

(இ-ள்.) இவ்விதமாக மிகுந்த வரங்களை நாம் கொடுக்க மணிகள் பொருந்திய தேவகிரியானது மனமகிழ்ந்து வணங்கி விடைபெற்று நன்மையைச் செய்கின்ற வில்வவனத்தைத் தேடியதிற் பாய்ந்திடலும் அந்த அதிர்ச்சியினால் பூமியைத்தாங்கிய ஆதிசேடன் படங்களை நெளித்தனன். எ-று. * (கசா)

யோசனையொன்றுய் நீளமுயரங்கால் யோச
னையாய், மாசிலகலங்காலாய்வளைந்திடுவிற்போ
ல் வடிவாய், வீசிவிழுந்திரு நிலத்தின்மீ தழு
ந்தி மேனியெல்லாந், தேசுபெறு சிறுவளையா
ய்த்தெரிந்திடு மத்தேவகிரி.

(இ-ள்.) ஒரு யோசனைதூர நீளமும் கால்யோசனைதூர முயரமும் குற்றமில்லாத கால்யோசனைதூரம் அகலமும் விற்போல் வளைந்த உருவமுமாக அந்தப் பூமியில் வீசிவிழுந்து மேனியெல்லாம் பூமிக்குள் அழுந்திப் பிரகாசம்பெற்ற சிறுமலையாகக் காட்டியிருந்தது அத்தேவகிரி. எ-று. (கஎ)

அக்கிரியைவலம்புரிந்தோர வருமையுநாமு
முறை, சுக்கிலமார்கைலைதனைத் தொழுதுவல
ஞ்செய்தார்கள், தக்கபலன் பெறுவதெல்லாந்
தாம் பெறுவார் தூரத்தே, திக்கிலுறத் தெரி
சித்தோர் சிந்தைநினைந்தது பெறுவார்.

(இ-ள்.) அந்தத் தேவகிரியை வலமாகவந்தபேர்கள் உமையு நாமும் வசிந்திருக்கின்ற வெண்மை பொருந்திய வெள்ளியங்கிரியைத் தொழுது வலம் வந்தவர்கள் பெறும் பலனைப் பெறுவார்கள் அதுவன்றித் தூரத்திலிருந்து அக்கிரியைத் தெரிசித்தபேர்கள் மனதில் நினைத்தவைகளை யெல்லாம் பெறுவார்கள். எ-று. (கஅ)

அந்தமலைதனிலுள்ளவடவியுறு பச்சிலைகள்,
எந்தவினையுந் தீர்க்குமினிய வவுடதமாகும், பு
ந்திதனி னினைந்தோர்க்கும் புண்ணியங்கண் மி
கப் பெருகும், இந்தவகை யெனக்கயிலை யி
றைவன் மகிழ்ந்திசைததனுமே.

(இ-ள்.) அந்தமலையிலுள்ள காட்டிற்பொருந்திய பச்சிலைகள் எவ்வகைப்பட்ட வியாதிகளையும்போக்கும் ஔடதமாகும் அன்றியும் அந்த மலையைத் தியானம் பண்ணினவர்கட்குப் புண்ணிய மிகப் பெருகும் என்று கயிலாயபதி சொன்னமாத்திரத்தில். ()

கேட்டமார்கோ னுமையாள் கேள்வனிணை
த்தா ளிறைஞ்சி, நாட்டமுறத் தேவகிரி நண்

ணிவலம்வந்துடனாற், கோட்டியத்தின்மேற் கொடுதன்கொழும்பதியிற் சென்றனென், றி ட்டுதவச் சவுனகனுந் கெழிற் சூதமுனியுரை த்தான்.

(இ-ள்.) அதைக்கேட்டு அமரர்கோமானாகிய வி ந்திரன் உமைகேள்வனாகிய பரமசிவன் றிருவடிகளி ல் வணங்கி விடைபெற்றுக்கொண்டு மிக்கபேரவா வோடு தேவகிரியையடைந்து பிரதக்ஷணஞ் செய்து உடனே நான்கு கொம்புகளையுடைய வெள்ளை யானையின்மேலேறித் தன்னுடைய செழித்த அம ராவதிப் பட்டணத்தையடைந்தானென்று தவசிரே ஷ்டராகிய சௌனக முனிவருக்குச் சூதமுனிவர் சொல்லினார். எ-று. (உ௰)

தேவகிரிவரலாறு சிறந்துளதென் றகமகிழ் ந்து, பூவணியுஞ் சிவனமேற் புனைந்த கங்கை த திவலையதா, மேவு நந்தாநதியென்றே விள ம்பினையாலந்தநதி, தாவிலங்குவந்தபடி சாற்று கெனக் கூறலுற்றான்.

(இ-ள்) தேவரீர் சொல்லிய தேவகிரியின் வற லாற்றைக் கேட்க மிகவுஞ் சிறப்புற்றிருக்கின்றது கொன்றமாலையையணிந்த சடாமகுடத்திற் சூடிய கங்காநதியின் துளிகளாகப் பொருந்தும் நந்தாநதி யென்று சொல்லினை அந்த நதி கெடுதியில்லாத அ வ்விடத்தில் வந்த வரலாற்றையுஞ் சொல்லவேண்டு மென்று சௌனகர் கேட்கச் சூதமுனிவர் சொல்ல லுற்றார். எ-று. (உக)

தேவகிரிச் சருக்கம்

முற்றிற்று.

ஆகச்செய்யுள்—287.

உ

சிவமயம்.

# ஒன்பதாவது

# நந்தாநதிச் சருக்கம்.

மாரகாளமதான குயில்கூவிவளரும்
பாரகாவினிடைமாமயில் பயின்றுநடமார்
நீரசாரலுயர்வாவிகள் செறிந்துமருவுந்
தாரகாவனமதாகிய தபோவனமதே.

(இ-ள்.) மன்மதன் காகளமான குயில்கள் கூவிக்கொண்டு திரிகின்ற சோலையினிடத்திற் பெருமை பொருந்திய மயில்கள் பயில்கின்ற நடன நிறைந்த தீர்த்தக்கரைகளும் மலைச்சாரலும்பொருந்தியிருக்கின்ற தாரகாவனமென்றோர் தபோவனமுண்டு. ()

பகர்ந்த தாருவனமீது பயில்வேதமுனிவோர்
அகந்தைகூறுவதுணர்ந்த மலநாயகன்வெகுண்
டுகந்தமாதவனை மோகினியதாகவுரைசெய்
திகழ்ந்தமாதவர்கள்பால் வருதியென்றினிதினே.

(இ-ள்.) சொல்லப்பட்ட அந்தத் தாருகாவனத்தில் நான்கு வேதங்களையுங் கற்றுணர்ந்த முனிவர்கள் அனேகம்பேர்களுண்டு அவர்கள் கருவத்தினால் ஆணவங்கொண்டு சிவபெருமானைக் கேவலமாக எண்ணி யிகழ்ந்தார்கள் அதைத் திருவுளத்தில் உணர்ந்து தனக்குகந்த திருமாலை யழைத்து நீ மோகினி உருவங்கொண்டு நம்மையிகழ்ந்த அவர்களிடம் வருவாயென்று சொல்லி. எ-று. (உ)

கருதுகாமவிசையோதிய கபாலிவடிவாய்ச்
சுருதிமாமுனிவர் மாதருறை துன்னியவர்நாண்
இரியமாகலையிற் கைவளையாவுமொழியப்
பெரிதுகொண்டவர்கள் பின்றொடாநின்றனரோ.

(இ-ள்.) தான் கருதுகின்ற காம இராகங்களைப் பாடிக்கொண்டு கபாலி உருவமெடுத்து அந்த வேத முனிவர்களுடைய பத்தினியிடம் வந்து அவர்கள் வெட்கி மன்மதவிகாரத்தால் மயங்கிக் கைவளைகள் கழன்றுபெரிய ஆசையோடு பின்றொடரும்படி நின்றார். எ-று. (௩)

வந்தமோகினியு மாதவர்மனங்களுருகிச்
சிந்தைவேறுசெயல் வேறுசெயுமோகமுதவ
உந்துமால்கொடு பணிந்தவர் தொடர்ந்துமுளமே
நொந்துமாதர்மயல்கொண்டதுவுநோக்கிமொழிவார்

(இ-ள்.) முன்வந்த திருமாலாகிய மோகினி மாதவர்கள் மனமுருகிச் சிந்தைவேறுசெயல் வேறுஆகும்படியான மோகத்தையுதவ அந்தமயக்கம் தங்கள் பிடர்பிடித்துந்தப் பணிந்தவர் பின்றொடர்ந்ததும் உள்ளநொந்ததும் தங்கள் மாதர்கள் மயல்கொண்டதும் நோக்கி மொழிவார். எ-று. (௪)

இங்குமோகினியுமங்கொரு கபாலியுமெனுப்
பொங்கியே வெகுளிகொண்டழல் புரிந்ததனிடந்
துங்கமானபுலியானை யுழைசூழமழுவோ
டங்கியார்முயலகன் பணியழைத்துவிடலும்

(இ-ள்.) இங்கே நம்மிடத்திலொரு மோகினியும் அங்கே நமமனைவியர்களிடம் ஒரு கபாலியுமாகவந்து மயக்கித் தவத்தையும் கற்பையும் அழித்தார்களென்று கோபித்து ஓர் யாகத்தைச் செய்து அதில் புலியையும் யானையையும் மானையும் மழுவையும் அக்கினி சொரூபமாகிய முயலகனையும் பாம்பையும்அழைத்துவிட்டார்கள். எ-று. (௫)

உழுவையானையையுரித்து மெய்தரித்துழையொடு
மழுவுமங்கையிலிலங்கிட மகிழ்ந்துபிடியாத்

தழல்விழிப் பணிதரித்து முயருளின்மிதியா
முழுநடத்தொழில் புரிந்தனனநாதிமுதல்வன்.

(இ-ள்.) அவர்கள் ஏவிய புலியையும் யானையை
யும் உரித்து இடையிலுஞ் சரீரத்திலுந் தரித்தும்
மானையும் மழுவையும் மகிழ்ந்து கையிற்பிடித்தும்
அக்கினியைச்சிந்துகின்ற கண்களையுடைய பாம்பை
ஆபரணமாகத் தரித்தும் முயலகனைத்தாளில் மிதித்
தும் நடனமாடினார் அநாதிமுதல்வனாகிய பரமசி
வன். எ-று. (சு)

தவருமண்டரொடு மாலயனும்வீறுதரைமீ
தெவருமஞ்சலிசெய்தஞ்ச விமவானருளுமோர்
கவுரிகண்டுளமகிழ்ந்திட நடஞ்செய்கழலோன்
பவுரிகொண்டனன்முன் னெண்டிசைபறந்துசுழல

(இ-ள்.) முனிவருந் தேவருந் திருமாலும் அய
னும் பூமியில் அஞ்சலியஸ்தர்களாகப் பயத்துடன்
அருகில் நிற்கவும் இமோர்ப்பருவதராஜகுமாரியாகி
ய பார்வதிதேவியார் கண்களிகொண்டு மகிழ்ந்து நி
ற்கவும் நடனஞ்செய்கின்ற திருவடியையுடைய பர
மசிவன் எண்டிசையும்பறந்து சுழலும்படி இடம் வ
லமாகச் சுற்றினன். எ-று. (எ)

வேறு.

தளையவிழுஞ் சடைவிரித்துத் தாண்முழுது
ந்தோள்விரவ,இளையபிறை முழுமதிபோலிலக
முயல்கன்முதுகு, வளைவினொடு நெறுநெறெ
ன மலர்க்கையனறி குதிகெனத், துளையவரு
ட் புனற்கங்கைதுளுதுளும் பினலமோத.

(இ-ள்.) சிவபெருமான் ஆனந்த நடனஞ்செய்
கிறபோது கொன்றைமாலையையணிந்த சடையவி
ழ்ந்து தாளினும் தோளினும் விரவவும் பாலசந்திர
ன் பூரணச்சந்திரனைப்போலப்பிரகாசிக்கவும்முயலக

ன் முதுகுவளைந்து நெறுநெநெறென்று நெளியவும் மலர்போன்ற கையிலுள்ள மழுதிகுதிகென்று சொலிக்கவும் கங்கையானது துளும்பி யலைகளை மோதவும். எ-று. (அ)

அன்றுநடம்புரி போதிலலர்கங்கைத்திவலைதனில்
ஒன்றுவில்வவனத் துறையுமுயர் தேவகிரிமீதிற்.
சென்றுவிழவத்திவலை செறிந்தபுனலது பெருகி
மன்றலுடனத்திவலை வானதியாயினதன்றே.

(இ-ள்) பரமசிவனடனஞ் செய்கிறபோது சடாமகுடத்திலிருந்த கங்கையின் துளிகளில் ஒருதுளி தெறித்து வில்வவனத்திலுறைந்திருக்கின்ற உயர்ந்த தேவகிரியில் விழுந்து நீராகப்பெருகி வாசனையுடன் ஆகாயகங்கையாயினது. எ-று. (௯)

நந்தாதுபுனல் வரலான ந்தைநதியெனும்
பெயராம், வந்தேதான் றெரிசித்தோர் பரிசி
த்தோர் வரும்புனலைத், தந்தாகத் துடனுகர்ந்
தோர் தந்தமெய்யிற்றான் றெளித்தோர், மு
ந்தேசெய்வினைப் பஞ்சபாதகங்கண்முதறொ
லைப்பார்.

(இ-ள்) ஒருநாளுங் குறைவில்லாமலதிற்றீர்த்தம் வருகின்றமையால் நந்தாநதியென்னும் பெயருண்டாயிற்று அந்த நதியைவந்து தெரிசித்தோர் பரிசித்தோர் குடித்தோர் சரீரத்திற்றெளித்துக்கொண்டோர் முற்சென்மத்திற் செய்த வினைப்பகுப்பால்வந்த பஞ்சமாபாதகமுதலான பாவங்களையெல்லாந் தொலைப்பார்கள். எ-று. (௰)

அப்புனலின்மூழ்கி மயிராற்றுகின்ற திவ
லையன்றோ, ஒப்புரவிற் பிசாசுவடிவொழித்த
துதான்பரார்ப்பணிக்கு, மெய்ப்படியமூழ்கிடி
னும்வேண்டுமிட்டகாமியங்கள், செப்பமுறக்
கொடுத்தவர்கடமையெலாந் தீர்த்திடுமே.

(இ-ள்) அந்தத்தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணி மயிர் உலர்த்துகிறபோது அந்த மயிரிலுள்ள ஒரு துளி ஒப்புரவாகத் தெறித்தமாத்திரத்தில் ஒருபிரமஹத்தி பிசாசுரூபம்விட்டுத் திவ்விய உருவமானுளன்றோ அவ்வாறே அந்தத்தீர்த்தத்துளிமேலேதெறித்தாலும் ஸ்நாநம்பண்ணினுலும் அவர்களுக்கு இஷ்டகாமியங்களை யளித்துத் தீமைகளைப் போக்கும். எ-று. (யக)

மாகமாதந்தனிலே மருவுதினமுப்பதுந்தான், ஏகமாகிய சித்தத்துடனிந்தப்புனன்மூழ்கில், தேகமனேகம் பவமுன்னெடுத் ததனிற்செய்து நின்று, போகொண்ணுப் பாவமெல்லாம போக்கி முத்திதனைச் சேர்வார்.

(இ-ள்) மாசிமாதத்திற் பொருந்திய முப்பதுநாளும் ஏகசித்தத்துடன் இந்நதியில் ஸ்நானம்பண்ணினுல் முற்பிறப்பில் எடுத்த சரீரங்களாற் செய்துநின்ற போகாத பாவங்க ளெல்லாவற்றையும் போக்கி மோக்ஷமடைவார்கள். எ-று. (யஉ)

திங்களணிசங்கரன்றன் றிருமுடியின்மீதுறையுங், கங்கையினற் கொழுந்துமிஞ்சிக் கனிதிவலை யாதலினுல், அங்கதிலு மதிகமதாமப்புனன் மூழ்கினரொவர்க்கும், தங்குவினைப் பவம்போதறப் பாதுசத்தியமே.

(இ-ன்) சந்திரசூடனுகிய பரமசிவன் சடாமகுடத்தின்மேற் றங்கிய கங்கைநதியின் கொழுந்து மிகுந்து கனிந்த துளியாதலினுல் அக்கங்கைநதியினுஞ் சிலாக்கியமாகிய அந்தத்தீர்த்தத்தில் முழுகிய யாவர்க்குந் தங்கிய தீவினைகளாகிய பாவங்களெல்லாம் நாசமடைவது தப்பாது இது சத்தியவசனமாகும். எ-று. (யங)

பகிரதியின் றிவலையது பட்டதலைவ் விடமும், மகிதலத்தின் மிகவெழுந்து வளர்ந்த வில்வத்தருக்களெல்லாம், மிகுதிபெறு சிவரூபமென விளங்கித் தோன்றுதலால், அகமகிழ்ந்து ரோமசருமனந்த முனிவருமதனில்.

(இ-ள்) கங்கைத்துளி தெறித்தபடியால் அந்தப்பூமி பூலோகத்துக்குள் சிலாக்கியமானது அதில் வளர்ந்த வில்வவிருக்ஷங்களெல்லா மிகவும் பேறு பெற்று சிவரூபமாக விளங்கித் தோன்றும் ஆகையால் மனமகிழ்ந்து உரோமச முனிவர் முதலாக அனேக முனிவர்கள் அந்தவனத்தில். எ-று. (௧௩)

எண்ணுபலகால முதலின்றளவு மதிலிருந்து, நண்ணுதவ மிகப்புரிந்து நுணுகுவினைபபவமுடித்தார், புண்ணியவில் வாரணியம் பொருந்தியோர் கணமுறைந்தால், மண்ணவரும்விண்ணவரா மருவிமிகக் கதிசேர்வார்.

(இ-ள்) எண்ணுதற்குரிய பலகாலமுதல் இந்நாள்வரையில் அதிலிருந்து செய்தற்கரிய தவங்களைச் செய்து தங்கள் செனனதொடர் பையறுத்தார்கள் அந்த வில்வாரணியத்தில் ஒருகணந்தங்கியிருந்தால் மனிதர்களுந் தேவர்களாகிக் கதியை யடைவார்கள். எ-று. (௧௫)

விஞ்சுவில்வவனமாகி மேதினியோர்வினைதீர்க்கும், அஞ்சுகூப்பிடு தூரமாகுமது தனிவினிதா, நஞ்சணிவார் சடைக்கங்கை நந்ததநதி யதைச்சூழ்ந்து, பஞ்சமாபாதகங்கள் பற்றறுக்கு மனைவோர்க்கும்.

(இ-ள்) மிகுந்த வில்வவனமாகி உலகத்தார்கள் வினைகளைத் தீர்க்கும் அந்தவனம் ஐந்து கூப்பிடுதூரம் விசாலமாகும் அதில் ஸ்ரீகண்டனாகிய சிவபெருமான் சடையினின்றும் வரப்பட்ட கங்கையே நந்

தாநதியாக வந்து அந்தவில்வவனத்தைச் சூழ்ந்து கொண்டு ஆன்மகோடிகள் வினைகளைப் பற்றறுக்கும். எ-று. (கசா)

என்னவே சூதமுனி யியம்புமொழி தனைக் கேளா, மன்னுசவுனகன்மகிழ்ந்து மணிக்கோயின் முன்றீர்த்தம், முன்னியுறைவதின்மகிமை மொழிந்திடுக வெனவுரைப்ப, நன்னெறிசேர் சூதனெனு ஞானமுனியது பகர்வான்.

(இ-ள்) இந்தப்பிரகாரஞ் சூதமுனிவர் சொல்லியதைக்கேட்டு நிலைபெற்ற சௌனகமுனிவர் மனமகிழ்ந்து சுவாமி அழகிய திருக்கோயிலின் எதிராகப் பிரமதீர்த்தமிருக்கின்ற விசேடத்தையுஞ் சொல்லியருளவேண்டுமென்று கேட்கச் சூதனென்னும் ஞானமுனிவர் சொல்லத்தொடங்கினர். எ-று()

நந்தாநதிச்சருக்கம்

முற்றிற்று.

ஆகச்செய்யுள்—304.

உ

சிவமயம்

## பத்தாவது

# தீர்த்தச்சருக்கம்.

துய்யமாமணிச் சோதியார் சந்நிதிக்கெதிரே
மெய்யதாகிய பிரமதீர்த்தமதெனவேதன்
செய்யமூன்றரைக்கோடி தீர்த்தங்களுஞ்சேர
வையமீதிலா வாகனஞ்செய்து வைத்தனனே.

(இ-ள்) துய்யமாமணீசுரர் சந்நிதிக் கெதிராக மெய்யாகிய பிரமதேவன் தன்பெயரினால் பிரமதீர்த்தமென்று ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில் உலகத்தில் உண்டாகிய மூன்றரைக்கோடி தீர்த்தங்களையும ஆவாகனம் பண்ணிவைத்தான். எ-று. (௧)

அத்திறத்தினாற் புழுக்களும் பாசியுமன்றி
மெத்துதப்பனை யழுக்குடன் மேவுதலிலதாய்க்
சுத்தநின்மலச் சலமதுவாகியே தோன்றும்
உத்தமப்புனன்மகிமையா ரறிந்துணர்ந்துரைப்பார்.

(இ-ள்) அந்த மகிமையினால் அதிற் பூச்சி புழு பாசி தவளை அழுக்குமுதலானதும் பொருந்தாமல் நின்மலதீர்த்தமாகத் தோன்றியிருக்கும் அந்த உத்தமதீர்த்தத்தின் மகிமையை யாவர் அறிந்துசொல்வார். எ-று. (௨)

அப்புனறன்னைத் தெரிசிக்கப் பரிசிக்கவள்ளி
மெய்யபுறத்தினிற் றெளித்திடவிநாசமாம்பாவம்[?]
செப்பின்மூழ்கிடிற் செனமசென்மந்தோறுஞ்செய்
ஒப்பில்பஞ்சமா பாதகப் பாவங்களொழியும்.

(இ-ள்) அந்தத்தீர்த்தத்தைக் கண்ணினாற் றெரிசித்தாலும் பரிசித்தாலும் கையினால் அள்ளிச் சரீரத்திற் றெளித்துக்கொண்டாலும பாவங்களெல்லா நாசமாகும் சொல்லுமிடத்து அதில் ஸ்நானம்பண்ணினால் செனமசென்மந்தோறுஞ் செய்த ஒப்பில்லாத பஞ்சமாபாதகங்களும் விட்டுநீங்கும். எ-று

பெருகுபூரணையு வாவொடு திங்களின்பிறப்பிற்
பருகுசந்திர சூரியகிரணங்கள் பயில
வருதினம்வி திபாதங்கள் மருவிய தினத்திற்
கருதிமூழ்கிடுமவர் குலமரபினிற் கலந்தே.

(இ-ள்) பெருகிய பௌரணையிலும் அமாவாசையிலும் வரப்பட்ட மாதப்பிறப்பில் வருகிற சந்

திரசூரியகிரணங்களிலும் விதிபாதங்களிலும் நினை
த்து அந்தத்தீர்த்தத்தில் முழுகும் அவர்கள் குலத்
தினிற் கலந்து. எ-று. (௪)

நரகிலவீழ்ந்திடு மவரெலா நற்கதியடைந்தே
விரவிநற் கயிலாயத்தின் மேவிவாழ்ந்திருப்பார்
திரமதாஞ்சமாதேவிதன் னருளினாற் சிறந்தே
பரவிடுஞ்சமாதீர்த்தத் தின்மகிமையைப் பகர்வாம்.

(இ-ள்) நரகத்தில் விழுந்தவர்களெல்லா நற்கதி
யை யடைந்து கைலாயத்தில் வாழ்ந்திருப்பார்கள்
உறுதியான சமாபதியா ரருளினாற் சிறந்து விளங்
கிடும் சமாதீர்த்தத்தின் மகிமையை யினிச்சொல்
வாம். எ-று. (௫)

சமையினில்வந்த தாதலாலப் புனறன்னில்
அமைவிலாப்பெருங் குரோதனுமவ குணனாகி
இமையினேரமுந் தூடணனாகியேயிசையாத்
திமையனாயினு முழ்கிடினற் குணஞ்சேரும்.

(இ-ள்) சமையினால்வந்ததாதலால் அந்தத்தீர்
த்தத்தில் அமைவில்லாத பெருங்குரோதனும் அவ
குணனும் இமைநேரமாயினும் ஒழிவில்லாத பிரதூ
ஷணனும் இசைவில்லாத கெட்டகுணமுடையவ
னும் ஆகிய ஒருவன் மூழ்கினால் உடனே நற்குண
த்தை யடைவான், எ-று. (௬)

ஞானசிந்தையுஞ் சாந்தமாங்குணங்களு நண்ணி
ஊனமின்றியே கல்வியுஞ்செல்வமு மோங்கும்
ஈனமாகிய பஞ்சபாதகங்கள் விட்டேகும்
மானதத்தினா னினைந்தகாமிய மெல்லாமருவும்.

(இ-ள்) ஞானசிந்தையும் சாந்தகுணமும்அடை
வதோடு கெடுதியில்லாத கல்வியும் செல்வமும் அ
திகரிக்கும் அவையன்றி ஈனத்துவத்தையுடைய ப
ஞ்சமா பாதகங்கள் நீங்குவதுடன் மனதால் நினைத்

த கருமங்களு முற்றுப்பெறும். எ-று. (எ)

வேந்தன்கோபமாய் வேறிணிச்செயலில்லை
யென்னிற், றேய்ந்துதோய்ந்ததிற் சமாபதி
தேவியைத் தொழுதாற், சாந்தனாகியேயவ
ன் வெகு சந்துட்டனாகி, வாய்ந்த நன்மையும்
வரிசையு முதவுவள் மகிழ்ந்தே’

(இ-ள்) அரசன் கோபமாக வேறொரு கெதியு மில்லாதவனானால் இந்தச்சமாபதி தீர்த்தத்தில் அடுத்தடுத்து முழுகிச் சமாபதியம்மனைத் தெரிசித்து வணங்கினால் அந்த அரசன் சாந்தகுணனாகிப் பிரிய வசனத்துடனே மகிழ்ந்து பொருந்திய நன்மையையுடைய செல்வங்களைத் தந்தருளுவன். எ-று.(

தலைவன்சேர்விலா மடந்தையரந்நதி மூழ்கி
மலைமடந்தையைச் சுக்கிரவாரநாடன்னில்
நிலைபெறும்படியரிச்சனைசெய்து நேர்ந்திறைஞ்சின்
முலையின்மேவியே கணவனுமோக முற்றணைவான்.

(இ-ள்) நாயகன்சேராத பெண்கள் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானமபண்ணி மலைமடந்தையாகிய சமாபதியம்மனைச் சுக்கிரவாரத்தில் நிலைபெறும் அரிச்சனைசெய்து மனப்பொருத்தமாக வணங்கினால் கணவன்றானேவந்து முலைகுழையப் புல்லுவான். எ-று.

முழுகியப்புனன் மூன்றுகையள்ளி யுட்கொண்டு
வழுவிலாதொரு மண்டலமுறைதனை வணங்கில்
தழுவுமெவ்விடக் கடிகளும் வியாதியுந் தவிர்ந்தே
விழுமிதாகிய மேனியாய் விளங்குவரினிதே.

(இ-ள்) அந்தநதியில் ஸ்நானஞ்செய்து மூன்று கைச்சலம் அள்ளியுட்கொண்டு வழுவுதலில்லாமல் ஒருமண்டலஞ் சமாபதியம்மனை வணங்கினால் சரீரத்தைத் தழுவிய கொடியவிஷக்கடிகளும் வியாதியு நீங்கி நல்ல சரீரத்தைப் பெற்று விளங்குவார். எ-று

யாவர்கூறுவர் சமாபதியிரு விழிக்கருணை
மேவியேயரு ளுர்த்தத்தின் மகிமையின் விதத்தைத்
தாவுதேவமால் வரையின்மீதுறை தருசலந்தான்
தேவகாமகா தீர்த்தமாயுறைவது சிறந்தே.

(இ-ள்) சமாபதியம்மன் கடாக்ஷ வீக்ஷண்ணியம் பெற்றுக் கருணைசெய்கின்ற இந்தத்தீர்த்தத்தின் மகிமையை யாவர் சொல்லவல்லார் அதுநிற்கத்தேவகிரியின்மேற் பொருந்திய தீர்த்தத்தின் மகிமையைச் சொல்லுகிறோம் அந்தத்தேவகிரியின்மேல் தேவகாதீர்த்தமென்றுசிறந்துறைவதொன்றுண்டு.

உரைத்த தேவமால் வரையின்மீது மாபதியருளால்
விரைத்தடம்புனற் தீர்த்தமுண்டாயது மேனாள்
நிரைத்தபூமுலைச் சமாபதி தன்னுடனிமலன்
றிரைப்புனல் குடைந்தாடினனதிற் செலக்கிரிடை.

(இ-ள்) முன்சொல்லப்பட்ட தேவகிரியின்மேல் பரமசிவன் அருளால் மணம்வீசுகின்ற விசாலமாகிய நன்னீர்நிறைந்ததீர்த்தமுண்டாயிற்று அதில்முன்னாளில் பூமாலைநிறைந்த தனபாரங்களையுடைய சமாபதியாரோடு பரமசிவன் சலக்கிரீடைசெய்து விளையாடினன். எ-று. (௧௨)

புண்ணியப்படிவம்பெறு புரிகுழலுமையாள்
நண்ணுமேனியி லரிசனங் களபகஸ்தூரி
பண்ணுகுங்குமந் தோய்தலாற் பரிமளமாகி
வண்ணமான குங்குமவடிவாகியே வயங்கும்.

(இ-ள்) புண்ணியவடிவத்தைப் பெற்ற கட்டப்பட்ட கூந்தலையுடைய சமாபதியம்மன் பொருந்திய திருமேனியிற் றோய்ந்த மஞ்சட்பொடி சந்தனம் கஸ்தூரி குங்குமம் முதலானதுங் கலந்திருப்பதால் அந்தத்தீர்த்தம் பரிமளவாசத்தை யுடைத்தாகி அழகிய குங்குமவண்ணமாகப் பிரகாசிக்கும். எ-று.()

அனையதண்புனன் மூழ்கியேயந்த மண்ணதனை
யினியதேகத்திற் புண்டரமாக விடாமற்
புனையுநெற்றிமேற் றிலகமதென்னவே புனைந்தால்
அனையதேறுதற் கண்ணனவடைவர் சாரூபம்.

(இ-ள்) அத்தன்மையான கண்ணிய தீர்த்தத்தி ல் முழுகி அந்தத்திருமண்ணை யெடுத்து நல்லதேக த்தில் புண்டரமாகத் தரித்துக்கொள்ளாமல் நெற் றியிற் பொட்டாக வணிந்துகொண்டால் அதுவே நெற்றிக்கண்ணனச்சாரூப நதை யடைவார்கள்.எ-று

ஆயுளுள்ள நாடனிலொரு தினமேனும்
ஏயவிப்படிச் செய்திடவிட்ட காமியங்கள்
மேயசெல்வங்கள் மேவியே மேதினிமீதிற்
காயம்விட்டிடும் போதினிற்பெறுவர் நற்கதியே.

(இ.ள்) யாவராயினுந்தன் னுயுளுக்குள் ஒருதி னம் மேற்சொல்லியவண்ணஞ் செய்வாராயின் இ ஷ்டகாமியங்களோடு மிக்க செல்வத்தை யடைந்தி ருந்து சரீரத்தைவிட்டு உயிர்நீங்கும்பொழுது நற்க தியை யடைவார்கள். எ-று. (௧௫)

அந்தநீர்தனையொரு பணமளவுதான் பருகிற்
சிந்தைதான் மகிழ்ந்தே சிரமீதினிற் றெளிக்கில்
வந்துதன்னனை வயிற்றினிற் பிறந்திடார் மண்மேல்
முந்துபாவங்க ளகற்றியே முத்தியையடைவார்.

(இ-ள்) அந்தத்தீர்த்தத்தின் புனலை ஒருபணம ளவு பருகினாலும் மனமகிழ்ந்து சிரமேற தெளித் துக் கொண்டாலும் தாய்வயிற்றிற் பிறவார்கள் அ ன்றியும் இந்த உலகத்தில் முன்செய்த பாவங்களை எலலா நீக்கி முத்தியை யடைவார்கள். எ-றி.(௧௬)

ஆறுதிங்களினளவதிற் காலையின்மூழ்கி
வீறுமோர் கைநீர்குடித்திடில் விருப்புடன்வாணி

ஏறிநாவின் மீதிருந்தெந்தக் குலத்தவரேனுங்
கூறுபாடைக ளெவற்றினுங் கவிதை கூறிடுவார்,

(இ-ள்) எந்தக்குலத்திற் பிறந்தவராயினும் அந்தத்தீர்த்தத்தில் ஆறுமாதம் உதயகாலத்தில் முழுகி ஒருகைச் சலத்தைக் குடித்துவருவாராயில் அவர்கள நாவில் சரஸ்வதி குடியிருக்கச் சகல பாஷைகளிலுங் கவிசொல்வார்கள். எ-று. (௧௭)

மதிதிதியின் துலாமாதத்திற் பூர்வபக்கத்துத்
துதித்திடுந் திநவமி யன்றுதய காலையிலே
நதிக்குள்ளீரிய நந்தைதமாதியின்முன் முழ்கி
விதித்ததேவகா தீர்த்தம்பின் முழ்கியே விரும்பி.

(இ-ள்) யாவராயினுங் கருதப்பட்ட துலாமாதம் பூர்வபக்ஷத்து நவமிதிதியில உதயகாலத்தில் நதிக்குள் மேன்மையாகிய நந்தாநதியில் முதல் முழுகிப்பின் தேவகாதீர்த்தத்தில் முழுகிவிருப்புடன். ()

சேர்ந்தமண்ணை நெற்றியிற்றிலதமாத்திருத்தி
வாய்ந்த தேவமால்வரை பிரதக்கணம்வந்தே த
னுய்ந்தபோசனம் விப்பிரற்கியன்றவா றளித்து
மாந்தர்சேர்ந்த பேருடன் வனபோசனமருந்தி.

(இ-ள்) தேவகாதீர்த்தத்திற் சேர்ந்து மண்ணையெடுத்து நெற்றியிற் றிலதமாகத் தரித்துக்கொண்டு தேவகிரியைப் பிரதக்ஷிணமாக வந்து அந்தவனத்தில் தன்னாலியன்றவளவு பிராமணபோஜனஞ் செய்வித்துப்பின் கூடிய சனங்களுடன் வனபோஜனமுண்டு. எ-று. (௧௯)

அந்திமாலை நேரந்தனிற் சமாபதிதேவிக்
கந்தமா வபிடேகஞ்செய் தரிச்சனைபுரிந்து
சந்தனதிகுங்குமத்துடன் சண்பகமாலை
கொந்தலாததொடை சாற்றி நிவேதனங்கொடுத்து

(இ-ள்) வனபோசனமுண்டு பின்வந்து மாலை

நோக்கில் சமாபதிதேவியாருக்குஅழகாக அபிஷேகஞ்செய்தபின் அர்ச்சனைசெய்து சந்தனமுதலாகிய குங்குமத்துடன் சண்பகமாலையும் கொந்நாக விரித்த மற்ற மாலைகளுஞ் சாத்தி நிவேதனஞ்செய்து. எ-று. (௨௰)

பாயசத்துடன் பூபமு நிவேதனம்பண்ணி
ஆயதூபதீபத்துட னாடல்பாடலுடன்
நேயமாகவே செயவடிபணிந்திட நிலைசேர்
சாயலைத்தரித்துடன் மிகுந் தனாட்டியராவார்.

(இ-ள்) பாயசமும் அப்பவர்க்கங்களும் நிவேதனமபண்ணிய பொருந்திய தூபதீபமும் ஆடலும் பாடலுஞ்செய்து நல்ல அன்புடன் அம்மையின் திருவடியில் வணங்கினால் நிலைமை சேர்ந்த மேன்மையும் அழகும்பெற்று மிகுந்த திரவியசம்பன்னராவார்கள். எ-று. (௨௧)

தனம்படைத்திடச் செயதிடிற் குபேரன்
போற்றமைப்பார், நினைந்து பூமியைச் செய்
திடினேமிவேந்தாவார், சினந்தவன்றனோடெ
திர்த்திடுஞ் செருநர்களெல்லாம், இனம்புற
படிப்பனியெனவேகி மாய்ந்திடுவார்.

(இ-ள்) திரவியங்களை விரும்பிப் பூசைபண்ணினால் குபேரனைப்போலாவார்கள் பூமியை நினைத்துப் பூசை பண்ணினால் பூமண்டலத்தை யாளும் அரசராவார்கள் பூசைபண்ணுகின்ற பேர்களைப் பகைத்து எதிர்க்கின்றவர்கள் சூரியனைக்கண்ட பனிபோல மாய்ந்துபோவார்கள். எ-று. (௨௨)

பண்ணுபாவங்களாகிய மலையெனும்பஞ்சை
எண்ணுந்தேவகாசல நெருப்பாகவே யெரிக்கும்
புண்ணியஞ்செய்தோர்க்கெய்துமப்புனலிசைந்தாடி
மண்ணின்மேன்மிகவாழ்ந்துபின்கைலைமன்னுவரால்

(இ-ள்) பண்ணப்பட்ட பாவங்களாகிய மலையெ ன்கின்ற பஞ்சை எண்ணத்தக்க தேவகா தீர்த்தமாகிய நெருப்பு வீழ்ந்து எரித்துவிடும் புண்ணியஞ் செய்தவர்களுக்குக் கிடைக்கின்ற அந்தத்தீர்த்தத்தில் இசைந்து ஸ்நானம்பண்ணினால் உலகத்தில் மிக்க செல்வத்துடன் வாழ்ந்து பின் கைலாயமடைவார்கள். எ-று. (உ௩)

மகஞ்செயாதவிப் பிரர்தின மூழ்கிமண்டரிக்கின்
மிகுந்தமாமக விருடியாஞ் செய்பலன்மேவும்
உகந்து தன்னுடனுகாவாகி மூழ்கினுமுன்
பகர்ந்திடும்பலன் கிடைத்திடும்பாவம் பற்றறுமால்.

(இ-ள்) யாகங்களைச்செய்யாத பிராமணர் அதில் முழுகி மண்ணைத்தரித்தால் மிக்க யாகங்களைச் செய்த பலனைப்பெறுவார்கள் ஒருகடத்தில் அந்தத் தீர்த்தத்தை முகந்துகொண்டு வந்து ஸ்நானம்பண்ணினும். மேற்சொல்லிய பலனைப்பெறுவார்கள் அவர்கள் பாவங்களும் பற்றற்றுப் பறக்கும். எ-று.

எந்தத்தேசத்தி லெப்புனறன்னின்மூழ்கிடினும்
சிந்தையாரவே தேவகாதீர்த்தத்தை நினைக்கின் [ய
முந்தயாம்சொன்னபலனெலாம்பெறுகுவர் முடிவா
அந்தமானபோதிலுஞ் சிவலோகமே யடைவார்.

(இ-ள்.) எத்தேசத்தில் எத்தீர்த்தத்திலாவதுஸ்நானம்பண்ணும்போது தேவகாதீர்த்தத்தை நினைத்து ஸ்நானம்பண்ணினால் முன் யாம் சொன்ன பலனை யெல்லாம் பெறுவார்கள் அன்றியுமவர்கள் அந்தியத்திற் சிவலோகமடைவார்கள். எ-று. (உ௫)

விலங்குடன்புலியூர் வனபறப்பனவெல்லாங்
கலங்கியப்புனல் வீழ்கினுமிறக்கினுங்கதியின்
நலம்பெறுங் கயிலாயததில் வாசமாநண்ணுங் [மோ
துலங்கி யிப்படிப் பெற்ற துண்டது சொலக்கேண்

(இ-ள்.) மிருகங்களும் பூமியில் ஊர்வனவும் பறப்பனவும் ஆகிய எல்லாம் மனங்கலங்கியத் தீர்த்தத்தில் தவறிவீழ்ந்தாலும் இறந்தாலும் முத்திப்புதவியாகிய கைலாயத்தில் வாசமாகப் பொருந்தும் பிரகாசமாக இப்படி யோர்கதையுண்டு அதைச்சொல்லுகிறோம் கேட்பாயாக. எ-று. (உசு)

பொன்னிமாநதிவடகரைப் பூமியிற்பொருந்தும்
கன்னியாகிரியென்னு மாநகரிகாவலவன்
பன்னுவேடர்தங்குலத்துளான் சபரனென்பாரோர்
மன்னன்வேட்டைமார்க்கத்தினி லெய்தினன் வனத்
[தில்.

(இ-ள்.) காவேரிக்கு வடகரையிற் பொருந்திய கன்னியாகிரி யென்றொரு நகருண்டு அந்த நகரத்திற்கு அதிபதியாக உள்ளவனும் வேடர்குலத்திற் பிறந்தவனும் ஆகியசபரனென்பவன் வேட்டைமார்க்கமாக வனத்துக்கு வந்தான். எ-று. (உஎ)

சுற்றும் வேடர்கணாய்களுந் தொடுத்திடும்வலையும்
பற்றியேவரப்படைத்தலைவர்களபுடைசூழ [டத்தி
வெற்றிசேர் வுறும்பரியின் மேற்கொண்டு முன்ன
எற்றியேவிருகங்களை யெறிந்து வந்தனனே.

(இ-ள்) வேடர்கள் நாய்களையும் பின்னப்பட்ட வலைகளையும் பற்றிக்கொண்டு வரவும் படைத்தலைவர்கள் பக்கத்திற் சூழ்ந்து வரவும் வெற்றிமிகுந்த குதிரையின்மேல் அவ்வேடராஜன் ஏறி முன்னாக நடத்தி மிருகங்களை வெட்டியும் எறிந்தும் வந்தான்(

பஞ்சமாநதிக்குத்தர வனத்தினிற் பரந்து
விஞ்சுபச்சிம திசைதனின் மேவியேவளைந்து
குஞ்சரத்தொடு மரைகளு மான்களுங்கொடிய
வஞ்சகப்புலி கரடியுங் கோலமும் வதைத்தான்,

(இ-ள.) பஞ்சமாநதிக்கு வடபாரிசமான வன

மெங்கும் பரவி மேற்குத்திசையில் வளைந்து யானை களையும் மனைகளையும் மான்களையும் கொடிய புலிக ளையும் காடிகளையும் பன்றிகளையும் வளைந்தான். ()

அனையகாலையி லனைவரும் வெருங்கௌவதிர்ந்து
முனையதாகிய கோட்டினன் முழுநிலங்கிறி
வனையவிக்கியே வளைந்திடும் வலையெலாம் பீறித்
தனியனாகியபன்றியொன் றெதிர்ந்தது தருக்கால்.

(இ-ள்.) அப்படி வேட்டையாடிக்கொண்டு வ ரும்போது தனியனாகிய பன்றி ஒன்று யாவரும் ப யப்படும்படி சத்தித்து முனையாகிய கொம்பினால் நிலத்தைக் கிறிச் சுற்றிலும் கட்டிய வலையைக் கிழி த்து தருக்கால எதிர்த்தது. (௩௰)

வேறு.

நீலகிரிக்குநிகர்த்திடு மெய்மயிர்நிமிரவெதிர்
த்துவரும், வாலமதிப்பிள வொத்தமருப் பு
டைவாய்கொ டெதிர்த்துவருங், காலனெனக்
கொலைசுற்றி வளைத்திடுகானவரைச் சிதறுங்,
கோலமெனக் கருமேகமெனப் பொருகுஞ்சர
மாமெனவே.

(இ-ள்.) அந்தப் பன்றியானது நீலகிரிக்குச் ச மானமான சரீரத்திற்பொருந்திய மயிர்களைச் சிதறி ச் சிலிர்த்துக்கொண்டு நிமிர்ந்து எதிர்த்தும் மூன்று ம்பிறையைப்போல் வளைந்த கொம்புகளை யுடைய வாயைப் பிளந்துகொண்டு சத்தித்தும் இயமனைப் போலக் கொலைபுரிகின்ற வேடர்களைச்சிதறியும் எதி ர்த்துத் தாக்குகின்ற கரிய யானையைப்போலச் சத் தமிட்டும் வரும். எ-று, (௩௧)

மோதியுளைத்திடு நாய்களின் மொய்த்தலை
மூளைகளைச் சிதறும், வதியோடுற்றிடு வீரர்வ
யிற்றினுளீரு முழக்கியெழும், கோதியுடற்க

ளைமீது நிணத்தொடு குருதிகளைப்பருகும், காறியதட்டி முன்னேவருவோ ருயிர்கடலின் முழக்கெனவே.

(இ-ள்.) உளைந்துச் சத்திக்கின்ற நாய்களின்நெருங்கிய தலைகளை மோதிப் பாய்ந்து மூளைகளைச் சிதறும் வாள்களைக் கையிற்பிடித்து நிற்கின்ற வேட்டைக்காரருடைய வயிற்றைக் கிழித்துப் பெருஞ்சத்தமிட்டும் உடல்களைக் கோதிப் பிளந்து தசையுடன் ரத்தங்களைக் குடிக்கும் கோபித்து அதட்டி முன்னே வரப்பட்டவர்களுடைய உயிரை வாங்கிச் சமுத்திரம்போல ஆரவாரிக்கும். எ-று. (௯௨)

பாரகமெழுங்குதி கொள்ளுநிலத்திடை படியு மெழுந்துதறும், வாரகமிதன்றிது மதகரியாமென வந்து வளைந்திடுமால், கிராதர் நடுங்கினர் வாடின ரோடினர் கிளைதருநாய்களொடுந், தராதலமீது மடிந்தனர் வேல்படர்ந்து முறிந்திடவே.

(இ-ள்) பூமியிற்றாளியெழும்படி குதிக்கும் எழும் மயிர்களை யுதறும் பார்த்தவர்கள் இது பன்றியன்று யானையென்றுசொல்லும்படிவந்து வளைத்திடுங் கிராதர் நடுங்கிவாடி யோடிப் பிடித்த ஆயுதங்கள் முறிந்துநாய்களோடு மடிந்தனர். எ-று. (௯௩)

சேனைமடிந்தது கண்டு வெகுண்டு சினந்துடனேசபரன், சோனையெனும்படி யம்புபொழிந்து தொடர்ந்திடலுங் கிரிபோல், ஆனையெனும்படி நின்றிடுபன்றியு மடவியிலுட்புகுத, வானளவுங் குதிகொண்டு வெகுண்டு வனத்திடை கூடினவே.

(இ-ள்.) சேனைகளெல்லா மடிந்ததைச் சபரன் கண்டு அதிகக் கோபத்துடன்சோனை மாரியைப்போலப் பாணங்களை யேவிப் பின்றொடர்ந்தமாத்திரத்தி

ல் மலையையொத்த யானைபோல் நின்ற பன்றி ஆகாசமளவுந் தாவிக் குதித்துக் கோபங்கொண்டு வனத்தினுட் புகுந்தது. எ-று. (௩௪)

மல்வயமானபுயச் சபரன்கடுமாவைவினைந்துவிடக்,கொல்வனெனக் கருதிக்கிரிபோல்வருகோலமு மோடிமிகச், சொல்வருமுத்தம முனிவர்கணத்தொடு சுருதிமுழங்கியெழும், வில்வவனத்திடை வந்தது சபரனும் விசைகொடுபின்வரவே.

(இ-ள்.) வலிமையும் வெற்றியும வாய்ந்த புயத்தையுடைய சபரனானவன் கடியவேகத்தையுடைய குதிரையிலேறிக்கொண்டு மனவேகத்தைப்போல் பின்றொடரக் கொல்வேனென்று கருதி வந்த பன்றி யோடிச் சொல்வதற் கருமையாகிய முனிவர் கூட்டத்துடன் சேர்ந்துகொண்டு வேதவொலியிடையறுது முழங்குகின்ற வில்வவனத்துட் புகுந்தது சபரனு மவ்வனத்துட் சென்றான். எ-று. (௩௫)

திரண்டிடு வில்வவனத்திடை சூழ்தருதிசைதிசை யெங்கணுமே, இரண்டடனே யொருகாதமதோடியினைத் துவருங்கருமா, வெருண்டுயர் தேவகிரிக்கிடையேதி விளங்கிய தீர்த்தமதாம், புரண்டதிரைப் புனல்கண்டு விழுந்து புகுந்ததின் மூழ்கியதே.

(இ-ள்) அந்தபன்றியானது திரண்டு கூட்டமாகிய வில்வவனத்தினுட்புகுந்து திசைதிசைகள் தோறும் இரண்டுமூன்று காதமோடி யிளைத்துப்பயந்து உயர்ந்த தேவகிரிக்கிடையே விளங்கிய தேவகாதீர்த்தத்தின் திரைபுனலில் விழுந்து முழுகியது. எ-று. (௩௬)

## வேறு.

தாரைபற்றியே யந்தச்சபானும்
தீரமுற்றிடு தேவகிரிக்கிடை
ஈரமோங்குஞ் சலங்கண்டிருகையால்
வாரிமாந்தினன் மாலிழந்தானரோ

(இ-ள்) வராகஞ் சென்ற வழியேதொடர்ந்துவந்த சபரன் பலமுடைய தேவகிரிக்கிடையில் குளிர்ச்சிபொருந்திய சலத்தைக்கண்டு இருகையாலும் வாரியுண்டு மயக்கநீங்கினன். எ-று. (கூஎ)

பரியுநீருணப் பண்ணியிருந்தனன்
கரியபன்றியித னுட்கரந்ததென்
றரியமன்னனவன்றன் கையாடலர்த்
தரியதோள்கண்ட பின் சற்றறிந்ததால்.

(இ-ள்) வேடராஜன் தானேறிவந்த குதிரையும் நீருண்ணச்செய்து கரிய பன்றியானது இந்நதிக்குள் மறைந்ததென்று தன்கையால் அந்தடாகத்துள் தடவிப்பன்றியின் பிடரைக்கண்டான் பன்றியும் அரசனறிந்ததைக் கொஞ்சம்தெரிந்தது. எ-று. (கூஅ)

அறிந்துதண்புனலாழத்தின் மூழ்கியே
யுறைந்துசாமமிரண்டதி னுள்ளுறக்
குறைந்து சீவன்குடித்த புனலினல்
இறந்துநீங்கின வின்னுயிர்தானுமே.

(இ-ள்) பன்றியானது குளிர்ந்த புனலில் ஆழமுழுகி இரண்டுசாமம் தங்கியதால் சலத்தை மிகவுங்குடித்து உயிர்மாய்ந்தது. எ-று. (கூகூ)

அந்தவேலையானஞ்செழுத்தினை
வந்துகேழல் வலச்செவியிற் சொல
அந்தரத்திடை துந்துமியார்த்தெழ
விந்துசெம்பொன் விமானத்திலேறியே.

(இ-ள்) அந்தப்பன்றி உயிர்விடுஞ்சமயத்தில் ப

ரமசிவன் வந்து வலச்செவியில் பஞ்சாக்ஷரமந்திரத்
தை உபதேசஞ்செய்யத் தக்ஷணமே தேவதுந்துபி
முழங்க நிறைந்த செம்பொன் விமானத்தில் அப்ப
ன்றியானது ஏறி. எ-று. (௪௰)

கயிலைமேவிக் கதியையடைந்த நற்
சயிலநீங்கிச் சபரனுமாவுமாய்
எயினரோத்தச் சிவகதியேறினன்
பயிலுமந்தப் புனலைப்பருகலால்.

(இ-ள்) கயிலையை மேவிச் சிவகதியை யடைந்தது அதன்பின் சபரன் தேவகிரியை நீங்கித்தன்னகரடைந்து சுற்றத்தாரோடு வாழ்ந்திருந்து அந்தத்தில் தேவகாதீர்த்தத்தைக் குடித்த புண்ணியத்தால் வேடர்களைத்தக் குதிரையோடு சிவகதியை யடைந்தான். எ-று. (௪௧)

பன்றிதன்பயந்தால் வீழ்ந்திறந்ததில்
ஒன்றுநற்கதி யுற்றதென்றாலதிற்
சென்றுமுழுகினர் சேர்ந்திடும் பேறுதான்
றுனறியாவர் தொகுத்துரைப்பார்களே.

(இ-ள்) பன்றியானது பயத்தால் அந்தத்தீர்த்தத்தில்வீழ்ந்திறந்து பொருந்திய நற்கதியை யடைந்ததென்றால், அறிவுடன் அதையடைந்து முழுகினவர் அடையும் பலனைச் சூழ்ந்து யாவர்சொல்லவல்லார்கள். எ-று. (௪௨)

இந்தவாறெனச் சூதனியம்பலுஞ்
சிந்தைதானுந் தெளிந்துசௌனகன்
எந்தைநீறுமிசைத்திடு கண்டிகை
முந்துகூறெனச் சூதன்மொழிகுவான்.

(இ-ள்) இவ்வண்ணஞ் சூதமுனிவர் சொன்னபோது சௌனகமுனிவர் அகமகிழ்ந்து சூதனை நோக்கி எந்தைபிரானே சிவச்சின்னமாகிய விபூதி

உருத்திராக்ஷத்தின் பெருமையையுஞ் சொல்லியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அதையுஞ் சொல்லுகிறேமென்று சூதமுனிவர்சொல்லத்தொடங்கினார். எ-று. (௪௫)

தீர்த்தச்சருக்கம்
முற்றிற்று.
ஆகச்செய்யுள்—347.

சிவமயம்

பதினொன்றாவது

# விபூதியுருத்திராக்ஷச் சருக்கம்.

வேறு.

சிவன்றிருவடியேயாகுஞ் சிறந்தபஞ்சாக்கரந்தான், சிவன்றிருவடிவிலுண்டாய்ச் சிறந்ததுவிபூதிதானும், சிவன்றிரு நயனந்தன்னிற் செனித்ததாமுருத்திராக்கம், சிவன் றிருவுளமேயல்லாற் செப்புதற்கார்வல்லாரே.

(இ-ள்) பஞ்சாக்ஷரம்சிவபெருமானுடைய திருவடியாகும்விபூதிசிவபெருமானுடைய திருமேனியிலுண்டானதாகும் உருத்திராக்ஷம்சிவபெருமான் நயனத்திலுண்டானதாகும்ஆனதால்இந்தமூன்று பொருளின்பெருமையைச்சொல்லவல்லார்யாவர். எ-று. (

கற்பமேயனுகற்பந்தான் கருதியவுபகற்பந்தான் சிற்பாநீறதாகுஞ்சிறந்திடுமோமந்தன்னில்

அற்புதச்சிவாக்கினிக் கோத்திரத்த வுபாசனத்தின்
பற்பமுநிவேதஞ்செய்யும் பயின்மடப்பள்ளிநீறு.

(இ-ள்) விபூதியில் கற்பமென்றும் அநுகற்பமென்றும் உபகர்ப்பமென்றும மூன்றுவிதமுண்டு அவற்றுள் கற்பமானது சுத்தவெண்மைநிறமுடைய பசுவின் சாணத்தை யுலர்த்திப்புடம்பண்ணியெடுப்பது அநுகற்பமானது காட்டில் மேய்கின்ற பசுக்கள் எருதுகள் போட்டுக்காய்ந்த எருக்களைப்புடம்பண்ணியெடுப்பது உபகற்பமென்பது சிறந்த ஓமத்தில் உண்டாவது அற்புதமான சிவாக்கினிகோத்திரத்திலுண்டான நீறும் அவுபாசனத்திலுண்டான நீறும் சிவநிவேதனஞ் சமைக்கு மடைப்பள்ளியிலுண்டான நீறும். எ-று. (உ)

சாற்றிடுமிவற்றுளீசன் சந்நிதிநீறுங்கூட்டி
யேற்றமந்திரத்தாற் கூறுமியற்றிரி புண்டரதரற்
றேற்றியநெற்றிமார்பு தோளிலாறங்குலந்தான்
ஏற்றிடுமளவுமற்ற விடங்களோரங்குலந்தான்.

(இ-ள்) மேற்சொல்லிய நீற்றுடன் சிவசந்நிதியிலுண்டான நீற்றையுமொன்றாகக் கலந்ததற்கு உபகர்பமென்றுபெயர் இவற்றுள் இசைந்ததை யெடுத்துப் பஞ்சாக்ஷரத்தைத் தியானம்பண்ணித் திரிபுண்டரமாக நெற்றியிலும் மார்பிலும் தோளிலும் ஆறங்குலமும் மற்றவிடங்களில் ஒருவிரல் அளவுந் தரிக்கவேண்டியது. எ-று. (ந)

சிரநெற்றிமார்புநாபி சிறந்திடு முழந்தாடோள்கள்
விரவுற்ற முழங்கை முன்கைமேவு பின்பிடரிகாது
தரமிக்கபதிஞைருகுந் தானத்தினீறுசாற்றல்
பரமுற்றுத்தவளம்பண்ணிற்பாவநாசமதாந்தானே.

(இ-ள்) மேற்சொல்லிய விபூதியைச் சிரம் நெற்றி மார்பு நாசி முழந்தாள் தோள்கள் முழங்கை

முன்கை பின்பிடர் காது இந்தப்பதினொறு தானங்களிலும் மேற்சொன்ன பிரமாணமாகத் தரிக்கவேண்டியது இவ்வாறன்றிப்பரப்பிரமசொரூபமாகச்சரீரமுழுதும் தூளிதம்பண்ணினாற் பாவங்கள் நாசமாகப்பறந்துபோகும். எ-று. (௪)

பஞ்சமா பாதகஞ்செய் பாவியாசாரவீனன், மிஞ்சியவேதவீனன் மிகுமனுட்டானவீனன், றஞ்சிவபூசையோமந் தருமெக்கிய மதனை விட்டோன், அஞ்சொன் மாதாபிதாவை யடாத்தா டனங்கள்செய்தோன்.

(இ-ள்) பஞ்சமாபாதகங்கள் செய்தவன் பாவியானவன் ஆசாரவீனன் வேதபாராயணம் விட்டவன் அநுட்டானம் விட்டவன் ஆத்தும இலாபமாகிய சிவபூசைவிட்டவன் ஓமமெக்கியநதை விட்டவன் அழகிய மாதாபிதாவைச் சிறியடித்தவன். எ-று. ()

குருவுரைய தனைவிட்டோன் கூறுதன்மங்கள் விற்போன், பரவிய வேதம்விற்போன் பாரியில்லதனிலுண்போன்றிருகுகுண்டரைச்சேர்ந்துண்போன், றினஞ்சிரார்த்தம் புசிப்போன், மருவியபந்திபேதமாகவே மகிழ்வுலுண்போன்.

(இ-ள்) குருவாக்கியங்களை விட்டோன் தருமங்களைவிற்றவன் பெரிய வேதத்தை விற்றவன் பிறர் அன்னம் புசிப்பவன் தாழ்ந்த ஜாதியாரோடு கூடியுண்பவன் சிரார்த்த அன்னம் புசிப்பவன் பந்தியில் உணவுபேதம் பண்ணியுண்பவன். எ-று. (௬)

இப்படியடாத பாவமியற்றினொரவர்களெனும்
மெய்ப்படிவத்தினீறும்விளங்குகண்டிகையுமிட்டே
செப்புபஞ்சாக்கரதனைத் தியானிக்கப்பாவமெல்லா
வெப்பெரிகவரும்பஞ்சதாமென விஞ்சமாமே. [ம்

(இ-ள்) மேற்சொல்லிய பாவங்களைச் செய்தவர் யாவராயினும் சரீரத்தில் விபூதியைத்தரித்துக் கண்டிகைபூண்டு பஞ்சாக்ஷரத்தைச் செபித்தால் அந்தப்பாவங்களெல்லாம் அக்கினிபற்றிய பஞ்சைப்போல் நாசமாகும். எ-று. (எ)

திருந்துருத்திராக்கந்தன னாற்செபித்திடிலஞ்
செழுந்தைந் தருங்கதியை யைந்துக்குச் சா
ந்தமூவொன்ப தாகும, பெருந்தனங்கல்வி சே
ரும் பிறங்குநாலெட்டதாகில், அருஞ்சமுசார
ம்பத்தோடஞ்சுச் சாடனம்பன் மூன்றே.

(இ-ள்) திருத்தமாக உருத்திராக்ஷத்தினாலே பஞ்சாக்ஷரத்தைச் செபிக்குமிடத்தில் இருபத்தைந்து மணியினாற் செபித்தால் மோக்ஷத்தைக் கொடுக்கும் இருபத்தேழு மணியினாற் செபித்தால் சாந்த குணத்தைக் கொடுக்கும் முப்பத்திரண்டுமணியாற செபித்தாற் கல்வியுஞ் செல்வமுஞ் சேரும் பதினைந்து மணியினாற் செபித்தாற் சமுசார வாழ்க்கையைக் கொடுக்கும் பதின்மூன்று மணியினிற் செபித்தால் உச்சாடனத்தைக் கொடுக்கும். (

இந்திரதிக்கேயாதி யிசைத்திடில்வசியநோயாம்
உந்திடுமரணந்தீமை நிதியுச்சாடனநீள்சாந்தந்
தந்திடுஞானந்தன்னைத் தருஞ்சிறுவிரலேயாதி
வந்தகாமியமுஞ் சாந்தமருவுவ மாணம் வீடே.

(இ-ள்) இந்திரதிக்கு முதலாக எட்டுத்திக்குஞ் சொல்லுமிடத்துக் கிழக்குமுகமாக இருந்து செபித்தால் வசீகரத்தைக் கொடுக்கும் அக்கினிமூலையாக இருந்து செபித்தால் வியாதியைக்கொடுக்கும் தெற்குமுகமாகச் செபித்தால் தள்ளப்பட்ட மாணத்தைக் கொடுக்கும் நிருதிமூலையாக இருந்துசெபி தால் தீமையைக்கொடுக்கும் மேற்குமுகமாகஇருந்து செபித்தால் திரவியத்தைக் கொடுக்கும் வாயுமூ

லை முகமாகஇருந்து செபித்தால் உச்சாடனத்தைக் கொடுக்கும் வடக்குமுகமாக இருந்துசெபித்தால் நீண்ட சாந்தகுணத்தைக்கொடுக்கும் ஈசானிய மூலை முகமாக இருந்து செபித்தால் மெய்ஞ்ஞானத்தைக் கொடுக்கும் உருத்திராக்ஷத்தை விரல்களிற்றாங்கிச் செபிக்குமிடத்தில சுண்டுவிரலிற்றாங்கிச் செபித்தால காமியமுண்டாகும் அதற்குமேல் விரலிற்றாங்கிச்செபித்தால சாந்தகுணமுண்டாகும் அதற்குமேல் விரலிற்றாங்கிச் செபித்தால் மாரணமுண்டாகும் அதற்குமேல் விரலிற்றாங்கிச் செபித்தால் மோக்ஷமுண்டாகும். எ-று. (௯)

அங்குலியொன்றெட் டாகுமதினுறை புத்திரசீவங்
கங்குபத்தாகுஞ் சங்குகாலொரு நூறதாகும்
பங்கோராயிரம் பிரவாளம் படிகம்பத்தாயிரந்தான்
பொங்குநூறாயிரந்தான் பொருந்தியமுத்துக்காமே.

(இ-ள்) விரலினாற் செபம்பண்ணினால் எட்டுப் பங்குப்பலன் அதிகமாகும் அதனிலும்சொல்லப்பட்ட புத்திரசீவமணியினாற் செபம்பண்ணினாற் பத்துபபங்குப்பலன் அதிகமாகும் சங்குமணியினால் ஜபம்பண்ணினால அதிலும் நூறுபங்குட்பலன் அதிகமாகும் பிரவாள மணியினாற் செபம்பண்ணினால அதிலும் ஆயிரம்பங்குப்பலன் அதிகமாகும் படிகமணியினாற் செபம்பண்ணினால் அதிலும் பதினாயிரம்பங்குப்பலன் அதிகமாகும் முத்துமணியினாற் செபம்பண்ணினால் அதிலும் நூறாயிரம்பங்குப்பலன் அதிகமாகும். எ-று. (௰)

பதுமாமணி தனக்குப் பத்துநூறாயிரந்தான், பொதிதரு பொன்மணிக்குப் பொருந்திடுங்கோடிதானே, குறைதருகுசைமுடிச்சுக்கோ

டி ரண்டஞ்சேயாகும், அதிகருத்திராக்கமாகி
லளவில்லைக் கணக்குந்தானே.

(இ-ள்) தாமரைமணியாற் செபம்பண்ணினால் அதிலும் பத்துநூறுயிரம் பங்குப்பலன் அதிகமாகும் பொன்மணியினாற் செபம்பண்ணினால் அதிலும் கோடிபங்குப்பலன் அதிகமாகும் முடியிட்ட தருப்பைப்புல்லினாற் செபம்பண்ணினால் அதிலும் பத்துக்கோடி பங்குப்பலன் அதிகமாகும் உருத்திராக்ஷமணியினாற் செபம்பண்ணினால் இவ்வளவென்னுங் கணக்கில்லை. எ-று. (கக)

தெக்கணமூர்த்திந்தேவர் திருந்துசந்நிதிமுன்மேவி, தக்கவாயிரத்தோ டெட்டுத்தகு நூற்றெட்டிருபத்தெட்டு, மிக்கபஞ்சாக்கரத்தை மேன்மையதாச் செபிப்போர், புக்கான்கைலை தன்னிற் பொருந்தி வாழ்ந்திருப்பர் தாமே.

(இ-ள்) தக்ஷிணமூர்த்தியின் திருத்தமான சந்நிதி முன்னிருந்து ஆயிரத்தெட்டாயினும் நூற்றெட்டாயினும் இருபத்தெட்டாயினும் பஞ்சாக்ஷரசெபம் பண்ணினால் அவர்கள் சிவபெருமான் எழுந்தருளிய கைலாயத்தில் நிலைபெற்று வாழ்ந்திருப்பார்கள். எ-று. (கஉ)

தினமனத் தியானஞ்செய்வோர் சேர்வர்சாயுச்சியந்தான், எனதெனவவர்குலத்தோர் யாவருங் கையிலைசேர்வார், தனமிகவேண்டினோர்தான் றனட்டிய குபேரனாவார், சனமகிழ்ந்திருந்தல்வேண்டிற் றமருமிந்திரனாவார்.

(இ-ள்) பஞ்சாக்ஷரத்தை எந்தக்காலமும் மனதியானஞ் செய்தவர்கள் சாயுச்சியபதவியைச் சேர்வார்கள் அவர்கள் குலத்திற் பிறந்தவர்கள் யாவரும் கையிலாயமடைவார்கள் திரவியத்தைத் விரும்பின

வர்கள் குபேரனைப்போல் வாழ்ந்திருப்பார்கள் பந்து சனங்களை மிக விரும்பினவர்கள் இந்திரனைப் போல் வாழ்ந்திருப்பார்கள். எ-று. (௧௩)

மணிமந்திர மவுடதந்தான்வரும்பிணிநீக்கல் போல,அணிசென்மமென்னுநோயையகற்றிடு மிந்தமூன்றும், மணிபுருத்திராக்கமாகும ந்திரமஞ்செழுத்தாந், தணியவுடதந்தானுகத் தரு ந்திருநீறுதானே.

(இ-ள்) வருகின்ற வியாதிகளை மணிமந்திர ஔடதத்தால் மாற்றுதல்போல் அடைந்த செனனமென்னும் வியாதியை உருத்திராக்ஷமணியினாலும்பஞ்சாக்ஷர மந்திரத்தாலும் விபூதி ஔடதத்தாலும்நீக்கல்வேண்டும். எ.று. (௧௪)

இவற்றினன் மகிமைதன்னை யாவரோயறிந்து சொல்வார், தவமுத்தி பலித்தோர்க்கெல்லாஞ் சார்ந்திடுமிந்த மூன்றும், அவமுற்று நரகில் வீழ்வார்க் கன்னியமாகத்தோன்றும், சிவமுற்று முணர்வில்லாதார் தெரித்திடாரெவர்க்குந்தானே.

(இ-ள்) மேற்சொல்லிய மூன்றுபொருளின் மகிமையைச் சொல்லவல்லார் யாவர்முன் தவஞ்செய்து முத்தியையடைந்தவர்கள் இந்த மூன்றையுஞ் சாதனமாகக் கொண்டடைந்ததேயன்றி வேறில்லை பாவங்களைச் செய்து நரகில் விழப்பட்டவர்களுக்கு இந்த மூன்றும் அன்னியமாகத் தோற்றப்படும் அறிவில்லாதவர்கள் இந்த மூன்றையுந் தரித்திருந்தும் அவற்றின் பெருமையைப் பிறர்க்குத் தெரிவிக்க மாட்டார்கள். எ-று. (௧௫)

சித்திரைப்பூர்வபக்கத் திருந்துமட் டமிர்தினத்திற் சத்தியபிரமதீர்த்தந் தனின்மூழ்கி யுபவாசித்துச்

சித்தநோர்பிதக்கணங்கள் செய்தஞ்சுதெண்டநிட்டா
பத்திசேர்சாம்பிராச்சிய பதியாகி வாழ்வர்தாமே.[ற்

(இ-ள்) சித்திரைமாதப் பூர்வபக்ஷத்து அட்டமித்திதியில் சத்தியமாகிய பிரமதீர்த்தத்தில் முழுகி உபவாசஞ்செய்து ஒருமித்த மனதுடன் பிரதக்ஷணஞ்செய்து ஐந்துதீர்க்கதெண்டம் பண்ணினுல் சாம்பிராச்சியபதியாகி வாழ்வார்கள். எ-று. (௧௬)

தனுர்மாதம் பிரமதீர்த்தந்தனின்முழ்கி யீச
ன்மேனிக் கினிதாகு மெண்ணெய்காப்புற்றே
ழைந்து மூன்றோர் நாளான், கனிவாச்சாந்திற்
கோடி குலத்துடன் கயிலாசத்தில், இனிதான
சிவபதத்தி லிருந்துவாழ்ந்திடுவர் மாதோ.

(இ-ள்) மார்கழிமாதம் பிரமதீர்த்தத்தில் முழுகிச் சிவபெருமான் திருமேனிக்கினிதான எண்ணெய்க்காப்பு ஏழு ஐந்து மூன்று ஒருநாள் சாத்தினுல் அப்படிப்பட்டவர்கள் தங்கள் குல கோடிகளுடன் கைலாசத்தில் வாழ்ந்திருப்பார்கள். எ-று. (௧௭)

அந்தமாதத்தில்வந்த வாதிரைநன்றுடன்னி
ற், சுந்தரத்தாண்டவஞ்செய் சுவாமிக்குப்பூ
சைசெய்து, பந்தியாமிழைசேர் வெள்ளைப் ப
ரிவட்டஞ் சுகந்தஞ்சாத்திச், சிந்தைநயால்வண
ங்கிவெற்பின்றிருமகளையும் போற்றில்.

(இ-ள்.) மேற்கூறிய மார்கழிமாதத்தில் வரப்பட்ட திருவாதிரை நாளில் அழகாக ஆனந்தந்தாண்டவஞ் செய்தருளுகின்ற நடராஜருக்குப் பூசை செய்து வரிசையாக இழைசேர்ந்த வெண்பரிவட்டமும் சுகந்த மாலைகளுந் தரித்து வணங்கிப் பின் உமாதேவியாரையும் வணங்கினுல். எ-று. (௧௮)

அவர்சிவபத்தியுண்டா யனேக விராச்சியங்
களாண்டு, தவமனேகங் காலங்கடான் செய்த

பலன்கள் பெற்றே, இவரவனொனும லெல்லா
ப பிதிர்க்களோடினிதேயாக, நவமணிச் சிவ
லோகத்தி னண்ணிநற் கதியைச் சேர்வார்.

(இ-ள்) அப்படி வணங்கினவர் சிவபத்தியுண்டாகி அனேக ராச்சியங்களாண்டு பலநாட்செய்தத வப்பலனைப்பெற்று இவரவனென்னும் பேதமில்லாமல் தங்கள் பிதிரர்களோடு இன்பமாக அழகிய சிவலோகத்தை யடைந்து நல்லகதியைச் சேர்வார்கள்.

மாசியாந்திங்கடன்னில் வருஞ்சிவநிசியந்நாளில்
ஆசிலாப்பிரமதீர்த்த மதின்மூழ்கி யுபவாசித்து
வீசியசுகந்தபுட்ப மெய்களபங் கற்பூரம்
வாசமாயெம்மட்டேனு மணியீசர் தமக்குச் சாற்றி

(இ-ள்) மாசிமாதஞ் சிவராத்திரி யன்றைக்குக் குற்றமில்லாத பிரமதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி யுபவாசஞ்செய்து வாசநிறைந்த புஷ்பங்களும் களபகற்பூரங்களும் வேண்டிய அளவு துய்யமாமணியாருக்குச் சாத்தி. எ-று. (உ௰)

பாயசநிவேதனந்தான் பண்ணியே யரிச்சித்தேத்தி
ஆயசாமங்களுனு மரிச்சித்து மண்டபத்தின்
மேயகீதங்களாடன்மிகச்செய்வித்தேயிருந்து [டே
தூயவிப்புராணந்தன்னைச்சொற்பெறமகிழ்ந்துகேட்

(இ-ள்) பாலன்ன நிவேதனஞ்செய்து அரிச்சித்துவணங்கிப் பின்னுலுசாமமுந் அவ்வாறே செய்து நிருத்தனமண்டபத்திருந்துப்பாடல் ஆடல்செய்வித்து அவ்விடத்திலிருந்து இந்தப்புராணத்தைச் சுத்தமாகப் படிக்கக் கேட்டு. எ-று. (உக)

மற்றைநாடானுமுன்போன் மகிழ்வுடன் வ
ஞ்செய் தேத்திற், குற்றமில்லாமற்கோடி
குலத்துடன் கைலைசேர்வார்' ஒற்றுமில்வாறு
செய்யா துபவாசமிருந்து போற்றிற், சுற்ற
மாங்குடும்பத்தோடுசுகத்துடன்கைலைசேர்வார் (

(இ-ள்) மறுநாள் முதனாட்செய்ததுபோல் அன்புடன் வலஞ்செய்தேத்திறற் கோடி குலத்தாருடன் கைலையை யடைவார்கள் இப்படிச் செய்யச் சத்தியில்லாதவர்கள் உபவாசமிருந்து மறுநாள் துய்யமாமணியாரை வணங்கினால் அவர்கள் சுற்றத்தாரோடு கைலாயமடைவார்கள். எ-று. (௨௨)

பானுவஸ்தமனமென்னப் பற்றியமூன்றே
முக்காற், போனபின் மூன்றேமுக்காற் பொ
ருந்துமோர் சாமமாகும். ஆனதுபிரதோடந்
தான துதிரியோ தசத்தின், ஈனமிறவத்தோர்
க்கெய்து மீசனைப்போற்றுஞ் சிந்தை.

(இ-ள்) சூரிய அஸ்தமனத்திற்கு முன் மூன்றேமுக்கால்நாழிகையும் அஸ்தமனத்திற்குப் பின் மூன்றேமுக்கால் நாழிகையுங்கூடிய ஒருசாமம் பிரதோஷமாகும் அந்தவேளையில் மும்மலப்பற்றறுத்த குற்றமற்ற தவத்தோர்கட்கே சிவபெருமானைப போற்றுஞ் சிந்தையெய்தும. எ-று. (௨௩)

நந்திதண்டீசநந்தி நலத்தகோமுகைமேற்பாகம்
பிந்தவுநந்திசண்டன் பிறங்குகோமுகைகீழ்பாகம்
முந்தியசண்டனந்தி முதுகின்பின் நின்றுபோற்றல்
சுந்தரப்பிதக்கணந்தான் சோமசூத்திரமதாமே.

(இ-ள்) இந்தப் பிரதோஷகாலத்தில் நந்திகேசுரனிடத்தினின்று தெரிசனைபண்ணிப்பின் தண்டிகேசுரனிடத்தில் வந்து தெரிசனைபண்ணிப்பின் னந்திகேசுரனிடத்தில வந்து தெரிசனைபண்ணிப்பின் னன்மையாகிய கோமுகைக்கு மேல்பாரிசத்தில் வந்து நின்று தெரிசனைபண்ணிப்பின் னந்திகேசுரனிடத்தில் வந்து தெரிசனைபண்ணிப்பின் தண்டிகேசுரனிடத்தில்வந்து தெரிசனை பண்ணிப்பின் பிரகாசி

க்கின்ற கோமுகைக்குக் கீழ்பாரிசத்தில் வந்து நின்று தெரிசனைபண்ணிப்பின் தண்டிகேசானிடத்தில் வந்து தெரிசனைபண்ணிப்பின் னந்திகேசுரன் முதுகின் புறத்தில் வந்து நின்று தெரிசனைபண்ணிப் பிரதக்ஷணஞ்செய்வது சோமசூத்திரவிதிப் பிரதக்ஷணமாகும். எ-று (உச)

இப்படிப் பிரதோடத்தி லியாவர்தாம்பணிந்தக்காலும்' மெய்ப்படிவமதாஞ்சென்மம்வேண்டுமென்றாலு மெய்தார், செப்பியசென்மமாகுமனேக செனமத்தின் பாவம், ஒப்புடன் கழிந்துநீங்கி யுயர்கதியடைவர்தாமே.

(இ-ள்) இவ்வண்ணமாகயாவராயினும் பிரதோஷகாலத்திற் பணிவார்களாயின் அவர்கள் அழகிய சென்மத்தை விரும்பினாலும் பிறவியை யடையமாட்டார்கள் இந்தச்சென்மத்திலும் நீங்கிய அனேகம் சென்மத்திலும் செய்தபாவங்களெல்லா நீங்கி யுயர்வான கதியை யடைவார்கள். எ-று. (உரு)

இன்னமுமனந்தமாகு மிரத்தினபுரியின்மேன்மை, நன்னெறியனந்தனாலு நாவினாற்கூறொணாதால்' மின்னிடையுமையாள் கேள்வன் விரும்பியிவ் விடத்தின்மேவிச்' சந்நிதானமதாயார்க்குஞ் சர்க்கதிகொடுக்குந்தானே.

(இ-ள்) இந்த இரத்தினபுரியின் மகிமை யின்னமனேகமாகும் அதனைச்சொல்ல ஆயிரநாவினையுடைய ஆதிசேடனாலும் முடியாது மின்போன்ற இடையையுடைய உமாதேவி நாயகனாகிய பரமசிவன் விரும்பி இவ்விடத்திற் பொருந்திச் சந்நிதியாக யாவர்க்கு நல்லகதியைக் கொடுத்தருளுவார்.எ-று.(உசு)

இந்தமற்புராணந்தன்னி லியம்பியபொருள்
கள் யாவும், புந்தியா லுண்மையென்றே பொ
ருந்தினோர் செல்வம்பெற்றுச், சந்தமார்க்கண்
டன்போலத் தங்குவர் கைலைமீதில், நிந்தனை
செய்தோர்யாக நேர்ந்த தக்கனைப்போலாவார்.

(இ-ள்) இந்தப்புராணத்திற் சொல்லிய பொரு
ள்களையெல்லாம்புத்தியி லுண்மையென்று கொண்ட
வர்கள் மிக்கசெல்வமுற்று மார்க்கண்டனைப்போல
க் கயிலாயத்திற் றங்குவார்கள் நிந்தனைசெய்தவர்க
ள் கொடிய யாகஞ்செய்த தக்கனடைந்த கதியை
யடைவார்கள். எ-று. (௨௭)

இயம்பிரத்தின புரிச்சிறொழில்பெறு மகிமை
தன்னை, நயம்பெறக் கற்போர் கேட்போர்
நன்மையா லெழுதிச் சேர்ப்போர், செயம்புரி
பூசைசெய்வோர் தெரிசிப்போர் பரிசிப்போ
ரும், பயம்படுபிறப்பைநீங்கிக் கயிலையாம் ப
தியில் வாழ்வார்.

(இ-ள்) சொல்லிய இந்த இரத்தினபுரியின் அ
ழகிய மகிமையை நயமபெறக் கற்றவர்களும் கே
ட்டவர்களும் நன்மைபெற எழுதிவைத்தவர்களு
ம பூசைசெய்தவர்களும் தெரிசித்தவர்களும் பரிசி
த்தவர்களும் அச்சத்தை விளைவிக்கின்ற பிறப்பி
னின்று நீங்கிக் கயிலாயத்தில் வாழ்வார்கள். எ-று.

ஆகுமென்றிவ்வாறேதா னருளினற் சூதன்கூற
வாகுடன்செவுனகன்முன்மனமிகமகிழ்ந்துபோற்றி
ஏகநாகனுமேன்மையீசனார் பெருமைக்காதை [ன்
யூகமாயுணைப் போவியாவருனைப் பவனொமகிழ்ந்தா

(இ-ள்) இத்தன்மையாகுமென்று மிக்க கிரு
பையினாற் சூதமுனிவர் சொன்னமாத்திரத்தில்

சௌனகமுனிவர் மனமகிழ்ந்து போற்றிச் சுவாமி ஏகநாயகனாகிய மேன்மையையுடைய சிவபெருமானது பெருமைதங்கிய கதையைத் தங்களைப்போல் யூகமாகச் சொல்லவல்லார் யாவரென்று மனமகிழ்ந்தார். எ-று, (௨௬)

மங்கையோர்பாகர்துய்ய மாமணிச்சிவனார்வாழி [ழி
பொங்குவிஞ்ஞையர்கள்வாழி புகலுநற்சைவம்வா
துங்கவெண்ணீறுபஞ்சாக் கரத்துடன்றுலங்கிவாழி
திங்கண்மும்மாரிபெய்துசெழித்துலகெங்கும்வாழி

(இ-ள்) உமையையோர் பாகராகிய துய்யமாமணிச் சிவபெருமான் வாழ்க விளங்கிய வித்துவான்கள் வாழ்க யாவராலுமெடுத்துரைக்கின்ற சைவம் வாழ்க மேன்மையையுடைய வெண்ணீறு பஞ்சாக்ஷரத்துடன் றுலங்கிவாழ்க மாதமும்மாரிபொழிந்து உலகமெங்குஞ் செழித்துவாழ்க. எ-று. (௩௰)

விபூதியுருத்திராக்ஷச் சருக்கம
முற்றிற்று.

---

ஆகச்சருக்கம் 11க்கு, பாயிரங்காப்புள்படச் செய்யுள்--377.

இரத்தினபுரிப்புராண மூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.